உ

# கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு



ஆக்கியோன்:- பண்டிதர் செ. சிவப்பிரக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78 L.-2-63—24826/5,000.
2—29.3.
6019

## REFERENCE LIBRARY

**A complete list of Rules and Regulations can be seen on application**

*(Extract from Rules and Regulations)*

The Reference Library shall be available to literate members of the public resident in Colombo and over the age of 14 years and shall be open daily from 8 a.m. to 8 p.m. except on public holidays and any other day or days which the Library Authority may decide.

Persons desirous of using the Reference Library must on each occasion, before entering, inform the Library Assistant and obtain his/her permission and on such permission being granted sign the Reference Library Readers' Signature Book in which he/she shall enter his/her full name, age, occupation and address (both private and official) and such signature will be taken and considered to signify assent to these Rules and Regulations.

All books consulted, including those referred to in the next succeeding rule, must be returned to the Library Assistant.

Any book in the Lending Library, except works of Fiction, may be obtained for use in the Reference Library on application to the Library Assistant, but it must be given up if and when required for lending out.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

617

To the Reader of this Book

PLEASE KEEP THIS BOOK CLEAN

DO NOT MAKE MARKS ON IT.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# கோயில்

அல்லது

# சிதம்பரச் சிறப்பு.

★


ஆக்கியோன் :

பண்டிதர் : செ. சிவப்பிரகாசம்

ஆசிரியர்,

முத்துத்தம்பி வித்தியாசாலை,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.



அச்சுப் பதிவு :

சுதந்திரநாத அச்சகம்,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.


உரிமை ஆக்கியோனுக்கே.] 1965. [விலை ரூபா 2-50.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3K

CLASS No. 2 — 294.5

ACC. No. 6019.

RE-BD

RE-BD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரைகள்.

யாழ்ப்பாணம்

சைவாசிரிய கலாசாலையில்

தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருந்த,

பண்டிதமணி

## உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

எழுதியது.

---

திருச்சிற்றம்பலம் என வழங்குகின்ற சிதம்பரத்துக்குக் கோயில் என்பது சிறப்பாக அமைந்ததொரு திருநாமம்.

இந்தப் பூமியிலே முதன்முதல் உண்டான கோயில் சிதம்பரமேயாம்.

சந்தான குரவருள் ஒருவரான உமாபதி சிவாசாரியர் சிதம்பரத்துக்கு ஒரு புராணம் செய்திருக்கின்றார். அந்தப் புராணத்துக்குக் கோயிற் புராணம் என்பது பெயர். கோயில் — சிதம்பரம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கோயிற் புராணத்துக்கு ஓர் உரையுஞ் செய்து புராணத்தை வசனப்படுத்தியுமிருக்கின்றார்கள். வசனத்துக்குச் சிதம்பர மான்மியம் என்று பெயர்.

வசனத்தை முதலிற் படித்து, அதன்பின் கோயிற் புராண உரை படிக்கத்தக்கது. இரண்டும் அத்தியாவசியகம் சைவசமயிகள் படிக்கவேண்டியவை. இவற்றைப் பயன்படுத்தும் முகமாக, இவற்றின் சார்பாக ஒரு வசன நூலைக் " கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு " எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரிட்டு வழங்கியிருக்கின்றார் பண்டிதர்: திரு. செ. சிவப்பிரகாசம் அவர்கள்.

நீண்ட விஷயங்களை வகுத்து, வகுப்பு ஒவ்வொன்றுக்குந் தலையங்கமிட்டுச் சிறுவரும் எளிதிற் பயிலுதற்கு வழி செய்கின்றது பண்டிதர் இயற்றிய இவ் வசன நூல்.

எங்குமாய கடவுளுக்குக் கோயில் வேண்டுமா? கோயில் எப்படி உண்டாவது? ஞானிகளுங் கோயில் வழிபாடு செய்யவேண்டுமா? கோயில் வழிபாடு செய்யுங் கூட்டம் எவ்வாறு பெருகவேண்டும்? கோயிற் திருப்பணியின் இரகசியம் என்ன? ஆன்மார்த்த பரார்த்த பூசைகளின் தொடர்பு யாது?

என்றின்னோரன்னவாறு விளாவும் வினாக்களை விடுவிக்கத்தக்க வகையில் இந் நூல் அமைந்திருக்கின்றது. இஃது இந் நூலின் இன்றியமையாச் சிறப்பு.

கோயில் முதன்முதல் உண்டாதற்கு மூலகாரணராய் இருந்தவர் வியாக்கிரபாத முனிவர், அவருடைய தந்தையார் மத்தியந்தின முனிவர். வியாக்கிரபாதர் குழந்தையாய்த் தந்தையிடங் கல்வி பயிலும்போது வினவும் முகமாகக் கோயில் என்னும் இந்நூல் ஆரம்பமாகின்றது. இவ் வாரம்பமும் குழந்தை முனிவருக்கு வியாக்கிரபாதர் என்ற பெயர் உண்டாய விபரமும் குழந்தைகளை வசீகரித்து விஷயத்தில் ஈடுபடச் செய்பவை.

பேரறிஞர்களுக்கு உரிய அருமந்த இந்த நூலைச் சிறுவர்களுக் குய்க்கும்படி ஆக்கி உதவிய பண்டிதர் அவர்களுக்கு ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவருள் பெருகுவதாக

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. } சி. கணபதிப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கநூற் செல்வர், பண்டிதமணி

# உயர்திரு. சு. அருளம்பலவனர் அவர்கள்

எழுதியது.

பூவுலகின் கண்ணுள்ள ஆன்மாக்களாகிய நாம் உய்யும் வண்ணம், இறைவன் உருவத்திருமேனி தாங்கி, இவ்வுலகில் எழுந்தருளியிருக்கும் சிவஸ்தலங்கள் பலவற்றுள்ளும், சிதம்பரம் மிகச் சிறந்தது. இத் தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினலும் சிறந்து விளங்குகின்றது. சமயாசாரியர்களாற் பாடப்பெற்றதும், ஆகாயத் தலமாகத் திகழ்வதும் இச் சிதம்பரமேயாகும். இது உலகிற்கு இதயத்தானமாகவும் விளங்குகின்றது. இத் தலத்தினைத் திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம், பூலோக கயிலாயம், மன்று, பொது என்னும் பெயர்களால் அருள் நூல்கள் போற்றி வருகின்றன. "கோயில்" என்பதும் சிதம்பரத்திற்கு அமைந்த தொரு திருப் பெயராகும்.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்த கோயிற் புராணம் சிதம்பரத்தைப்பற்றிக் கூறும் புராணமாகும். இக் கோயிற் புராணப் பொருளை யாவரும் எளிதில் அறியத்தக்க முறையிலே, "கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு" என்னும் சிறந்தொரு வசன நூலைப் பண்டிதர், திரு. செ. சிவப்பிரகாசம் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந் நூல், வியாக்கிரபாத மகாமுனிவர், பதஞ்சலி மகாமுனிவர், நடராசர் திரு நிருத்தம், இரணியவன்மர் திருவிழா எடுத்தமை என்னும் பகுதிகளாகப் பகுத்து எழுதப்பட்டுள்ளது.

பண்டிதர் அவர்களின் நன்முயற்சி மிகவும் பாராட்டற்பாலது!

இவர்கள் இத்தகைய சிறந்த பல நூல்களை மேலும் மேலும் ஆக்கி வெளியிடுவதற்குத் தில்லைக் கூத்தப்பிரான் திருவருள் புரிவாராக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

K. KAILASANATHA KURUKKAL,
*M. A.* (*Ceylon*) *P. H. D.* (*Poona*).
Lecturer in Sanskrit,
University of Ceylon.

No. 3. North End
University Park,
Peradeniya
(Ceylon)

பண்டிதர், திரு. செ. சிவப்பிரகாசம் அவர்கள் பயன் தரும் நூல்கள் பலவற்றை இயற்றி வருகின்றார்கள்.

இவர்களுக்குக் கவிதை பாடுந் திறமை இறைவன் அருளால் இயல்பாகவே மிகுந்து விளங்குகின்றது. இதற்குத் "தில்லையந்தாதி", "பராசக்தி மாலை" என்னும் இவர் இயற்றிய செய்யுள் நூல்கள் சான்றாகும்.

உரை நடையையும் அதே போன்று அழகு பொலியும் வண்ணம் அமைக்கும் ஆற்றல் இவருக்கு உண்டு என்பதை, "கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு" என்னும் இவ் வசன நூல் சுட்டிக் காட்டுகின்றது. இந்நூல் கோயில் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சிதம்பரத் திருத்தலத்தின் பெருமையைக் கூறுகின்றது. வியாக்கிரபாத மகாமுனிவர், பதஞ்சலி மகாமுனிவர், நடராசர் திருநிருத்தம், இரணியவன்மர், திருவிழா எடுத்தமை முதலிய ஐந்து கதைகள் சிதம்பரத் திருத்தலத்தின் சிறப்பினைத் தருவனவாய் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

திருக்கோயில் வழிபாடு சைவர்களுக்கு இன்றியமையாதது. கோயில் வழிபாட்டில் தினந்தோறும் ஈடுபடும் நம்மனோர் கோயில்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்கும் கோயிலின் சிறப்பியல்புகளை முதலில் அறிந்து கொள்ளுதல் வேண்டுமன்றோ! அவ்வறிவைத் தருகிறது இவ்வரிய வசன நூல்.

சைவசமயிகள் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய இந் நூலைச் சிறுவர்களும் படித்து விளங்கக் கூடிய தெள்ளியநடையில் அமைத்து உதவிய பண்டிதர் அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

இது போன்று சைவ அறிவினை வளர்க்க உதவும் பல நூல்களைச் சிறுவர்களுக்கும் பயன்படும் வண்ணம் ஆக்கி உதவத் தி[illegible] பாலிக்கும் வண்ணம் ஸ்ரீ நடராஜப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டு அரசாங்கத்
தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்துக்
கனிஷ்ட அதிகாரி,
(Junior Superintendent)
வித்துவான்

# உயர்திரு. மு. சண்முகப்பிள்ளை அவர்கள்

எழுதியது.

---

சைவப் பெருமக்கள் அடைமொழி எதுவும் இன்றிக் "கோயில்" எனப் பாராட்டிப் போற்றுவது தில்லைச் சிதம்பரமே என்பது யாவரும் அறிந்தது. தில்லைப் பதியில் சென்று கூத்தப் பிரானைத் தரிசித்தார்க்குச் சனன மரணம் இல்லையாம். 'தில்லை' என்று சொன்ன மாத்திரத்திலேயே பிறவிப் பிணி ஒழியும் என்கிறதாம் வேதம்.

"தில்லை தில்லை என்றால் பிறவி
இல்லை இல்லை என்று மறை மொழியும்"

"தில்லையம்பலத் தலமொன் றிருக்குதாம் – அதைக் கண்ட பேர்க்கு ஜனன மரணப் பிணியைக் கருக்குதாம்!"

"உயர்ந்த சிகரக் கும்பந் தெரியுதாம் — அதைப் பார்த்தவர்க்கு உள்ளங் குளிரக் கருணை புரியுதாம்!"

என நந்தன் சரிதக் கீர்த்தனையில் கோபாலகிருஷ்ண பாரதியார் மேற்குறித்த கருத்தை மிக எளிமையாக இசையுடன் புலப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய புண்ணியப் பதியின் புராணப் பெருமை களைக் "கோயிற் புராணம்", "சிதம்பர புராணம்", "புலியூர்ப் புராணம்" முதலிய தல புராணங்கள் பாடல்களிலே தந்துள்ளன. பாடல்களைப் படித்துப் பொருளுணர்ந்து அனுபவித்தல் கற்றோர்க்கே இயலுவ தாகும். ஓரளவு கல்வி பயின்றோரும் இளைஞரும் முதியோரும் இன்பமாகப் படித்துப் பத்தியில் ஈடுபடுவதற்குச் சாதக மான எளிய இனிய உரைநடை நூலாகக் "கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு" என்னும் நூலைப் பண்டிதர், திருவாளர், செ. சிவப்பிரகாசம் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். இவர்கள் எழுதியுள்ள "கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு" ஒரு நல்ல கைவிளக்கு. படிப்பார்க்குச் சிறிதுஞ் சலிப்புத் தட்டாம லும் ஆவல் மீதூரும்படியும் இந் நூலை ஐந்து கதைகளாக அமைத்துள்ளார்கள். கதைப் போக்கை எளிதில் தெரிந்து கொள்வதற்காக அங்கங்கே சிறு சிறு தலைப்புக்கள் கொடுத்து மேலும் எளிமைப் படுத்தியுள்ளார்கள். சிறுவர் சிறுமியரும் படிக்கும் வகையில் எளிய பதங்களைக் கொண்டு இனிய செந்தமிழ் நடையில் எழுதியுள் ளார்கள். இது சைவமும் தமிழும் தழைக்கச் செய்யும் ஒரு சீரிய தொண்டு. இத்தகைய தொண்டினை மேலுந் தழைக்கச் செய்து நமது பழம் பெருமைகளை இன்றைய இளைஞர் உலகமும் அறிய வழி வகுப்பார்களாக.

சென்ற நூற்றாண்டில் புராணப் பிரசங்கம் புரிதலையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டோர் மிகுதியாக வாழ்ந்தனர். மக்களும், விழாக் காலங்களிலும் இல்லங் களில் நடைபெறும் நன்மை தின்மைகளிலும் பௌராணிகர் களைக் கொண்டு புராணம் வாசிக்கச் செய்து, பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தையுடன் கேட்டனர். பௌராணிகர்களும், இக் காலத்திய பௌராணிகப் பேச்சாளர் போல ஊர்க் கதைகளிலும் உலக விவகாரங்களிலும் மிகுதியாக உழலாமல், இறையுணர்வு மீதூரும் வண்ணம் நியம நிஷ்டையோடு பிரவசனம் செய்து வந்தனர். இதனல் பத்திப் பயிரும் தளிர்விட்டுக் கிளைத்துச் செழித்தது.

பத்திப் பயிர் வளரப் புராணங்கள் உதவி வந்தன என்பதில் சிறிதும் ஐயங்கொள்ள இடமில்லை. திருக் கோயில்களில் புராணம் சொல்வதற் கென்றே தனி மண்டபங்களும் முன்பு அமைக்கப்பட்டிருந்தன. குலோத்துங்க சோழன் காலத்திலேயே இவ்வகை மண்டபம் அமைத்த செய்தி ஒரு சாஸனத்தால் தெரிய வருகிறது. குலோத்துங்க சோழனுடைய ஆட்சி ஆண்டு 46-ல் கண்டன் மாதவன் என்பான் தில்லைப் பதியிலே "புராண மாளிகை" ஒன்று அமைத்தான் என நீடூர்ச் சாஸனத்தில் வரும் (EP-Ind-Vol. XVIII P. 64-69) ஒரு பாடல் தெரிவிக்கின்றது. அது வருமாறு:—

"[ஆ]ரிய உலகம் அனைத்தையும் குடைக்கீழ்
ஆக்கிய குலோத்துங்க சோழற்(கு)
ஆண்டு ஒரு நாற்பத் தாறிடைத் தில்லை
அம்பலத்தே வட கீழ்பால்
போரியல் மதத்துச் சொன்னவா றறிவார்
கோயிலும், புராண நூல் விரிக்கும்
புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப்
பொருப்பினன் விருப்புறச் செய்தோன்"
(பெருந்தொகை, 1218.)

என வரும் சாஸனப் பாடற் பகுதியால் புராண நூல் விரித்து உரைத்தற்கு எனத் தனி மாளிகை அமைக்கும் வழக்கம் பழமையான தொன்று என்பதும் போதரும்.

யாழ்ப்பாணச் சைவப் பெருமக்கள் இயல்பாகவே சிவபுராணங்களை கேட்பதோடு சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் பக்கல் மிகுந்த பத்தி செலுத்துபவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ரௌத்திரிவருஷம் வைகாசிமாதம் 21-ஆம் திகதி சென்னபட்டினத்திலிருந்து வெளியிட்ட விக்கியாபனம் ஒன்றில்,

'வருஷந்தோறும் திருக்கோயில்களிலே பெரும் பொருள் செலவிட்டுச் சிவபுராணங்களை நியமமாகக் கேட்போர்களாயும் சிதம்பர சபாநாதர் மேல் மிக்க பக்தி உடையவர்களாயும் உள்ள நமது யாழ்ப்பாணத்தார்களும், இந்தச் சிவ புண்ணியத்தின் பெருமையை அறிந்து, இதற்கு உதவி செய்வார்களாயின், இது எவ்வளவு தழைத்தோங்கும்!'

(ஆறுமுகநாவலர் சரித்திரம், பக்கம் — 42.)

என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் கூறியாங்கு பண்டிதர், திருவாளர், செ. சிவப்பிரகாசம் அவர்களுடைய சிவபுண்ணியச் செயலுக்கு ஆதரவளித்து, மேலும் இத்தகைய நல் தொண்டு ஆற்றுதற்கு ஊக்கம் தருவார்களாக! நமது பண்டிதர் அவர்களும் முன்னோர் சென்ற நெறிநின்று காலத்துக்கேற்ற வகையில் சைவ நன்னெறியும் சால்புடைச் செந்தமிழுந் தழைக்கப் பணி புரிவார்களாக!

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி,
அற்புதக் கோலம் நீடி, அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி, போற்றி!

(திருத்தொண்டர் புராணம். தில்லைவாழ் 2.)

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்,
தமிழ்நாட்டு அரசாங்கம்,
சென்னை. மு. சண்முகப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# முகவுரை.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

—திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத இயல்புடையார் தொண்டராங் குணமிக்கார்.

—பெரிய புராணம்.

பூமியின் கண்ணே புண்ணிய பாவ கருமங்களை அனுபவிக்குஞ் சரீரங்களும் உண்டு; சுவர்க்க நரகங்களிலே சுக துக்கமாகிய பயன்களை அனுபவிக்குஞ் சரீரங்களும் உள. இவ்வகைப்பட்ட அனேக உடல்கள் நீங்கலாக அழகிய திருத் தில்லையில் உள்ள சுத்தமயமான கனகசபையின் கண்ணே திருநடனமிடும், கால வேறுபாடற்ற ஒரே தன்மையுடைய திரு நிருத்தத்தைத் தரிசிக்கும் பொருட்டு, அளவற்ற தவப் பயனாலே கிடைத்த இம் மனிதச் சரீரமே மேலான சரீரம். இச் சரீரத்துடன் பூமியில் வாழ்ந்து, அருள் சிறந்து நிறையும் திரு நிருத்தஞ் செய்தருளும் சிவபெருமானுடைய சிவபதத்திற் சென்றவர்கள் மீண்டு வந்து சிதம்பரத்திற் பிறந்தாலும், மேலான ஒழியாத பேரின்பத்தைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத் தில்லையின்கண்ணுள்ள திருச்சிற்றம் பலத்தினில் இறைவன் நிகழ்த்தும் நடனம், நாதாந்த நடனம் அல்லது ஆனந்த நடனம் எனப்படும். இத் திருக்கூத்தின் விரிவைச் சிறப்பாகச் செப்புகின்றார் திருமூலர். அத் திருமூலர் தம்முடன் கூட எண்மர் திருக்கூத்துத் தரிசனம் செய்ததாகத் திருவாய்மலர்ந்துள்ளார்.

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்,
நந்திகள் நால்வர்; சிவயோக மாமுனி,
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்ரமர்,
என்றிவர் என்னோ டெண்மரு மாமே."

இத் திருமந்திரத்தால் இக் கருத்து இனிது புலப் படும். எனவே, திருமூலர் கருத்தின்படி சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்; சிவயோக மாமுனிவர், மன்று தொழுத பதஞ்சலி, வியாக்ரமர், திருமூலர் ஆகிய எண்மரும் திருக்கூத்துத் தரிசித் தவர்களாவர். இவர்கள் தமது ஞானக்கண்ணுற் கண்டு இன்புற்ற திருக் கூத்தினையே இரணிய வன்மருந் தரிசித்தார்.

திருக் கூத்தியற்றும் வடிவம் சிவபெருமானது மூர்த்தங்களுள் ஒன்ருகிய நடராச வடிவமாகும். இந் நடராச வடிவம் "மூன்று கண்களும், நான்கு தோள் களும், சாந்த குணமும், சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் உடையதாகவும்; தலை ஓடும், கொக்கிறகும், ஊமத்தை மலரும், எருக்க மலரும், கங்காநதியும், சந்திரனும் ஆகிய இவற்றைச் சிரசிலே சூடியதாகவும்; வலது பாதம் நிலைப்பு நீங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலகன் மேலே ஊன்றி நிற்பதாகவும், இடது பாதம் தூக்கப்பட்டுச் சிறிது குஞ்சித்ததாகவும்; வலது கைகளுள் முன் கை அபயம் அளிக்குங் கையாகவும்; பின் கை உடுக்கைத் தாங்கிய கையாகவும்; இடது கைகளுள் முன் கை வீசித் தொங்கவிட்டுள்ளதாகவும்; பின் கை அக்கினி ஏந்தியதாகவும்; இடது செவியில் திருத்தோடும்; வலது செவியில் மகர குண்டலமும் தரிக்கப்பெற்றதாயும்; அபய கரத்தில் நாகபூஷணம் பூண்டதாகவும்; எல்லா அங்கங்களிலும் விபூதி தரித்து விளங்குவதாகவும் இருக்கின்றது" என்று சிற்பிகளால் தியானிக்கப்படும் நடராசா வடிவத் தியான மந்திரம் செப்புகின்றது. இக் கருத்தினையும் எமது இந் நூலின் முப்பத்திரண்டாம் பக்கத்தில் உள்ள "திருநடன தரிசனம்" என்ற உட்பிரிவினையும் ஊன்றிக் கவனித்தால் திருக்கூத்தின் இயல்பை நன்கு தெளியலாம்.

திருக்கூத்து வகைகளைப் பரதநாட்டிய சாஸ்திரமும் ஆகமங்களும் நூற்றெட்டு என்று கூறுகின்றன. சிவதாண்டவங்கள் ஆகிய இந்த நூற்றெட்டினையும் விரிந்த நூல்களுட் காண்க.

திருக்கூத்து இயற்றுங் காரணத்தினாலே ஸ்ரீ நடராசமூர்த்தியைக் கூத்தப்பிரான், கூத்தன், கூத்துடையான் என்று பலப் பலவாகப் பேசுவர். இக் கூத்தினை இயற்றுவது உலகைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள் செய்வதற்காகும். இக் கருத்தைத் திருவதிகை மனவாசகங் கடந்தார் தமது உண்மை விளக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தோற்றந் துடியதனில் தோயுந் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு ".

என்று அருளியுள்ளார்.

" உடுக்கை ஏந்திய திருக்கரத்திலே படைப்பு ஆகவும், அமைத்த திருக்கரத்திலே ஆன்மாப் பொருத்தும் காத்தலாகவும், சொல்லப்பட்ட அக்கினி ஏந்திய திருக்கரத்திலே மல சங்காரமாகவும், உறுதியாக ஊன்றிய மலர் போலும் பொருந்திய திருவடியிலே பிரபஞ்சத்தை மறைக்குந் திரோதமாகவும், தூக்கிய மலர் போலும் திருவடியிலே அநுக்கிரக முத்தியாக வும் திருக்கூத்துச் செய்வான் என்று அறிவாயாக" என்பது இப் பாடலின் பொருள். இக்கருத்தினைத் திருமூலரும் வலியுறுத்தியுள்ளார்.

" அரன்துடி தோற்றம்; அமைத்தல் திதியாம்;
அரனங்கி தன்னில் அறையிற்சங் காரம்;
அரனூற் றணைப்பில் அமருந் திரோதாயி;
அரனடி யென்றும் அநுக்கிரகம் என்னே. "

உடுக்கை ஏந்திய கையினாலே மாயையை நீக்கி, அக்கினி ஏந்திய கையினாலே கன்ம மலத்தினைச் சுட்டு, கிரியாசத்தியாகிய ஊன்றிய பாதத்தினாலே ஆணவமலம் மேலிடாமல் அழுத்தி, ஞானசத்தியாகிய தூக்கிய பாதத்தினாலே அருளே தனுவாக நிறுத்தி, கருணையினாலே அஞ்சன்மின் என்று அமைத்த அபய கரத்தினாலே ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அழுத்துவதே எமது தந்தையாகிய சிவபெருமானது பரதக்கூத்தின் கருத்து என்பதை உண்மை விளக்கம் பின்வருமாறு கூறுகின்றது :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்."

இங்ஙனம் ஐந்தொழில் இயற்றுந் திருக்கூத்தினைத் தரிசித்த திருமூலநாயனார் தமது திருமந்திரத்துள் திருக்கூத்துத் தரிசனம் என்று ஒரு பகுதியினை அமைத்துள்ளார், அதனுள் சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக்கூத்து என்பன பேசப்படுகின்றன.

எங்குந் தங்குவது சிவபெருமானின் அருட் திருவிளையாடல் என்பதை,

" எங்குந் திருமேனி; எங்குஞ் சிவசத்தி;
எங்குஞ் சிதம்பரம்; எங்குந் திருநட்டம்;
எங்குஞ் சிவமா யிருத்தலால், எங்கெங்கும்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே."

என்னுந் திருமந்திரத்தால் ஓதுகின்றார்.

கூத்தப்பிரானுக்கு ஐந்தொழிற் கூத்து ஆனந்தமே என்பதை,

" ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே."

என்னுந் திருமந்திரத்தாற் செப்புகின்றார். பரம் பொருளாகிய சிவம் ஆன்மாக்களின் மேலே முகிழ்த்த பெருங் கருணையினாலே அக்கருணையே உருவாகக் கொண்டு பராபரையின் திருமுன் ஆனந்தக் கூத்தை இயற்றுகின்றார். (பார்க்க. 2703-ஆவது திருமந்திரம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் வானந்தக் கூத்து நிகழ்வதற்குரிய இடம் பேரின்ப நிலையாகிய துரியத்தானத்து என்பதை 2693 ஆம் திருமந்திரத்தாற் காண்க. அத் திருக் கூத்தைக் காண வல்லவர் மாயை மாமாயைகளைக் கடந்து நின்ற பெரியோராவர். (பார்க்க: 2720-ஆவது திருமந்திரம்.) அக் கூத்தினைக் காணுந்தோறுங் காணுந்தோறும் அருட் கண்ணீர் துளிக்கும் நெஞ்சுருக்கும்; ஆனந்த அமுதூறும்; (திருமந்திரம் 2732-ஆவது பார்க்க). நாதாந்த நிலையில் நின்று நிருத்தம் செய்யும்போது அவனது திருக்கூத்து அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் ஆட்டு கின்றது.

> " தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
> மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
> தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
> யாவையும் ஆடிடும் எம்மிறை ஆடவே."

என்கின்றது திருமந்திரம்.

திருமூலர் கூத்துக்களின் வகையைப்
பின்வரும் வண்ணம் கூறுகின்றார் :—

(1) கொடுகொட்டி :— எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடும் கூத்து.

(2) பாண்டம் :— பாண்டரங்கம் எனவும் படும். முப்புரங்களை எரித்த காலத்து அந்நீற்றினை அணிந்து நின்று ஆடிய கூத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கோடு :— காபாலக் கூத்து. பிரம கபாலத்தைக் கையில் ஏந்திக்கொண்டு நின்று ஆடிய கூத்து.

(4) சங்காரம் :— நாள்தோறும் நடக்கும் அழித்தற் தொழிலுக்காக ஆடும் கூத்து.

(5) நடம் எட்டு :— படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் ஐந்து கூத்துக்களுடன் காளிக்கூத்து, முனிநடனம், ஆனந்த நடனம் என்பவையும் சேர எட்டுக் கூத்து.

(6) ஐந்து நடம் :— குற்ருலம், கூடல், தில்லை, பேரூர், ஆலங்காடு இவைகளில் ஆடிய கூத்து.

(7) ஆறு நடம் :— ஆறு சமயத்திலும் அவ்வவர் சமயத்துக்கு ஏற்ற கூத்துக்கள்.

கூத்தின் வகை பதினைந்து என்றும் கூறுவர். அரும்பதக் குறிப்பினுள் அவற்றைக் காண்க.

இக் கூத்துக்கள் எல்லாம் ஊன நடனம் எனவும், ஞான நடனம் எனவும் இருவகைப்படும், ஊன நடனம் ஆன்மாக்களைப் பெத்தநிலையிலும், ஞான நடனம் முத்திநிலையிலும் அழுத்தும். ஐந்தெழுத்துக்கள் நகராதி பஞ்சாக்கரம் எனவும், சிகராதி பஞ்சாக்கரம் எனவும் இருவகைப்படும். நகராதி பஞ்சாக்கரம் உலக இன்பம் வேண்டுவோரால் ஓதப்படும். சிகராதி பஞ்சாக்கரம் முத்தி இன்பம் வேண்டுவோரால் ஓதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

என வரும் உண்மை விளக்கச் செய்யுளை ஆராய்ந்தால் திருவடி நகாரமாகவும், திருவுந்தி மகாரமாகவும், திருத்தோள் சிகாரமாகவும், திருமுகம் வகாரமாகவும், திருமுடி யகாரமாகவும அமைந்திருத்தல் தெரிய வரும். இனி,

" சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகாரம் அபயகரம் — பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்."

என வரும் உண்மை விளக்கச் செய்யுளை ஆராயின், உடுக்கை ஏந்திய திருக்கரம் சிகாரமாகவும், வீசிய திருக்கரம் வகாரமாகவும், அமைத்த திருக்கரம் யகாரமாகவும், அக்கினி ஏந்திய திருக்கரம் நகாரமாக மாகவும், முயலகனை மிதித்த திருவடி மகாரமாகவும் பொருந்துதல் புலப்படும்,

இவைகளிலிருந்து மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாத ஒப்பற்ற பரமேசுவரன், மேலான பஞ்சாக்கரத்தினாலும் கருணையினாலும் திருமேனி கொண்டு, பராசத்தியாகிய திருவம்பலம் இடமாக நின்று, தம் திருமேனியிற் பாதியாகிய மலையரையன் மகள் காணும்படியாக, நாதாந்த நடனத்தை நன்கு நடிப்பன் என்பது பெறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, ஸ்ரீ நடராச வடிவத்தைச் சூழ்ந்திருக்கும் திருவாசி பிரணவமாக, அல்லது பிரகிருதிப் பொருளாகிய இயற்கையாகக் கொள்ளப்படும். பிரணவத்தோடு கூடிய ஸ்ரீ பஞ்சாக்கரமே நிறைந்த உள்ளொளியாகக் கொள்ளப்படும்.

இப்படிப்பட்ட அனேக கருத்துக்கள் பொதிந்த திருவுருவம் ஸ்ரீ நடராசர் திருவுருவம். இந் நடராசர் திருவுருவம் எந் நாட்டவராலும் விரும்பப் படுவது; எச் சாகியத்தாராலும் விரும்பப்படுவது; எக் குழுவினராலும் ஏற்றுக் கொள்ளப்படுவது; எக் கலைஞர்களாலும் போற்றிக் கொண்டாடப்படு வது; எல்லாக் காலங்களிலும் உள்ள எல்லாத் தத்துவ ஞானிகளாலும் தெளியப்படுவது; தரிசிக்கப் படுவது; எல்லாத் தத்துவங்களையுந் தன்னுள் அடக்கியது; அத் தத்துவங்களுக்கும் அப்பாற்பட் டது; மனித வாழ்க்கையில் ஏற்படும் எல்லா வியவ காரங்களுக்கும் வழி காட்டுவது; இயற்கையோடு இயைந்து இன்பம் பயப்பது; வாசித்துக் காண முடியாதது; பூசித்துக் கூட முடியாதது; வாய் விட்டுப் பேச முடியாதது; மனக்குற்றம் உடையவர் களுக்குத் தோன்றாதது; அன்பினை உடையவர்க ளிடத்து அகலாது நிற்பது; மாயையால் பற்றப் படாதது; விந்துநாத ஓசைக்குத் தூரமானது; ஆகாயத்தின் முடிபாய் உள்ளது; உலகங்களுக்கு ஆதியானது.

ஆண்மையால், அவர் திரு நிருத்தம் புரியும் சிதம்பரமே தரிசித்த மாத்திரத்தில் முத்தி அளிக்குந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமாகும். தரிசித்தல் என்பது சிவயோகம் தம்முள் நிகழத் தரிசித்தலாம். இப்படித் தரிசித்தவர்கள் பலர் என்பது முன்னர்க் காட்டப்பட்டது.

சமயாசாரியர் நால்வருந் தரிசித்துள்ளார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் "இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே" என இறும்பூதெய்தியுள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்,

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

என்று பெரு மகிழ்வுற்று ஆனந்தம் மேலிடுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடு மானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந் தார்."

மாணிக்கவாசக சுவாமிகளுக்கு வழுவா முத்தி கொடுத்தது பொன்னம்பலத்திலேயாகும்.

"சிறைவான் புனற் றில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும், உறைவான்."

என அவரே கோவை பாடியுள்ளார். திருவாசகத்திற் பல இடங்களில் தம்மை ஆட்கொண்டமையைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நாயினேனை நலமலி தில்லையுட்
கோலமார்தரு பொதுவினில் வருகென "

இறைவன் பணித்தமையைக் கீர்த்தித் திருவகவலில் புகழ்ந்து பாடுகின்றார். அம் மணிவாசகரைச்

" செய்காட்டுங் கமுகடவித் தில்லையுளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்முருவங் காட்டாது மறைத்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராக்கினார். "

சிதம்பர நடராசர். இன்னும் அனேக மெய்யடியார்கள் சிதம்பர தரிசனம் பெற்றுப் பெருவாழ்வு எய்தினர்.

திருநீலகண்ட நாயனார், திருநாளைப்போவார் நாயனார், கணம்புல்ல நாயனார், கோச்செங்கட்சோழ நாயனார், கூற்றுவ நாயனார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் முதலிய அனேக அடியார்கள் இச் சிதம்பர தலத்தில் முத்தி பெற்றனர்.

சேரமான்பெருமாள் நாயனார், கல்லாடர், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், சேந்தனார், திருமாளிகைத்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், உமாபதி சிவாசாரியர் முதலிய பல மெய்யடியார்கள் சிதம்பரத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள்.

கந்தபுராணம், பெரியபுராணம், சிதம்பர புராணம், கோயிற் புராணம், புலியூர்ப் புராணம், சிதம்பரச் செய்யுட்கோவை, சிதம்பரநாதர் பதிகம், புலியூர் வெண்பா, சோழமண்டல சதகம், தில்லைக் கலம்பகம், திருத்தில்லை யமக அந்தாதி, தில்லையந்தாதி முதலிய பல நூல்களில் சிதம்பர தலத்தின் மகிமைகள் கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 271 உள்ளன. இவைகளினாலும் வேறு சில சாசனங்களினாலும் சிதம்பரம் இப்போது இருப்பதை விட மிகப் பெரிய ஊராக இருந்தது என்பது புலப்படும். 1570-ம் விஜயநகரக் கல்வெட்டும் 1804-ஆம் ஆண்டுச் சாசனம் ஒன்றும் சிதம்பரத்தின் பெருமையைக் கூறுகின்றன. 1804-ம் ஆண்டுச் சாசனத்திலிருந்து சிதம்பரத்தின் எல்லை வடக்கே வெள்ளாறும், தெற்கே கொள்ளிடமும், மேற்கே வீராணம் ஏரியும், கிழக்கே கடலும் எனத் தெரிய வருகிறது. இதிலிருந்து சிதம்பரம் தனி ஊராய்ப் பல சிற்றூர்களைத் தன்னகத்து அடக்கிய ஒரு பேரூராக இருந்தமை தெரியவரும். கி. பி. 12-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று இதைக் கூறுகிறது.

கல்வெட்டுக்களில் சிதம்பர தலம், தில்லை, தில்லையூர், புலியூர், பெரும்பற்றப்புலியூர், கோயில் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பாலான கல்வெட்டுக்கள் அரசர்கள் செய்த பணிகளைப்பற்றிக் கூறுகின்றன. பெரும்பாலும் நந்தவனப் பணிகள் முதலிய கோயிற் பணிகள் குறிக்கப்பட்டுள்ளன. ஜடவர்மசுந்தர பாண்டியன் (ஆ. கா. 1251 — 1268) தில்லையம்பலத்துக்குச் சென்று நடராஜப் பெருமானை வணங்கி கோயிலைப் பொன்னால் வேய்ந்தான் என்பது தெரிய வருகிறது. இவனைப்பற்றி ஏறக்குறைய 30 கல்வெட்டுக்கள் இக் கோயிலில் உள்ளன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1219-ம் ஆண்டில் சோழ நாட்டின்மீது படையெடுத்து வெற்றிமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடி, பொன்னம்பலவாணனை வணங்கி, இராச ராசசோழனின் வேண்டுகோளின்படி திரும்பவும் சோழநாட்டை அவனுக்குக் கொடுத்தான். இராசேந்திரன் முதல் மூனரும் இராசராசன் முடிய உள்ள பலருடைய கல்வெட்டுக்களும் விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியவர்களின் கல்வெட்டுக்களும் சிதம்பர தலத்தைப்பற்றிக் குறித்து இருக்கின்றன. ஒரு கல்வெட்டு கிருஷ்ண தேவராயர் (ஆ. கா 1509 — 1529)-ல் சிதம்பரத் துக்கு வந்து தரிசித்தார் என்றும், வடக்குக் கோபுரத்தைக் கட்டினர் என்றும் கூறுகின்றது.

இச் சிதம்பரத்தில் இப்போது பல கோயில்கள் உண்டு. செங்கழுநீர்ப் பிள்ளையார்கோயில், நரமுகப் பிள்ளையார்கோயில், வேடன் பிள்ளையார்கோயில், முக்குறுணிப் பிள்ளையார்கோயில், தேரடிப் பிள்ளையார் கோயில், கூத்தாடும் பிள்ளையார்கோயில், கமலீசு வரன்கோயில், அனந்தேசுவரர் கோயில், வீரபத்திர சுவாமிகோயில், மத்தியந்தினேசுவரர் கோயில், தில்லைக்காளிகோயில், காளியம்மன் கோயில், மாரியம்மன் கோயில், செல்லியம்மன் கோயில், இளமையாக்கினர் கோயில், நந்தனர் கோயில், சேக்கிழார் கோயில், அகத்தியர் கோயில் முதலிய பல கோயில்கள் உண்டு. இக் கோயில்கள் எல்லா வற்றுக்கும் முதன்மையான கோயிலே சிதம்பரம் நடராஜர் கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கலியுகத்திலே தம்மைத் துதிப்பவர்களுக்கு இரங்கிப் பரமர் சிறிது அருளுவர். ஆதலால், சிவகாமி அம்மையார் காணச் சிதம்பரத்தின் கண்ணே திருநிருத்தஞ் செய்தருளும் சிவபெருமானுடைய திருவருளின் துணை கொண்டு கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு என்னும் பெயருடன் இந் நூல் வெளிவருகின்றது.

கோயிற் புராணம் என்று ஒரு நூல் உண்டு. அந் நூலைச் சிவபெருமான் தாம் என்று மதித்துள்ளார். கோயிற் புராணம் அரங்கேற்றப்படாது உமாபதியார் பேடகத்துள் இருந்தபோது தில்லைவாழந்தணர்களிடம் "நாம் உமாபதியார் பேடகத்துள் அடங்கியுள்ளோம்" என்று கனவு உரைத்ததாக ஒரு செய்தி உண்டு. இத் துணைச் சிறப்பு வாய்ந்தது கோயிற் புராணம். இதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ஓர் உரை எழுதியுள்ளார்கள். சிதம்பர மான்மியம் எனப் பெயரிட்டு ஒரு வசன நூலும் எழுதியுள்ளார்கள்.

கோயிற் புராணத்தை இயற்றியவர் கொற்றவன்குடி என இந் நூலிற் கூறப்படும் கொற்றங்குடியில் வசித்த உமாபதி சிவாசாரியர் ஆவர். இவர் அருள் நிறைந்த அந்தணாளர். சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜர் சன்னிதானத்தில் ஏறாது நின்ற கொடியைக் கொடிக் கவி பாடி ஏற்றியவர்; பெற்றான்சாம்பானுக்கு முத்தி கொடுப்பதற்குச் சிவபெருமானிடத்திலிருந்து பெற்றான்சாம்பானைச் சீட்டுக்கவி வாங்கிவரச் செய்தவர். அவனுக்கு முத்தி கொடுத்தமையை நம்பாத அவ்வூர் அரசனும், அவன் மனைவியும், மற்றையோருங் காணப் பரிபக்குவ நிலையில் உள்ள ஒரு முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாசப், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் சித்தாந்த அட்டகங்களை அருளியவர். இவர் வாழ்ந்தது சாலிவாகன சகாப்தம் 1235 (கி. பி. 1313) என்பது சங்கற்ப நிராகரணத்துள் வரும்

"எழுஞ் சிருநூறு எடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்ப."

என்னும் அடிகளால் விளங்குகின்றது. அக் காலந் தொட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் சிதம்பர மான்மியம் எழுதிய காலம் வரைக்கும் எவரும் கோயிற் புராணத்தைத் தழுவி ஒரு வசன நூல் செய்திலர்.

ஆகையால், திருவருள் நலங்கனிந்த கோயிற் புராணத்துள் கூறப்படும் சரித்திரத்தைப் பேரறிஞர்களும், மற்றையோரும் கற்று அறியும் பொருட்டுக் கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு என்னும் பெயருடன் இந் நூலை வெளியிடுகின்றேம். இந் நூல் ஐந்து கதைகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கதைக்கும் உப தலையங்கங்கள் தரப்பட்டுள்ளன. அவை கதையை இலகுவில் விளங்க வழி காட்டும். இக்கால முறைப்படி ஆங்காங்கு அழகிய படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. விளங்காத சொற்கள் தொடர்கள் முதலியவற்றிற்கு அரும்பத உரைக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. விளக்கமாக விளங்க வேண்டிய இடங்களைத் தடித்த எழுத்துக்களில் தந்துள்ளேம். சைவ உலகம் இந் நூலையும் ஆதரிப்பதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த அன்புடன் இந் நூலுக்கு அணிந்துரை வழங்கி, எம்மை இச் சிவத்திருப்பணியில் ஊக்குவித்த பேரறிஞர்கள் ஒவ்வொருவருக்கும், எம் உளங்கனிந்த அன்பும் நன்றியும் வணக்கமும் உரியதாகுக! சிதம்பர நாதன் திருவருள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மேலும் மேலும் பெருகுவதாக!

இந் நூல் அச்சாகப்போகிறது என்பதை அறிந்து பெருமகிழ்வுற்று, விஜயதசமித் திருநாளில் (15-10-1964) இந் நூற் செலவின் ஒரு பகுதிக்கு உதவும் வண்ணம் பொற்பந்தம் உதவிப் பாராட்டிய, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் உடன் ஆசிரியப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், இந் நூலை அழகுற அச்சிட்டு உதவிய சுதந்திரநாத அச்சக அதிபரும், மேலும் மேலும் இதுபோன்ற அருமந்த நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஆதரவு கொடுத்து, சைவத் திருப்பணியில் தலைசிறந்து வாழ்ந்துவருவதற்கு ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருள் பாலிப்பாராக!

வேத சிவாகமங்களையும், சைவசாத்திரங்கள், திருமுறைகள் முதலியவற்றையும் நன்கு கற்றுத், திருவருள் விளக்கம் பெற்ற மேலோர்களும் அவர்களது ஒழுகலாறும் என்றென்றும் வாழ இந்நூல் உதவுவதாக!

ஒப்பில்லாத திருவருள் விளக்கம் நிறைந்த சைவ சமயம் மேலோங்கி வாழ்க!

“ திருவருளகம் ”
தாவடி,
கொக்குவில்.

செ. சிவப்பிரகாசம்
ஆக்கியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்.

## முதலாங் கதை.

### வியாக்கிரபாத மகாமுனிவர் 2 — 9.

பக்கம்


| | |
|---|---|
| பாலமுனிவர் திருவவதாரம் | 2 |
| கல்வியும், உபதேசமும் | 2 |
| சிவலிங்க தரிசனமும், பூசையும் | 4 |
| பாலமுனிவர் புலிமுனிவரானமை | 6 |
| வியாக்கிரபாதர் திருமணம் | 7 |
| திரு நிருத்த தரிசன விருப்பு | 9 |


## இரண்டாங் கதை.

### பதஞ்சலி மகாமுனிவர் 10 — 29.


| | |
|---|---|
| தேவதாருவன முனிவர்களைப் பரீட்சித்தல் | 11 |
| அபிசார ஹோமச் செயல் | 16 |
| தேவதாருவனத் திரு நிருத்தம் | 18 |
| ஆதிசேடன் தவம் | 20 |
| ஆதிசேடனுக்கு அருளல் | 20 |
| பதஞ்சலி உருவம் | 24 |
| பதஞ்சலி பூவுலகேறல் | 26 |
| பதஞ்சலி, வியாக்கிரபாதர் நட்பு | 27 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்ருங் கதை.

### நடராஜர் திரு நிருத்தம் 30 — 45 பக்கம்


| | |
|---|---|
| திரு நடனம் | 31 |
| திரு நடன தரிசனம் | 32 |
| பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களுக்கு அருள் | 37 |
| கனகசபை | 39 |
| திரு நிருத்த தரிசன காலம் | 41 |
| பிரமதேவர் யாகம் | 42 |


## நான்காங் கதை.

### இரணியவன்மர் 46 — 69


| | |
|---|---|
| படைப்பு வரலாறு | 47 |
| மனு ஆட்சி | 47 |
| சிங்கவன்மர் யாத்திரை | 49 |
| பொற்சபைத் தரிசனம் | 53 |
| இரணியவன்மா ஆணை | 54 |
| இரணியவன்மர் புலிமுனிக்கு மகனாய் வாழல் | 56 |
| சிதம்பரச் சிறப்பு | 59 |
| இரணியவன்மாவை அரசாக்கல் | 61 |
| இரணியவன்மர் அரசைக் கையேற்று மீளல் | 66 |
| இரணியவன்மர் கொற்றவன்குடியில் வசித்தல் | 69 |


## ஐந்தாங் கதை.

### திருவிழா எடுத்தமை 70 — 82.


| | |
|---|---|
| இரணியவன்மர் அரசாளுதல் | 70 |
| திருவிழா எடுத்தல் | 76 |
| மாசித் திருமகம் | 79 |
| நூற் பயன் | 81 |
| அரும்பத உரைக் குறிப்பு | 83 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහජන පුස්තකාලය
කොළඹ
නා: සැ:
කොළඹ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை.



கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு

# கற்பகவிநாயகர்

காப்பு.

★

அன்பினால் உலகோர் அகங்குழைந் துருகி,
ஆனந்தம் மேலிட்டுப் பொங்கி;
இன்பமே! அன்பே! எம்முடை உயிரே!
ஈசனே! மாசிலா மணியே!
தென்பெருந் தில்லைச் சிதம்பர தேவே!
என்றுஎன்றுஞ் சிந்தித்து வாழ்த்த,
மன்பெருங் கோயில் வகுத்தனன்; காக்க!
வரம்பொழி கற்பகக் களிறே!

—ஆக்கியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# கோயில்

## அல்லது

# சிதம்பரச் சிறப்பு.

கற்பகவிநாயகர் சொற்பொருளாகுவர்.

பொற்ப தப்பொது வார்புலி யூர்புகழ்
சொற்ப தப்பொரு ளாகுவ தூயவ
ரற்ப கற்றெழு வாழணி கோபுரக்
கற்ப கத்தனி யானை கழல்களே.

## திருச்சிற்றம்பலத் துதி.

ஆரணங்கள் முடிந்தபதத்(து) ஆனந்த ஒளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு உருவாகிப்
பேரணங்கின் உடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி.

## சிவகாமசுந்தரி துதி.

மன்றின்மணி விளக்(கு)எனலா(ம்) மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணின் ஒளிபோற்றி; உல(கு)உம்பர்
சென்றுதொழ அருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி; நிலவுதிரு அடிபோற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பகவிநாயகர் துதி.

தன்னேந்து மலரடியுந் தளிரோங்கு சாகைகளு(ம்)
மின்னேங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னேங்கன் முன்னேங்கும் பொற்பமர் கற்பகம்போற்றி.

—உமாபதிசிவம்.

## கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு
## முதலாங் கதை.
# வியாக்கிரபாத மகாமுனிவர்.

மத்தியந்தின மகாமுனிவரிடத்திலே எல்லா உலகத்தவரும் பிறவித் துன்பத்தினின்று நீங்கும் வண்ணம் [பால முனிவர்] சிவஞானமும் சிவபத்தியும் மிக்கோங்கத் [திரு அவதாரம்] திருவருளினலே ஒரு திருக்குமாரர் திருவவதாரஞ்செய்தார். மத்தியந்தின மகாமுனிவர் அன்பு மேலிட்டு அவருக்கு நாமகரணம் முதல் உபநயனம் இறுதியாகிய கருமங்களை முறைப்படி செய்தார்; அரிய [கல்வியும்] வேதங்களையும் மற்றை நூல்களையுங் கற்பித் [உபதேசமும்] தார்; உயிர்த்துணையாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் சிவாகமத்திலே சொல்லப்பட்ட முறைப்படி உபதேசித்தார். பின்பு திருக்குமாரரை நோக்கி, இனி நாம் உனக்குச் செய்யவேண்டுவது யாது? என்று வினவியருளினர். அப்பொழுது ஞானம் உதிக்கப்பெற்ற குமாரர் ஆகிய பாலமுனிவர் தந்தையாருடைய திருவடிகளை வணங்கி, "வேதாகம நூல்கள் ஆதியிலே சொல்லிய அரிய தவக்கூட்டங்களுள் மேலாகிய பெரிய தவத்தை எனக்கு அருளிச்செய்க" என்று விண்ணப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியந்தின மகாமுனிவர் பாலமுனிவரை அருளோடு பார்த்து, "அரிய தவங்களைச் செய்தால் சுவர்க்கம் முதலிய புவன போகங்கள் கிடைக்கும்; இது சிவலோகத் துக்குப் போகும் வழியன்று; சிவபூசை செய்தால் பிறவி நீங்கும், சிவலோகம் பெறலாம்" என்றார். அவ் வுபதேசத்தைக் கேட்ட பாலமுனிவர், "சிவபெருமான் திருவுளம் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் புண்ணிய தலத்தை அருளிச்செய்க" என்றார். அப்போது மத்தியந்தின மகாமுனிவர், "பூமி முழுவதுஞ் சிவ சன்னிதி, அப்படியன்றென்று உணருதல் தவக் குறை யாம்; சரீரமெங்கும் வியாபித்திருக்கும் ஆன்மாவுக்கு முக்கியத் தானம் உண்டானாற் போல உலகம் எங்கும் வியாபித்துள்ள சிவபெருமானுக்கு முக்கியத் தலம் உண்டு என்று பின்வருமாறு அருளிச்செய்தார். "உலகத்துள்ள ஆன்மாக்களுக்குச் சலனம் வராமல் பூமிக்கு நடுவே நிற்பதாகிய மகா மேருமலையும் அதனைச் சூழ்ந்துள்ள எட்டுக் குலமலைகளும் அவைகளின் நடுவே உள்ள எட்டுக் கண்டங்களும் ஆன்மாக்கள் யாவும் பூமியிற் செய்த கருமங்களுக்கு ஈடாக அவற்றின் பலத்தை அனுபவிக்கும் சுவர்க்கத்தைப் போன்று போக பூமிகளாம் என்று கழித்தார். இக் கரும பூமியாகிய பரதகண்டத்திலே ஆன்மாக்கள் முத்தியடையும் பொருட் டுத் திருவுளக் கருணையினாலே எண்ணில்லாத புண்ணிய தலங்களைக் கைக்கொண்டருளினார். இக் கரும பூமியில் ஆயிர கோடி புண்ணிய தலங்கள் உண்டு; அவைக ளுள்ளே தில்லைவனத்துள்ள மூலத்தானத்திலே சோதியாய் முளைத்தெழுந்த சிவலிங்க ரூபியாகிய கடவுள் உனது பூசையைக் கொண்டருளுவர்," என்று விபூதியையுஞ் சாத்தினார். அன்பு கனிந்து நின்ற மத்தியந்தின மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவராகிய தந்தையாரதும் தாயாரதும் திருவடிகளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தெற்கு நோக்கிச் செல்வாராயினர் பாலமுனிவர்.

பூவுலகத்தோர் பிறவிப் பிணி போகத் திருவருளினால் தெற்கு நோக்கி வருகின்ற பாலமுனிவர், சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாட்சரமே வழித்துணையாக, சிங்கம், யானை என்பன நிறைந்த நெருங்கிய மரங்கள் அடர்ந்த உயர்ந்த காடுகளையும் குவளைகள் மலர்ந்த கழிகளையும் கடந்தார். சிவகங்கையாகிய திருக்குளத்தைக் கண்டு துதித்தார். பின்பு அதன் தென்புறமாக உள்ள வழியே அன்புடன் நடக்கும்போது, ஓர் ஆலமர நீழலிலே சிவலிங்கப் [சிவலிங்க தரிசன] பெருமானைக் கண்டு எட்டுறுப்பும் [மும் பூசையும்] பூமியிலே தோய வணங்கியும், எழுந்திருந்தும், ஆனந்தக்கண்ணீர் பொழிந்தும், தன் வசம் இழந்தும், "தெவிட்டாத அமுதே! அடியேனை அடிமையாக உடையவரே! ஞானமூர்த்தியே!" என்று சொல்லி அன்பு மேலிட்டு வேதங்களை ஓதினர். அநாதியே ஆன்மாக்களைப் பெத்த முத்தி இரண்டிலும் ஆண்டருளும் பதியே ஆயினும் மேலான சிறப்பையுடைய மூலத்தான மாகிய இத் திருப்பதியை உடைய முக்கண்ணரே, பொற்றாமரை நிறைந்த சிவகங்கையை உடைய சுத்தரே, திருநீறு அணிந்த திருமேனியை உடையவரே, எப் பொருட்கும் முடிவே, மெய்யடியார்களுக்கு இனியவரே, அடியேனது ஆசை மிக்க பூசையை ஏற்றருளும்" என்று விண்ணப்பம் செய்து, சிவகங்கையிலே மூழ்கி, அதில் உள்ள அன்றலர்ந்த பல மலர்களை எடுத்து வந்து சத்திரூபமாகிய திருவடிகளைப் பூசை செய்து வணங்கினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு பாலமுனிவர் தில்லைவனத்தின் மேற்குப் பக்கத்திலே பேய்ப் பூக்கள் நிறைந்த வாவிக் கரையையும் வெளி இடத்தையும் அணுகி, ஒரு வலிய மாநிழலிலே அழகு நிறைந்த ஒரு சிவலிங்கத்தைத் தாபித்தார். அவ்விடத்திலே ஒரு பர்ணசாலையையும் உண்டாக்கினார். அவ்விடத்தும் திருமூலட்டானத்தும் பூசை செய்து வணங்கிச் சிவபெருமானே துணையாக ஆங்கிருந்தார். அங்ஙனம் இருக்கும் நாளிலே ஒருநாள் பிராதக் காலத்திலே விபூதி தரித்துச் சந்தியாவந்தனம் முடித்த பாலமுனிவர், நீர் நிறைந்த கமண்டலமும் தண்டும் திருப்பூங்கூடையுள் நிறைந்த பல பூக்களும், சமித்துக்களும், தருப்பை, அறுகு முதலிய புற்களும் சாக மூல பலங்களும் பலாசிலையும் பிடிக் கொண்டுவந்து, தாழ்ந்த சடையை உயர முடித்துப் பூசை செய்தற்குப் பூக்களை ஆராயும் போது பல பூக்கள் குற்றமுடையனவாய் இருக்கக் கண்டு பின்வருமாறு சொல்லித் துக்கிப்பாராயினார் :— விடிந்த பின் பூக்களை எடுக்கின் வண்டுகள் ஊதும்; இராத்திரியில் எடுக்க எண்ணின் வழி தெரியாது; கோங்கு முதலிய மரங்களில் எடுக்கவெணின், கிளைகள் நீளமாக வளர்ந்து பனிநீராலே வழுக்கும்; முப்புரம் எரித்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் வண்டுகள் உண்டு ஊறுபடுத்திய பூவும் பழம் பூவும் நல்ல பூவோடு பொருந்தி எறிய அரும்பும் குற்றமுடையன என்று சிவாகமத்தில் அருளிச்செய்தார். இதற்கு என் செய்வேன் !? பிறையணிந்த சடாமுடியை உடைய நாயகரே, பிரபஞ்ச வாழ்க்கையை நீக்குபவரே, நெற்றிக்கண்ணரே, மான் பொருந்திய கையரே, பாம்பை யணிந்தவரே, பாசத்தை அரிப்பவரே, தில்லைவனத்தை நீங்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணியே, என்னை ஆட்கொள்ள விரும்புவீராயின் அடியேனிடத்துப் பத்தி, வைராக்கியம் இல்லாமையைச் சிந்தியாது அடியேன் நினைத்த வரங்களைத் தந்தருளும்; வேறொரு சுகமும் அநுபவிக்கும் விருப்பமில்லேன், என்று தளர்வாராயினர். அன்பினாலே மனங்கரைந்து வழிபடாதவர்க்கு அருள் செய்யீர் என அறிந்தார் எனது பூசையும் பொய்யன்பும் காணும் உமக்கு எங்கே என்று வருந்துபவராகிய பாலமுனிவர் முன்னே, பிறை சூடிய சடாமுடியை உடைய தேவ தேவாகிய சிவபெருமான் பூதகணங்கள் சூழ இடபத்தின் மேலே எழுந்தருளி வரத் திருமுன்பு பூமியிலே வணங்கி, முகமெலாங் கண்ணீர் வார நின்றார் பாலமுனிவர். அப்போது சிவபெருமான் தமது அமுதத் திருவாக்கினால், "பாலமுனியே, நமது பூசையின் ஆசையால் உனது நல்லொழுக்கம் விளக்கும் உண்மையைக் கண்டு மனம் மகிழ்ந்தோம், நீ நினைத்த வரங்களைச் சொல்வாயாக" என்று அருள, அது கேட்ட பாலமுனிவர், அடியேனுடைய கால்களும் கைகளும் புலிக் கால்களும் புலிக் கைகளும் போல நகப்பற்றுடையனவாய் அவற்றில் கண்கள் பொருந்தும்படியும் இரங்கி அருளிப் புட்ப விதிப்படி செய்யப்படும் பூசையை ஏற்றருளும்" என்று வரம் வேண்டிக் கொண்டார்; அங்ஙனமே அருள் செய்து சிவபெருமான் உமாதேவியாரோடும் மறைந்தருளினார். அக்காலந் தொடக்கம் வியாக்கிரபாதர் என்னுந் திருநாமத்தால் அவரை அழைத்தார்கள். வண்டுகள் எழு முன் தாம் எழுந்து இன்றியமையாத நியதிகளை முடித்து, வேதங்களை அன்பினோடும் உச்சரித்துக்கொண்டு சென்று, மணம் நிறைந்த மந்தார முகையும் செருந்தி. குரா,

பாலமுனிவர் புலிமுனிவரானமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வியாக்கிரபாத மகாமுனிவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோங்கு, பாதிரி, சண்பகம் முதலிய கோட்டுப் பூக்களும், நீர்ப் பூக்களும், கொடிப் பூக்களும் எடுத்து வந்து சிவபெருமானுடைய திருவடிகளைச் சிவாகம விதிப்படி பூசை செய்து அனேக காலம் இருந்தார் பாலமுனிவர்.

மத்தியந்தின மகாமுனிவர் தமது பிள்ளை புலிக் கால்களையும் புலிக் கைகளையும், அவைகளிலே நீண்ட கண்களையும் பெற்றமையைக் காண விரும்பி, தில்லைவனத்தை அடைந்து அக்குமாரர் தம்மை வந்து வணங்கக் கண்டு மகிழ்ந்து, பொற்றாமரை பொருந்திய சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து, திருமூலட்டான நாதரைப் பூசித்து, திருப்புலீச்சரத்துச் சிவலிங்கப் பெருமானையும் பூசித்து அவ் வியாக்கிரபாதரது பர்ணசாலையில் அவர் மேல் அன்பு கொண்டிருந்தார்.

அங்ஙனமாக, ஒருநாள் மத்தியந்தின மகாமுனிவர், எனது பெறற்கரும புதல்வனே, நமது சந்ததி விளங்க இனி இல்லறத்தைப் பொருந்துவாயாக; பிதிர் பொருட்டு ஓமம், பிண்ட தானம், தருப்பண முதலியவைகளைக் கைய மறிந்துச் செய்யும் புத்திரனை யுடையவனே பெரிய சுவர்க்கத்தை யடைவான்;

**வியாக்கிரபாதர் திருமணம்**

முன்னே உன்னை நான் பெற்றது போல நீ ஒரு புத்திரனைப் பெறக் கடவாய் என்று கூறி, உடன்படுத்தி வசிட்ட மகாமுனிவரின் தங்கையை விவாக விதிப்படி விவாகம் செய்து வைத்தார். அத் தேவியார் உபமன்னியு பகவானைப் பெற்றார். அவரைக் கண்ட அருந்ததியார் உபமன்னியு பகவானைத் தமது ஆச்சிரமத்துக்குக் கூட்டிச் சென்று காமதேனு பொழிந்த இனிய பாலை யூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தார். பின்பு வியாக்கிரபாதரும் தேவியாரும் புத்திரனைத் தம்முடன் கூட்டிச் சென்று பல இனிய தின்பண்டங்களைக் கொடுக்கவும் புசியாது காமதேனுவின் பாலைப் பெறும்படி அழுதார். வியாக்கிரபாத மகாமுனிவர் நாம் வறியோம்; இனிதாகிய உணவுகளை அறியோம்; அவற்றை உடையவர் இவரே காண் என்று சொல்லிச் சகல செல்வங்களையும் உடைய சிவலிங்கப் பெருமான் திருமுன்பு வளர்த்தினார். உதராக்கினியினாலே வருந்தி அவமிருத்து கருமமே புகலிடம் என்று அழுது அப்பொழுது சிவபெருமானால் திருப்பாற்கடலைப் பெற்றுச் சுவையுடன் பருகிக் களிகூர்வாராயினர்.

வியாக்கிரபாத மகாமுனிவர் ஒருநாள் தம்மை ஆண்டருளுஞ் சிவலிங்கப் பெருமானுடைய சந்நிதியிலே விரித்த பதுமாசனம் பொருந்த, ஒரு கால் பூமியையும் சகனத்தையும் பொருந்துதலொழிய வயிறு தொடர்ந்து மார்பு முன்னே தள்ள, இரண்டு தோள்களுந் தாழ, கைகள் மடிமீது குறுக்காக ஒன்றன் மேல் ஒன்று பொருந்த, கழுத்து மேலே நிமிர, பல்வரிசைகளின் இடையே நாக்குப் பொருந்த ஒளி பொருந்திய கடைக் கண்களை நாசி நுனியிலே வைத்து, சிறப்போங்கிய சிவயோகம் மனசிலே பொருந்த விளங்க அனுபவ ஞானத்தினாலே சிவத்தோடு கலந்து இன்பம் அநுபவிக்கும் நெறியிலே, தேவதாருவனத்திலே சிவபெருமான் தம்மை யறியாதவர்களாகிய நாற்பத்தெண்ணாயிர மகா முனிவர்களுக்கு ஒரு நாள் திரு நிருத்தஞ் செய்தருளினார் என்று சிறிது கண்டு துக்கித்தார்; ஐயோ! என்று வருந்தித் தளர்வாராயினார். பிதாவாகிய சிவபெருமான் நல்ல திருமேனி கொண்டு வெளியே நின்று திரு நிருத்தஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநிருத்த தரிசன விருப்பு

செய்தருளிய தேவதாருவனமே எமது சிவபூசைக்கு இடமாக நாம் முன்னே செல்லாதபடி தந்தையாராகி மத்தியந்தின மகாமுனிவர் இத் திருமூலத்தானத்தை யடையும்படி கற்பித்தருளினர். சிவபெருமானுடைய சத்தி ரூபமாகிய திருவடி நாம் அறியுந் தரத்ததோ! நமது மனசில் அன்பில்லை; இஃது என்னே! சிவபெருமான் உமாதேவியாரோடும் எழுந்தருளி வந்து எப்படித் திருநிருத்தஞ் செய்தருளுவர் என்று வருந்துவாராயினர்.

உலக பிதாவும தத்துவங்களைக் கடந்தவருமாகிய சிவபெருமான் எப்பொழுதும் திரு நிருத்தஞ் செய்தருளும் திருவுளம் பொருந்தப் பெற்ற அம்பலத்தின் பெயர்களாவன :— (1) மன்று, (2) அமலம், (3) சத்து, (4) உம்பர், (5) இரண்மயகோசம், (6) மகத்து, (7) தனி, (8) புண்டரிகம், (9) குகை, (10) ககனம், (11) சுத்தம், (12) பரம், (13) அற்புதம், (14) மெய்ப்பதம், (15) சுழுனைவழி ஞானசுகோதயம், (16) சிதம்பரம், (17) முத்தி, (18) பரப்பிரமம், (19) சபை, (20) சத்தி, (21) சிவாலயம் எனப் பலவாருக வேத நூல்கள் இடையருது சொல்லும். இச் சபையினது உண்மை இப்படிப்பட்டது என்று எவர் அறிவர்! முற்காலம் நிருத்த ராசருடைய திருநிலையைத் தரிசித்தவர் உண்டு என்று இன்று அறிகின்ருேம்; ஆதலினலே இச் சிதம்பரமே திருநிருத்தந் தரிசிக்கும்படி தந்தருளும் என்று வியாக்கிரபாத மகாமுனிவர் அருள் வளரும் மனந் தெளிவுற்ருர்.

முதலாங் கதை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாங் கதை.

# பதஞ்சலி மகாமுனிவர்.

இங்ஙனமே வியாக்கிரபாத மகாமுனிவர் எமது பிதாவாகிய சிவபெருமானே முடிவில்லாத ஆனந்த தாண்டவத்தைத் தரிசிப்பித்தருளும் என்று பாசம் நீங்கும்படி சிவபெருமானை வணங்கிக்கொண்டிருந்தார். அப்போது பதஞ்சலி மகாமுனிவர் அவ் வியாக்கிரபாத முனிவரிடத்தே வந்த தன்மையையும் நெடுங்காலந் தவஞ் செய்து கொண்டிருந்த தன்மையையுஞ் சொல்வாம்.

ஒரு நாள் விஷ்ணுமூர்த்தி ஆதிசேட சயனத்தை விட்டு "அரகர சங்கர" என்று உச்சரித்து, கைகளைச் சிரசின் மேலே குவித்துக் கண்களினின்றும் ஆனந்த அருவி சொரிய வாயுவின் முன் அசையாத சித்திரிக்கப் பட்ட அழகிய தீபம் போல நிமிர்ந்திருந்தார். இலக்குமி அதனைக் கண்டு திகைக்க ஆதிசேடரும் தம்மீது குற்றம் உண்டோ என்று நடுங்கச் சிவானுபவம் நீங்கி, இரண்டு சிவந்த கண்களும் மலரும்படி இருந்தார். இங்ஙனம் செந்தாமரைக் கண்விழித்துச் சலங்கொண்டு நித்திய கருமங்களை முடித்து, மண்டபத்திலே முத்துப் பந்தரின் கீழ்ப் பொலிவாகிய சிங்காசனத்திலே தேவர்கள் வந்து வணங்க ஆனந்த நித்திரையோடும் இருந்தார். அப்போது தேவதாருவனத்திலே செய்யப்பட்ட சிவபெருமானது திருநிருத்தத்தை நினைந்து சிவானந்தத்திலே சென்ற தமது மனத்தை விஷய ஞானத்திலே செலுத்தினர். அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசேடர் வணங்கி, இப் பிரகாரம் எழுந்தருளி இருந்தமைக்குக் காரணம் யாதென விஷ்ணுமூர்த்தியுஞ் சிரித்துப் பின்வருமாறு சொல்லுவாராயினர் :— அனந்தனே ! இலக்குமியே ! இருங்கள் ; சுத்தராகிய சிவபெருமான் எனக்குத் தந்த திருவருளை உள்ளபடி சொல்லின் அளவில்லை ; உத்தர கைலாசத்திலே எழுந்தருளி இருக்கும் சிவபெருமானை நேற்று நான் சிரசு பொருந்த வணங்க, ஒப்பில்லாத சிவபெருமான் என்னைத் தம் அருகே அழைத்தருளி, சிரித்துக் கருணை மிகுந்து, என்னுடைய கையின் மேலே தம்முடைய சிறந்த திருக்கரத்தை ஊன்றிக்கொண்டு எழுந்தருளினர்; அப்போது சங்குகள் எங்கும் ஒலித்தன ; வேதங்கள் முழங்கிப் புகழ்ந்தன; கணநாதர் பக்கலிலே சுற்றினர்; முனிவர்கள் நெருங்கித் துதித்தனர்; இன்பே நிகழச் சிவபெருமான் அம் மலையின் அடிவாரத்தை அடைந்தருளினர். ஆங்கு ஒரு மண்டபத்துள்ளே புகுந்தருளி " தேவதாருவனத்தில் உள்ள பரிசுத்தர்களாகிய முனிவர்களுடைய மனசைப் பரீட்சிப்போம், நம்முடைய வடிவத்திற்கு ஏற்ப நீ பெண்ணுருவமாகி விளங்கக்கடவாய் " என்று பணித்தருளி ஆன்மநாயகராகிய சிவபெருமானும் தமது திருமேனியை அழகுற அலங்கரித்தருளினர்.

தேவதாருவன முனிவர்களைப் பரீட்சித்தல்

திருவடிகளிலே மிதியடிகளும், வெள்ளிய கௌபீனம் பொருந்திய திருவரையும், முப்புரிநூலும், வலமாகச் சுழித்த திருவுந்தியும், ஏகரேகையாகிய உத்தமலக்கணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய திருமார்பும், உயர்ந்த திருப்புயங்களும், நல்ல பொக்கணமும், உடுக்கையும், பிக்ஷாபாத்திரமும், நன்மையாகிய திருமிடறும் சிவந்த கனிவாயிற் திருப் புன்முறுவலும், அழகுற நீண்ட திருச்செவிகளும், நய மாகிய திருக்கண் நோக்கமும், விருப்ப மிக்க செந்தாமரை மலர் போலுந் திருமுகமும், பொட்டிட்ட திருநெற்றியும், சுருண்டு ஒத்து விளங்கும் கரிய கூந்தலும், பவள ஒளியி லும் மிக்குப் பிரகாசிக்குந் திருமேனியும் உடையவராகி, இவ் வடிவைக் கண்ட மெல்லியராகிய பெண்கள் தங்கள் அரையில் உள்ள பட்டுச்சீலை விழுவது போலத் தாமும் விழும்படி அழகிய திருக்கோலத்தோடும், எல்லா உலகுக் கும் ஏகநாயகராகிய சிவபெருமான் என் முன்னே தோன்றினர். யானும், கரிய கூந்தலிலே பூக்களைச் சொருகி, நெற்றிப் பொட்டாலே முகம் விளங்க, விலை மதித்தற்கரிய பட்டுப் புடைவையை உடுத்து, அகன்ற முன்றானையை இடத்தோள் மேலாகப் பின்னே போட்டு, அதன் தலையை வலக்கையாலே எடுத்து முலைமீதணிந்த காறை என்னும் ஆபரணத்தின் மேலே கட்டி, இரத்தினங் களாலாகிய சிலம்புகளை அணிந்து, ஒரு கொடி போலப் பூங்கொத்துப் பொருந்திய கையுடன் சுத்தராகிய சிவபெரு மானுடைய சன்னிதியிற் சென்றேன். மன்மதனது அழகை அழித்த சிவபெருமான் அப்போது காமமுற்றூர் போலத் தீமை மிக்க எனது கடைக்கண்ணைப் பார்த்துச் சிறிது புன்முறுவல் செய்தருளினர். அக் கைலைமலையிலே பார்ப்பதி அம்மையார் தனித்து எழுந்தருளியிருப்ப, செம்பவளமலை ஒத்த திருமேனியை உடைய சிவபெருமான் உலகத்து மெய்ம்மையாகிய முனிவர்கள் இவன் கீர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க இயக்கன் என்று எண்ண, அடியேன் செம்மையாகிய ஆபரணங்கள் அணிந்த பெண்ணாகித் தமக்குப் பின் செல்ல, சைவர்களாதற்கு உரிய முனிவர்கள் இருக்குந் தேவதாருவனத்தை அணுகினார்.

ஆங்குச் சென்று அத் தேவதாருவனத்து முனிவர்கள் இருக்குந் தெருவில் உள்ள முதற் பர்ணசாலையிலே புகுந்து முற்றத்திலே நின்று உடுக்கையை வாசித்து, நகை மிக முகம் மலர்த்தி, கை நிறையப் பிக்ஷை கொண்டுவந்த சுருண்ட கூந்தலையுடைய இருடி பத்தினிகளுடைய அழகைப் பார்த்துச் சிவபெருமான் செய்த அபிநயங்கள் ஆயிர கோடியாகும். சிவபெருமான் இங்ஙனம் அபிநயங்கள் செய்ய, நிறைந்த கற்பும் பண் பொருந்திய சொல்லும் உள்ள இருடி பத்தினிகள் பலர் கூடினர்; கிட்டுதற்கரிய இயல்பாகிய நாணமும் கொழுத்தக் கொண்டு கொண்டது விடாத மடமும் பேதைமையாகிய அச்சமும் பயிலாத பொருள்களில் அருவருப்பாகிய பயிர்ப்பும் ஆகிய நான்கு குணமும் நழுவ, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை இரண்டு பக்கத்தும் கூடி வளைந்துகொண்டார்கள். அங்ஙனஞ் சூழ்ந்துகொண்டவர்களுள் கூந்தல் சரிய அதனை ஒரு கையினாலும் புடைவை அவிழ அதனை ஒரு கையினாலும் இறுகப் பிடித்துக்கொண்டு கண்களினின்றும் அருவி பொழியப் பரவசர்களாய் எதிரே செல்வார்கள் சிலர்; இவர் திருவாயில் துலங்குகின்ற பற்கள் சுத்தமாய் இருக்கின்றன என்று சொல்லுவார்கள் சிலர்; எங்களை விரும்பித் தழுவியருளும் என்று மோகிப்பார்கள் சிலர்; பிக்ஷை இடவேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியை அள்ளிக் கொண்டு சென்று காமாக்கினியி
னாலும் விரக வேர்வையினாலும் கையே பானையாகப்
பொருந்த அமுது சமைத்துப் பிக்ஷாபாத்திரத்தில் இடு
வார்கள் போலக் கண்ணும் மனமும் மாறுபடுதலால்
நிலத்தில் இடுவார்கள் சிலர்; திருவடிகளிலே பூசிக்கப்
புஷ்பத்தையும் பத்திரத்தையுங் குவித்த கைகளோடு
கொண்டு வந்து திருவடிகளிலே அருச்சிப்பவர் போல
மயங்கிப் பிக்ஷாபாத்திரத்தில் வெந்த இலைக்கறி என்று
இடுவார்கள் சிலர்; அழகு நிறைந்த நாயகரைப் பெற்
றோம் ஆதலால் பிழைத்தோம் என்பார்கள் சிலர்; இச்
சைவர் முன்னம் கண்ட முகமுடையார் என்பார்கள்
சிலர்; இரதி நாயகனாகிய மன்மதன் ஐவகைப்
பாணங்களை அப்பருத்தூணியினின்றும் வாங்கிப் பொழி
கின்றான் என்பார்கள் சிலர்; நாம் பிச்சை கொண்டு
வரப் பெரிய மயக்கத்தைத் தந்து போபவர் எமது இச்சை
கெட இரங்கி அருளுகின்றிலர் என்று தளர்வார்கள் சிலர்;
நீர் இங்கு நில்லும், செல்லுவீராயின் நம்முடைய வளையல்
களைத் தந்து போம் என்று தடுத்து ஒரு வார்த்தை சொல்லி
விடும் என்றுகிட்டிச் செல்வார்கள் சிலர்; முத்துவடங்கள்
பொருந்திய முலைகள் தோன்ற நின்று எமது வீடு
இதுவே என்று சொல்லுவார்கள் சிலர்; உமக்குப்
பொருத்தமாயின் எவ்விடமும் எமக்குப் பொருத்தமாம்
என்பார்கள் சிலர்; தழுவச் சமயம் இதுவே, எம்முடனே
வாரும் என்று சொல்லுவார்கள் சிலர்; பிக்ஷை உண்டு
இடை இல்லை என்று அறிவிப்பவர் போல எதிரே வந்து
நிற்பார்கள் சிலர்; எங்கள் உடலில் உயிர் உண்டோ
இல்லையோ என்பது சந்தேகம், சீக்கிரம் வந்து தழுவிக்
கொண்டு எம்மைப் பிழைப்பியும் என்பார்கள் போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள் சிலர்; மன்மதன் ஐந்து பாணங்களைக் கொண்டு ஐந்து யமன் போல வந்து வருத்தாமல் தலைவரே! ஐயரே! எம்மைப் பயப்படாதொழிக என்று சொல்லியருளும் என்று மயங்குவார்கள் சிலர்; ஆனந்த மிகுதியாலே கூத்தாடுவார்கள் சிலர்; முன் செய்தறியாத அபிநயங்களைச் செய்வார்கள் சிலர்; அவாது திருமேனி அழகைக் கண்டு திருப்பிப் பாராரோ என்று விரைவாக அவர் பின்னே ஓடுவார்கள் சிலர்; உமது பிக்ஷா பாத்திரம் தலை ஓடோ என்பார்கள் சிலர்; மிகச் சமீபமாகக் கிட்டு, வார்கள் சிலர்; அவிழ்ந்த கூந்தல் அலைய குழல் ஒத்த குரலாலே பாடுவார்கள் சிலர்; அவர் திருமேனியின் மேலே விழுவார்கள் சிலர்; இங்ஙனம் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்கின்ற எழுவகைப் பெண்களும் தெருவின் இரண்டு பக்கமும் மயங்கி நிற்கச் சிவபெருமான் சிரித்துக்கொண்டு எழுந்தருளினர். அவர் பக்கலில் நான் சென்ற தன்மையை இனிக் கூறுவேன்:—

உடை நடை கையில் உள்ள பூ முதலியவற்றாலும் குனிந்த பார்வையாலும், பார்த்தவர் அழகினை யுடைய தார்த்தை என்று சொல்லுதற்கரிய பொலிவாகிய வஞ்சக வேடந் தாங்கினேன். புருவமாகிய வில்லிலே கண்களாகிய கூரிய அம்புகளை என்னைப் பார்த்த முனிவர்கள்மீது எவினேன். பெரிய தவ வலியுடைய அம் முனிவர்கள் திடசித்தங் கலங்கினர்; குடுமி குலைய, உடுத்த மரவுரி நழுவ, உபவீதமே அடையாளமாகத் தெரிய மற்றை யோராற் செய்தற்கரிய பல அபிநயங்களைச் செய்தனர்; பரவசராயினர்; சிவபெருமான் சன்னிதியிலே என்னைக் கண்டு ஆசைப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமா முதலிய எவராலும் அறிதற்கரிய சிவபெருமான் இயக்கரூபந் தாங்கி முனிவர்களுடைய பர்ணசாலைகள் தோறும் பிக்ஷை ஏற்றற்குச் சென்றருளினார்; அவரை அடைபவர் போல அழகிய ஆபரணங்களையுடைய என்னைப் பார்த்து, அனேக குற்றங்களுக்கு ஆளானார்கள். முனிவர்கள் மிகுந்த கோபமுடையவராயினர். எல்லோருந் திரண்டு எழுந்து குற்றமில்லாத தமது பத்தினிமார்களது கற்பைக் கலைத்த கபாலி என்று கோபித்துக் கொடிய பல சாபங்களை இட்டனர் அச் சாபங்கள் ஒன்றும் பலியாதொழிந்தன. அவர் முன்பே ஓமகுண்டம் உண்டாக்கி மந்திரங்களை உச்சரித்து விஷத்திரவியங்களாலே நினைத்தற்கரிய அசாதிமலமுத்தாகிய சிவபெருமானின் மேலே அபிசார ஹோமத்தை ஆராயாது ஆற்றினர்.

அப்போது ஓமகுண்டத்தினின்றும் தோற்றிய கொடிய புலியை அவர் முன்னே விட்டார்கள். எம்பெருமான் அக் கொடிய புலியைப் பார்த்துத் திருப்புன்முறுவல் செய்தருளித் தனது நுனி நகத்தினாலே அதனது தோலை உரித்துப் பசும் பட்டுப் போல அத் தோலைத் திருத்தொடையில் பொருந்த உடுத்தருளினார்.

**அபிசார ஹோமச் செயல்**

பின்பு பூதங்கள் எழ அவற்றையும் விட அவை எம் பெருமானைச் சேவித்து நின்றன. பின்னர் இரத்தின மௌலியும் சிவந்த கண்ணும் வெள்ளிய பற்களும் கரிய நஞ்சும் பொருந்திய ஒரு சருப்பம் தமது திருமுன் வர அதனைக் கடகம் எனத் திருக்கரத்தில் அணிந்தருளினார். இருளைக் கிழித்து எழுந்த மின்னல் போல நீண்ட கரிய குடுமியே நீண்ட பெரிய செஞ்சடையாக, பகைவர்களுள் அன்பர்களாகிய முனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே முந்திய திருக்கரங்கள் ஒழிய இன்னும் இரண்டு திருக்கரங்கள் தோன்றி எழத் திருநிருத்தம் பொருந்திய திருவடியுடன் விடமுண்ட கண்டத்தினையும் நெற்றிக் கண்ணையுங் காட்டியருளினார். அப்போது கரிய கோலமும் அக்கினி போன்ற குஞ்சியும் அக்கினி சொரியுங் கண்களும் வெள்ளிய பற்களும் குறள் வடிவும் உடைய முயலகன் தோன்றினான். சிவபெருமான் அதன் முதுகின்மேல் வலப்பாதத்தினாலே மிதித்தருளினார். பின் அக்கினியை விடுக்க அதை ஏந்தியருளினார். பின்னர் மந்திரங்களை ஏவ அவற்றைத் திருவடிகளிலே ஒலிக்கும்படி சாத்தியருளினார். விளங்குகின்ற பல சடைகள் தாழ, கணநாதர்கள் துணங்கைக் கூத்தாடக் கொன்றைமலர் மாலைகளை அணிந்த பெரிய திருப்புயங்களை உடைய சிவபெருமான் அரிய திருநிருத்தஞ் செய்யத் தொடங்கி அருளினார். முனிவர்கள் ஓமாக்கினியால் வாடி, தவ வலி குறைந்து தளர்ந்து, அக்கினியும் இழந்து, மந்திரமும் இழந்து ஒருசெயலுமின்றி நிராயுதர்களாகிச் சிவபெருமான் செய்தருளிய திருநிருத்த வேகத்தினாலே ஒருங்கே விழுந்தார்கள். அத் திருநிருத்தத்தைச் சகிக்கமாட்டாது நின்ற என்னை அஞ்சாதே என்று கையமர்த்தியருளி இடப வாகனத்தில் எழுந்தருளி ஆகாய மார்க்கமாக வந்த உமாதேவியார் மேலே கடைக்கண் சாத்தியருளினார்.

அப்போது தேவர்கள் பூமழை பொழிந்தனர்; பிரமாவும் இந்திரனும் திருமுன்னே எட்டுறுப்புத் தோய வணங்கினர். நான் எனது பழைய வடிவத்தைக் கொண்டு சிவபெருமான் திருமுன்பு ஒதுங்கி நிற்றலைக் கண்டு உமாதேவியார் மகிழ்ந்தருளினார்; கருணை செய்யும் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாவும் திருநிருத்தம் பொருந்திய அருட்கண்ணருமாகிய எம் பெருமான் விரிந்த சடை எங்கும் பரவி அசைய, அக்கினி எரியும் திருக்கரஞ் சுழல, உடுக்கை பேரொலி செய்ய, சிலம்பணிந்த செந்தாமரை மலர் போலுந் திருவடிகளை யாவரும் வணங்க, உமாதேவியாரும் நடுங்க அனேக விதமான திரு நி ரு த் த ங் க ளை த் தொடங்கியருளினர். அளவில்லாத கரணங்களை நடித்தார்.

தேவதாருவனத் திரு திருத்தம்

சங்கு பொருந்துதலாகிய உத்தம இலக்கணமுள்ள திருக்கரமும் சருக்கரத்துப் பொலிவும் உமாதேவியாருடைய திருக்கண்களும் தம்முடைய திருக்கண்களும் பொருந்திய வெற்றி மிக்க புயங்க கரணத்தைப் பொருந்தியருளினர். அப்போது இன்பம் மிக்க அப் புயங்க கரணத்தைத் தரிசிக்கும்படி உமாதேவியாருக்கும் இடபதேவருக்கும் அருள் செய்து, என்மீதும் அருள் தழைக்கத் திருப் புன்முறுவல் செய்ய நான் உய்ந்து வழிபட்டேன்; என் நெஞ்சம் உருக ஞானக்கண் தந்தருளினர். துன்புறுகின்ற முனிவர்கள் "அருட்கண்ணரே, சங்கரரே, அடியேம் உய்யும வண்ணம் எமது குற்றம் நீங்கத் திருவுளம் கொண்டருளும்" என்று விழுந்து நமஸ்கரித்தார்கள். இன்பந் தரும் நிருத்த ராஜரும அருள் செய்யத் தக்க அவர்களுடைய ஆணவமலம் எல்லாம் முயலகனைப் பொருந்தும்படி அருள் செய்து அதன் முதுகு நெரியும்படி நிருத்தஞ் செய்தருளினர். மலநீக்கம் பெற்ற நாற்பத்தெண்ணாயிரவராகிய அம் முனிவர்கள் இன்பம் மிக்க அத் திருநிருத்தத்தைத் தரிசித்தார்கள்; பயந்தார்கள்; ஆனந்த அருவி பொழிந்தார்கள்; கமண்டலம், தருப்பை, தண்டு என்பனவற்றை ஏந்திக் கொண்டு திருமுன் நின்று குணலைக் கூத்தாடினர்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் கைம்மலர் குவித்து வணங்கினர்கள்; தும்புரு, நாரதர் என்போர் நிருத்த வயமுடையவர்களாய்க் கீதம் பாடுதலொழிந்தனர்; பூதங்கள் துணங்கைக் கூத்தாடின; கணநாதர்கள் பல பல கூத்துகளை ஆடினர். சிவபெருமான் "விட்டுணு, பிரமா, இந்திரன், தேவர்கள், முனிவர்கள் ஆகிய யாவரும் எம்முடைய இன்ப நிருத்தத்தைச் சிவலிங்கத்திலே பொருந்தத் தியானித்துப் பல மலர்களைக் கொண்டு அன்புடன் நமது திருவடிகளை இவ்விடத்தே வழிபாடு செய்யுங்கள்" என்று கட்டளை இட்டு, இடபாரூடராகிய உமாதேவியாரோடும் ஆகாயத்தே மறைந்தருளினர்.

சிவபெருமான் மறைந்தருளிய திசை நோக்கி வணங்கி யாவரும் சென்றனர். ஞானம் மிக்க ஆதிசேடனே நான் சிவபெருமானது நிருத்தத்தை வணங்கியமையால் உன்மீது நித்திரை செய்கின்ற துன்பத்தை நீங்கினேன் என்று கூறி விட்டுணு முகமலர்ந்தார். சிவபெருமானது உயர்ந்த திருநிருத்தம் என்றபோதே ஆதிசேடன் ஆனந்தநீர் பொழிய நின்று மனமுருகுதலைக் கண்ட விட்டுணு, இவர் சிவபெருமானது தொண்டர், இவர் சிவபெருமானுக்குத் தொண்டு செய்தலே செய்யத்தக்க தொழில். இவர் எனக்குச் சயனமாதலை ஒழிதலே எனது தொழில் என்று அருள ஆதிசேடன் வருந்தினர். நீ இனி எனக்குச் சயனமாதலை ஒழித்து, உனது மகனைச் சயனமாகும்படி செய்து, சிவபெருமானது திருநிருத்தத்தைத் தரிசிக்கும் மேலாகிய தவத்தைச் செய்க என்று சொல்லி அருளுதலும் நெஞ்சங் கரைந்துருகிச் சிவபெருமானது நிருத்த தரிசனம் இன்பம் தருகினும் உமது பிரிவு என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக வருத்துகிறது என்றார். விட்டுணு மனமுவந்து சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் வடகைலையின் அருகே சென்று நீ தவத்தைச் செய்க; உமாதேவியார் சமேதராகச் சிவபெருமான் எழுந்தருளி வந்து வேண்டிய வரங்களைத் தந்தருளுவார் என்று சொல்ல, அப்பொழுதே விடை பெற்று வட கைலையை அணுகி அரிய தவத்தைச் செய்தார்.

**ஆதிசேடன் தவம்**

அப்போது வாயுவையும் உட்கொள்ளாத அனேககால மாகச் சூரியமண்டலத்துள்ளே கண்வைத்துச் செலுத்தி ஆரிய தவத்தைச் செய்தலைச் சிவபெருமான் முன்பு தேவதாருவனத்து உள்ள இருடிகளைச் சோதித்தது போலச் சோதிக்க எண்ணினார். பிரமனைப் போல அன்னவாகனத்தில் எழுந்தருளி வந்து ஆதிசேடனின் மனக் கருத்தைச்சோதித்தறிந்து வேறொன்றிலும் பற்றின்றித் திருநிருத்த தரிசனத்திலேயே மனம் மிக்க விருப்புறுதலை அறிந்து அவரது திடசித்தத்தை மெச்சி உமாதேவி சமேதராக அன்னமே இடபமாக எழுந்தருளி வர, பிரமா முதலிய தேவர்கள் பூக்களைச் சொரிய, கணங்கள் சுற்ற ஆங்கு எழுந்தருளியிருந்தார். அத் திருக்கோலத்தைக் கண்ட ஆதிசேடர் நடுக்கமுற்று, " அண்டங்களை உடையவரே காத்தருளும், என்னை ஆண்டருளிய அநாதிமலமுத்தரே காத்தருளும், பிறைச் சந்திரனைத் தரித்தவரே காத்தருளும், அடியேனது அறியாமையை யுடைய சொற்களைப் பொறுத்தருளுபவரே

**ஆதிசேடனுக்கு அருளல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தருளும், நிருத்த ராஜரே காத்தருளும், காத்தருளும், என்னை ஆட்கொள்ள எண்ணி எழுந்தருளி வந்த நிருமலரே காத்தருளும்" என்று துதித்து மனமுருகிப் பூமியிலே விழுந்து வணங்கினார். நீண்ட சடாமுடியை உடைய சிவபெருமான் இடபத்தை ஆதிசேடருக்கு முன்னே செலுத்தியருளி, அவரைத் தழுவிக் கருணை செய்து, தமது திருக்கரத்தை அவரது தலையிலே வைத்து, "இப்படித் தவஞ் செய்தாலன்றி எமது இன்ப நடனம் உண்மையாகத் தெரியாது. இனி நாம் கூறும் நாளில் உனக்கு நமது நடனம் புலப்படும். உனது துன்பத்தை ஒழிவாயாக" என்று சொல்லி, "எமது உருவத்தை உள்ளபடி சொல்வோம் அறிகுதி" என்று திருவாய்மலர்ந் தருளினார். காரணமாகிய பிரபஞ்சம் முதற் காரணமாகிய மாயையினின்றும் ஆன்மாக்களுடைய இருவினை காரண மாகத் தோன்றும்; குடம் முதலியன குயவர் இன்றித் தோன்றா; அது போலப் பிரபஞ்சமும் நிமித்த காரணனாகிய ஒரு கருத்தாவின்றித் தானே தோன்றாத இயற்கை உடையது; சிற்றறிவுடைய ஆன்மாக்கள் பிரபஞ்சத்தைப் பொருந்தி அனுபவித்தற்குரிய அறிவு, எமது படைத்தல் முதலிய ஐந்தொழில்களால் நிகழும். சகளம், நிட்களம் ஆகிய இரண்டும் நமது பற்றுக்கோடாகிய வடிவங்களாம். நமது சத்தி அன்பர்களது முதற் காரணமாகிய பாசத் தைச் சோதிக்கும் உருவமாகும்; மற்றையது அருவமாய் ஞானமயமாய்க் கண்டிக்கப்படாததாய் இருந்தது. சகள நிட்களமாகிய இவ் விரண்டையுங் கடந்து நின்ற இயற்கை வடிவே நமது சோதிமயமாகிய ஞானரூபம். அவ் வுருவத்திற்கு ஆனந்தமாகிய ஆன்மா நாம்.

6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம் பெயர்களாவன :—பரபதம், பரஞானம், பராற்பரம் என்பன. சங்காரமும், திதியும், சிருஷ்டியும், திரோபவமும் அனுக்கிரகமும் ஆகிய பஞ்ச கிருத்தியங்களுமே நமக்கு நிருத்தமாகும். வேதங்கள் நாம எக்காலமும நிருத்தஞ் செய்வோம் என்று துதிக்கும். ஆயின், அவை அந் நடனத்தின் காரணத்தையும், காலத்தையும், திக்கையும், கருத்தையும், இடத்தையும் அறியாவாம. தேவதாருவனத்தில் விட்டுணு முதலாயினோர் தரிசிக்க நடஞ் செய்தபொழுது அவ் வனம் பூமிக்கு நடுவன்மையினலே அந் நடனத்தைப் பொறுக்கமாட்டாது அசைந்தமையைக் கண்டு வெற்றி பொருந்திய நிருத்தங்களை விரைவில் ஒழித்துவிட்டோம். உனக்கும் இவ்விடம் நிருத்தந் தரிசிப்பதற்குரிய இடமன்று. அந் நடனத்தைப் பொறுக்க வல்ல சபை ஒன்று உண்டு என்று இவ்வுலகம வாழும பொருட்டுச் சொல்லியருளினர். ஆதிசேடரும் வணங்கித் துதித்து, " அடியேன் உய்யும் வண்ணம விளங்குகின்ற சபை உலகத்தில் உண்டாய், உம்முடைய திருவருளினல் அதனைத் தரிசிப்பிக்கும எண்ணமும உண்டாய், நீரே வனத்தில் எழுந்தருளி வந்தீர் என்ருல் அடியேன் உய்ந்தேன் " என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் தம்மைத் துதிக்கும் ஆதிசேடனைப் பார்த்து, பிண்டமும், அண்டமும தமக்குள் ஒப்பன. சரீரத்திலே இடைநாடி இடத்திலும், பிங்கலைநாடி வலத்திலும், சுழுமுனைநாடி நடுவிலும் போதல் போல இப் பூமியிலே இடைநாடி இலங்கைக்கு நேரே போகும்; பிங்கலைநாடி இமயமலைக்கு நேரே செல்லும், சுழுமுனை நாடி அவ் விரண்டுக்கும் நடுவே போகும்; அச் சுழுமுனை நாடி நன்மை மிக்க தில்லைவனத்துக்கு நேரே போய்க் கூடும்; அத் தலத்திலே மூல இலிங்கம இருக்கிறது; அச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்துக்குத் தெற்கே வேதங்களுங் காணாத நிலை பெற்ற சபை உண்டு. அங்கே நாம் எக்காலமும் நடனஞ் செய்தருளுவோம் என்று என்னை அடிமையாக உடைய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர். அச் சபை ஞானகாசமாகிய மெய்ப் பொருள்; மாயாகாரிய மாகிய மற்றைப் பொருள்களோடு அழியாது; எக்கால மு் நிலைபெற்றுள்ளது; ஆன்மாக்கள் அளவிறந்த நல்ல புண்ணியங்களைச் செய்தால் அவர்களுள்ளே ஞானக் கண்ணைப் பெற்றவர் சிதம்பரத்தைத் தரிசிப்பர். தரிசிக்கப் பெறுதவர் பிறப்பர். இனி, ஓர் உபாயஞ் சொல்லக் கேள்; உனது இக் கோலத்தைக் கண்டால் உலகம் பயப்படும்; அத்திரி முனிவனும் அவன் மனைவியாகிய அனசூயையும் உன்னைத் தங்களுக்குப் புத்திரனாகும்படி அரிய தவஞ் செய்தனர். விட்டுணு உன்னை அவர்களுக்குப் புத்திரன் ஆகக் கொடுத்தான்; நீ யோனிவாய்ப்பட்டுப் பிறத்தற் குப் பயந்து அவளது அஞ்சலியின்கண்ணே ஐந்து தலைகளை உடைய ஒரு சிறு பாம்பாகக் கண்டு அன்பினாலும் அச்சத்தினாலுங் கைவிட நீ பதஞ்சலி ஆயினை. இப்போது அவ் வடிவாகி ஆதிசேடனது அறிவுடனே நல்ல பதஞ்சலி என்னும் பெயர் பூண்டு நாகலோகத்து வழியே போவா யாக; அந் நாகலோகத்து நடுவே ஒரு மலை உண்டு; அதன் தெற்கே உயர்ந்த பிலத்துவாரம் உண்டு; அப் பிலத்துவார முடிவு விளங்குகின்ற தில்லைவனமாகும்; இது சத்தியம்; அதற்கு வடபக்கலிலே ஆலமாத்தினது குளிர்மையாகிய நிழலிலே அப் பெரிய மலையின் கொழுந் தானது திருமூலத்தானத்திலே பொருந்திய இலிங்கமாய் இப் பூமியிலே தேவர்களுந் துதிக்கும் ஆச்சரியமுடையது. வியாக்கிரபாத முனிவன் அவ் விலிங்கத்தைப் பூசனை செய்து நமது நிருத்தத்தைத் தரிசிக்க வேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியிருக்கின்றான். நீயும் போய் அவனுடன் இருப்பாயாக; நாமும் சிறப்புப் பொருந்திய தைப்பூசம் குருவாரத்தோடு கூடும் சித்தயோக தினத்திற் பொருந்திய மத்தியானத்திலே அவ்விடத்தில் ஒளி பொருந்திய ஆனந்த நடனத்தை நீங்கள் தரிசிக்க அருள்வோம் என்று அருளிச்செய்தார். ஆதிசேடர் அவ்வருளைப் பெற்று, அன்பு மேலிட்டுப் பூமியிலே விழுந்து வணங்கச் சிவபெருமான் உமாதேவியாரோடும் ஆகாயத்தில் மறைந்தருளினார்.

சிவபெருமான் மறைந்தருளியபோது அந்தத் திக்கு நோக்கி அன்புடன் விழுந்து வணங்கி, ஆதிசேட உருவம் கூடும்படி சிந்தித்துக்கொண்டிருந்தார். வேட்டைவாளிக் குளவியை நினைத்துக்கொண்டு இருக்கும் மெல்லிய பச்சைப் புழு அவ் வேட்டைவாளியின் உருவத்தைப் பெறுதல் போலப் பதஞ்சலி உருவத்தைத் தியானித்துக்கொண்டிருந்த ஆதிசேடரும் அப் பதஞ்சலி உருவத்தைக் கொண்டு திருவருளை வணங்கி, நாகலோகத்துக்குச் சமீபமாகச் செல்ல நாகர் கூட்டமும் வாசுகி முதலிய நாகராசாக்கள் யாவரும் தங்கள் இராசாவாகிய ஆதிசேடரை எதிர் கொண்டார்கள்; நெருங்கி வந்தார்கள். நெருங்கி வந்து ஒலிக்கின்ற நாகராசாக்கள் சுற்ற ஆதிசேடர் தேவாதி தேவராகிய சிவபெருமான் அருளிச்செய்த பெரிய மலை யாகிய திருமூலத்தானம் உடைய தம்பிரானார் திருமேனி யைத் தரிசித்து மகிழ்ந்து வணங்க, அவரைச் சூழ்ந்து நின்ற கார்க்கோடகன் முதலிய நாகராசாக்கள் நீர் இம் மலையை ஒரு பொருளாகக் கொண்டு வணங்க வேண்டிய

பதஞ்சலி உருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் என்ன என்று கேட்டனர். ஆதிசேடர் இந்த மலை பாதாளம் எழினுக்குங் கீழாக நின்ற ஞானமாகிய இடம்; இதன் மேல் எல்லை தில்லைவனம்; இது சிவலிங்கப் பெருமான் என்று சொல்லியருளினார். நாகராசாக்கள் நாங்கள் முன்னே அறிந்தமையைக் கேளும்: — இதனை மலை என்று அறிந்தும் ஐயுற்றிருந்தோம்; இந்தப் பிலத்துவாரத்தின் வழியாகக் கீழே போய் இதன் முடிவைக் காணாது இருந்தோம்; அப்பாலும் செல்லல் அரிது என்று திரும்பிவிட்டோம்; நாங்கள் இதனை அறிந்திலோம் என்று சொல்லி அம் மலையைச் சிவலிங்கம் என்று நாகராசாக்கள் விருப்போடு அன்பாக வணங்கினர். பதஞ்சலி மகாமுனிவர் சுத்தமாகிய பிலத்துவாரத்தை வணங்கி, உயிர்த்துணைவராகிய சிவபெருமானை வழித்துணைவராகத் தியானித்துக்கொண்டு, இவ் வுலகத்தினர் தம பிறவித் துன்பம் நீங்கச் சிவலோகத்தில் சேறும் பொருட்டுத் தாம் நாகலோகத்தினின்றும் பூலோகத் துக்கு ஏறத் தொடங்கினர்.

திருவரையிலே பாம்பு ஆடத் தாம் ஆடியருளும் சிவபெருமானுடைய ஸ்ரீ பஞ்சாட்சரமே கண்ணாக, மறைவில்லாத வழியை அளவில்லாத காலங்களாக ஏறி, ஒலிக்கின்ற திரை பொருந்திய சமுத்திரக் கரையிலே அலைகள் முத்து, பவளம், மாணிக்கம் என்பவற் றைக் காணிக்கையாக வைத்து வழிபடும் தில்லை வனத்தினது திருவெல்லையைச் சமீபித்தார். சமீபிக்க வந்து மனங் கரைந்தார்; ஆனந்த அருவி பொழிந்தார்; கைகளாகிய தாமரைகளைச் சிரசிலே வைத்து வழிபட்டார்; கூட்டமாகிய படத்தில் உள்ள இரத்தினங்கள் பிரகாசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் ஓங்க, பூவுலக மக்கள் சிவமயமாக, ஆணவமல இருள் நீங்க, ஞானசூரியர் போலப் பிலத்துவாரத்தினின் நம் பூமியிலே எழுந்தார். எழுந்து திருவருள் நிறைந்த தில்லைவனத்தை வணங்கினார். அவரது தவக்கோல மாட்சிமையைக் கண்டு வியாக்கிரபாத மகாமுனிவர் மயங்கச் சிவபெருமானது ஆஞ்ஞையினாலே அவரை விருப்போடு கண்டார்.

பதஞ்சலி பூவுலகேறல்

அப்போது மங்கலம் நிறைந்த வியாக்கிரபாத மகாமுனிவர் பதஞ்சலி மகாமுனிவரது திருமேனிப் பொலிவைத் கண்டு மகிழ்ந்து வணங்கி, " அருட் செல்வம் பொருந்திய முனிவரே, நீர் எங்கு உள்ளீர்? நீர் போவது எவ்விடம்? உமது பெயர் யாது? சொல்லும்" என்று கேட்டார். பதஞ்சலி மகாமுனிவர் "பாசத்தை நீக்கிய வியாக்கிரபாத முனிவரே, நான் ஆதிசேடன்; விட்டுணு வானவர் தேவதாருவனத்திலே சிவபெருமான் ஆனந்தத் திருநடனஞ் செய்தமையை எனக்கு அருளி, அதன்மேல் எனக்கு உள்ள ஆசையைக் கண்டு, என்னைத் தமக்குச் சயனமாகக் கொள்ளாது நீங்க, திருக்கைலாசமலையின் பக்கலிலே நிருத்த தரிசனம் பெறப் பெருந் தவஞ் செய்தேன். அதனை அறிந்த சிவபெருமான் முன்னர்ப் பிரமாவாக எழுந்தருளி வந்து எனது உண்மை நிலையைப் பரீட்சித்துப் பின்பு தாமாந் தன்மையை எனக்கு அருளி, இடபத்தைச் செலுத்தி எனது பக்கலிலே வந்து பாசம் நீங்கும்படி தமது திருக்கரத்தை எனது சிரசின் மேலே வைத்தருளி, தமது உண்மை நிலையை உபதேசித்து, பதஞ்சலி வடிவாகும் வண்ணம் அருளிச்செய்து, வியாக்கிரபாதன் என்கின்ற மாட்சிமை மிக்க முனிவனும் நமது நடனத்தைத் தரிசிக்க விரும்பித் தில்லைவனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றான்; அவனும் நீயும் நமது நிருத்தத்தைத் தரிசிக்கக் கடவீர்கள்; நாகலோகத்து உள்ள பிலத்துவாரவழியேறி அங்கு இருப்பாயாக என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினார்" என்று சொல்லியருளினார்.

**பதஞ்சலி, வியாக்கிரபாதர் நட்பு**

இதைக் கேட்டதும் வியாக்கிரபாத மகாமுனிவர் மூர்ச்சித்து விழுந்து, பின்னர் எழுந்து, "சிவபெருமான் தமது கருணை வெள்ளத்திலே எம்மை முழுக வைத்தார்; எம்பெருமான் இங்ஙனம் திருவுளம் பற்ற யான் முன்பு செய்த சிவபுண்ணியம் யாதோ!" என்று பல முறை சொல்லிச் சொல்லி, கண்ணீர் பொழியநின்று உருகினார்; "உயர்வுள்ள பதஞ்சலி மகாமுனிவரே! நீர் தந்தது பிரியவார்த்தையன்று; மறைப்பில்லாத திருவருளே," என்று அவரைத் தமது கைகளினாலே கட்டிக்கொண்டார். பின்பு திரு நிருத்தத்தை ஞானக் கண்ணினாலே தரிசித்தவர் போல மனங்களித்து, அளவிறந்த இன்பம் அடைந்து, பதஞ்சலி மகாமுனிவரைச் சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்யப்பண்ணி, மலர்களினாலே திருமூலட்டானேசுரரை வணங்கும்படி ஏவினார். அப்பொழுது பதஞ்சலி மகாமுனிவர் திருமூலட்டானேசுரரைப் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கினார். பின்பு மேற்குத் திக்கில் உள்ள தெய்வத்தன்மை உள்ள வாவியிலே ஸ்நானம் பண்ணித் தம்மை ஆண்டருளிய திருப்புலீச்சுரரையும் வணங்க வைத்தார். பின்பு பர்ணசாலையிலே கொண்டு சென்று, மதுநான் சாக மூல பலங்களினாலே பெரு விருந்து அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் மனங் களித்திருக்கும் நாளிலே, தில்லைவனத்தின் மேற்றிசையிலே தெய்வத்தன்மை உள்ள நீர் நிறைந்த வாவியைக் கண்டு அதிலே ஸ்நானஞ் செய்து, அவ் வாவியின் கீழ்க் கரையிலே தாம் தினமும் வணங்கச் சிவலிங்கப் பெருமானைத் தாபித்து, அந்தத் திருவனந்தீசுரரை நமஸ்கரித்து, தாம் இருக்க ஒரு பர்ணசாலையை அதன் வடதிசையில் பதஞ்சலி மகாமுனிவர் கட்டினார். அங்கே இருந்துகொண்டு, திருவனந்தீச்சுரத்திலும், திருப்புலிச்சுரத்திலும், திருமூலட்டானத்தும் அன்பு கனியப் பூசித்து வணங்கி, இங்கே திரு நிருத்தத்தைத் தரிசிப்பித்தருளும் என்று பூசை முடிவிலே வேண்டிக்கொண்டு, அத் தில்லைவனத்தில் இருவரும் இருந்தார்கள்.

இருக்கும்பொழுது, தில்லைவனத்திலே உள்ள மிருகங்கள் எல்லாம் முன் உள்ள புலியனே யன்றி ஒரு பாம்பனும் வந்தான் என்று பயந்து அனேக காலம் அகல நின்று பின்பு அவர்கள் பக்கத்திலே சஞ்சரித்தன.

பதஞ்சலி மகாமுனிவரும் வியாக்கிரபாத மகாமுனிவரும் அத் தில்லைவனத்தின்கண் அன்பு மேலோங்க வழிபாடு செய்து இருக்கும் நாளிலே, அனேக முனிவர்களும் அதனை அறிந்து வந்து கூடினர். புதிது புதிதாக இன்னும் அனேக முனிவர்கள் வந்து சேரச் சிவபெருமானைப் பூசித்து, அவருடைய திருவடிகளைத் தலையாலே வணங்கி, ஒரு தழைத்த மர நிழலிலே இருந்து, எலும்பு உருகச் சிவபெருமான் அருளியதை விரித்துரைத்தார். அம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கள் அச்சபை இருக்கிறதாகச் சுட்டப்பட்ட திருவெல்லையை மனத்தால் வணங்கி, ஆங்குப் போய்த் தலையால் வணங்கி, ஆங்கே திரு நிருத்தத்தை மனத்தாலே பாவித்து வணங்கி, அன்பினாற் புளகம் மிக மீண்டு வர, இப்படியாக அங்கே இருவரும் எண்ணில்லாத காலம் இருந்தார்கள்.

இரண்டாங் கதை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாங் கதை

# நடராசர் திரு நிருத்தம்.

இவ்வாறு வணங்கி அனேக காலங் கழித்திருந்தனர். பின்பு சிவபெருமான் அருளிச்செய்த சித்தயோகத்தை ஆராய்ந்து மனசிலே மகிழ்ச்சி மிக இனிமை மிக்க ஸ்ரீ பஞ்சாக்கரத்தைச் செபித்தலை உடையவர்களாய்த் தவஞ் செய்துகொண்டிருந்தார்கள் வியாக்கிரபாத மகாமுனிவரும் பதஞ்சலி மகாமுனிவரும்

இப்படித் தவஞ் செய்யும் நாளிலே, சிவபெருமானின் திரு நிருத்தத்தைத் தரிசிக்கும விருப்பமுடைய மூவாயிர முனிவர்கள் வந்து கூடினர். நீங்களும் மங்கலமாகிய சித்தயோகத்திலே திரு நிருத்தத்தைத் தரிசித்து வாழ்வடையும்படி வாருங்கள் என்று கூறி, சித்தயோகத்தைப் பார்த்துக் கணக்கிட்டுக்கொண்டு; கறவைப் பசுவினது வரவை எதிர்பார்க்கும் கன்றுக் கூட்டம் போலவும், மழைத்துளியை உண்ண எண்ணி எதிர்பார்த்து வாடும் சாதகப் புட்கள் போலவும், மலைமேல் மேக முழக்கத்தைக் கேட்கும் மயிற் கூட்டம போலவும் சிவபெருமானுடைய திரு நிருத்தத்தையே நினைந்து நினைந்து, இடையில் உள்ள நாள்களைப் போக்கினர். தைப் பூசமும் குருவாரமும் கூடிய சித்தயோகம் ஆகிய வெற்றி மிக்க அந் நாளின் முன் நாளிலே சூரியன் திருக்கைலாசமலையிலே போய்ச் சிவபெருமான் திரு நிருத்தஞ் செய்யும் பொருட்டு எழுந்தருளினார் என்றமையை அறிந்தவன் போல அங்கு நின்றும் இராவழி போய், தில்லைவனம் பொருந்திய கீழ்க் கடலிலே உதித்து எழுந்து ஆகாய மார்க்கமாக வந்து உச்சியிலே பொருந்தினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனும் உச்சியிலே பொருந்த, இரண்டு கைகளும் சிரசிலே குவிய வருவோருக்கு உரிய "ஓம் வந்தார்", தேவ தேவன் வந்தார்" "அரிபிரமாக்களுடைய கடவுள், வந்தார்" என்று சின்னங்கள் ஒலித்தன; அதன் பின் தாளம், மிருதங்கம், சங்கு முதலிய மற்றைய வாத்தியங் களின் ஒலியையுங் கேட்டு, பூமியிலே பதறி விழுந்தார்கள். ஆயிரஞ் சந்திரர் உதித்த பெரிய மலை போலவும், வேதம் ஆயிரம் விதமாக ஒலிப்பது போலவும் பாணுகம்பரது ஆயிரம் முகங்களிலும் இரண்டாயிரம் கைகளிலும் வைத்த ஆயிரஞ் சங்குகள் "ஓம்" என்று உச்சரித்து ஒலித்தன.

திரு நடனம்

நிருத்த முறைகளையும் தான மார்க்கங்களையும் சிவபெருமானது திருவருளால் அறியப் பெற்றவனும், மகா மேருவைப் போன்ற ஆயிரம் தோள்களை உடையவ னும் ஆகிய வாணாசுரன், ஒளி வீசுகின்ற கடகங்கள் அணிந்த கைகளினாலே "தொம்" என்னும் அனுகரண ஓசையுடன் பல முகங்களை உடைய குடாமுழாவினின்றும் எழுப்புகின்ற ஓசையானது சப்திக்கின்ற கடல் ஓசையையும் உள்ளடக்கியது; அப்போது பஞ்ச வாத்திய ஒலியையும் அரிய வேத ஓசையையும் கந்தருவர் பாடுங் கீத ஓசையை யும் சிவபெருமானது திருவடிக்கண் உள்ள சிலம்பின் ஒலியையுங் கேட்டார்கள்; தேவர்கள் பொழிந்த மந்தார மலர்கள் பூமியிலே பரக்கக் கண்டார்கள் சுரம் செல்பவன் அருவி ஒலியைக் கேட்டும் விடாய் தீரத் தண்ணீர் அருந்தப் பெறாது வருந்துவது போலச் சிவபெருமான் எழுந்தருளும் ஆரவார ஓசை கேட்டும் திரு நிருத்தந் தரிசிக்கப் பெறாது மோகித்து விழுந்தார்கள். சிறிது தெளிந்து எழுந்திருந்தார்கள்; பொறுக்க முடியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினர்; முகம் முழுவதிலும் கண்ணீர் பொழியப் பொருமினர்கள்; வணங்கினர்கள்; துதி செய்து, உயிர்த் துணைவரே! காத்தருளும்; தோன்றாத் திருமேனியரே! அருள் செய்யும்! என்று வாயினாலே சொல்லிச் சொல்லி, மிக அலறினர்கள்; அளவுகடந்த ஆசை மிக்க பதஞ்சலி மகாமுனிவர், வியாக்கிரபாத மகாமுனிவர் என்போர் தரிசிக்கும் பொருட்டு ஞானதிருஷ்டியை அருளிச்செய்ய அநாதியாய ஆணவமலம் நீங்கப்பெற்று அறிய முடியாத ஒளி வளருகின்ற சபையிலே

**திருநடன தரிசனம்**

உமாதேவியாரோடும் சிவபெருமான் நின்று நடிக்கின்ற ஆனந்த நடனத்தைத் தரிசித்தார்கள்.

நின்றருளிய திருவடியும், தூக்கியருளிய சிவந்த திருவடியும், திருவடிகளிற் சாத்தியருளிய திருச்சிலம்பும், திருமேனியில் மிக்க பிரகாசமும், சிறப்பாய திருத் தொடையும், உடுத்தருளிய புலித்தோல் ஆடையும், திருவரையில் உள்ள நெரிப்பும், திருவரையில் சாத்தி அருளிய கச்சின் அழகுகளும், அழகு மிக்க திருவுந்தியில் பொருந்திய உதரபந்தனச் சேர்வையும், பூணூல் பொருந்திய திருமார்பும், வீசியருளிய சிவந்த திருக்கரங் களும், பாம்பை உடைய திருக்கரத்தைக் கவித்தருளிய பிரகாசமும், வளவிய உடுக்கையும், அக்கினி அகலும், முன் திரண்ட தோள்களும், காயாமலர் போலும் நீல நிறம் பொருந்திய திருமிடறும், திருத்தோடு பொருந்திய திருக்காதும், வெள்ளிய சங்கக் குண்டலத்தை உடைய திருக்காதும், குற்றமற்ற பவளம் போலும் திருவாயிலே ஒழிவின்றித் தோன்றும் திருமுறுவலினது மோகனமும், மேலான செந்தாமரை மலர் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகையும் ஒளியையும் உடைய திருமுக மலர்ச்சியும், பூ முடித்த கூந்தலை உடைய உமாதேவியாரைப் பார்த்தருளிய திருக்கண்களின் அசைவும், திருப் புருவங்களின் அழகும், அழகிய திருநெற்றியும், பின் தாழ்ந்த விரிந்த சடையினது தொகுதியும், சருப்பமும், அகலாத கொன்றைமாலையும், கங்கையும், சந்திரனும், திருமேனியிலே விளங்குகின்ற திருநீற்றையும் உடையவராகி; கரிய இருள் போன்ற குழலின்கண்ணே மணம் நிறைந்த பூங்களைப் பொருந்த வாரிச் சேர்த்துச் சொருகிய திருமுடியும், நல்ல திரு நெற்றியும், அதில் இட்ட பொட்டும், இரண்டு வில் பொருந்தியது போன்ற திருப் புருவங்களும், வேல் போற் கூரிய திருக்கண்களும், திருச்செவிகளும், குமிழமலர் போல விளங்கும் திருமூக்கும், கொவ்வைக்கனி போலச் சிவந்து விளங்கும் திருவாயின் அதரங்களும், முத்துப் போலுந் திருநகையும், பசிய திருமேனியின் அழகும், பொலிவாய கமுகு போலுந் திருக்கழுத்திற் பொருந்திய திருமங்கல சூத்திரத்தின் அழகும், பக்கலிலே பொருந்திய மூங்கில் போலுந் திருத்தோள்களும், செந்தாமரை மலர் போலுந் திருக்கரத்திலே பொருந்திய மேலாய அழகு விளங்கும் செங்கழுநீர்ப்பூவும், செங்கழுநீர்த் திருமாலையும், கோங்கரும்பு அனை ஒத்த திரு முலைகளும், விளங்குந் திருஆபரணங்களும், உடுக்கை போன்ற திருஇடையும், பாம்பின் படம் போலுந் திரு நிதம்பத்திலே உடையாகப் பொருந்திய திருப் பரிவட்டமும், மிக ஒடுங்கிய திருவிலையும், சிவந்த திருவடித்தாமரைகளிலே சாத்தியருளிய பொற் பாடகங்களின் கீழே ஒளி மிக விளங்கும் திருச்சிலம்புகளும் பொருந்திய சிவகாமியம்மையார் அதிசயித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசிக்கும்படி நடித்தருளிய சிவபெருமான்; ஆயிர கோடி சூரியப் பிரகாசம் ஒன்று கூடிய மண்டலம் போலக் குறைவற நிறைந்த அறிதற்கு அரிதாய் உள்ள ஞானசபையிலே, நாம் உய்வடைய, பிரம விட்டுணுக்கள் முன் தேடிக் காணாத திருமேனியைக் கொண்டு திரு நிருத்தஞ் செய்தருளக் கண்டார்கள்.

ஒப்பில்லாத கூத்தராகிய சிவபெருமானது புயங்க நிருத்தம் கண்ணுக்குப் புலப்பட்டபொழுது வியாக்கிரபாத மகாமுனிவர், பதஞ்சலி மகாமுனிவர் ஆகிய இருவரும் சரீரத்தில் யாதொரு தொழிலுமற்றனர்; செந்தாமரை மலர் போலுங் கைகளைச் சிரசின் மேலே குவித்தனர்; ஆனந்த அருவி பொழிந்தனர்; நடுங்கினர்; உரை குழறினர்; இன்பமாகிய சமுத்திரத்திலே மிதந்தனர். வேத புருடர், பிரமா, விட்டுணு முதலானோர் சிதம்பரப் பிரகாசமும் சிவபெருமானது திருமேனி அழகோடு நடித்தருளும் பொலிவும் தங்கள் கண்களுக்கு அடங்காமையினால், "ஆச்சரியமாகிய திருமேனியை உடையவரே! அடியேங்கள் கருத்து முற்றுப் பெறுகின்றிலோய்" என்று சொல்லிச் சொல்லி வருந்துகின்றார்கள். "நிமித்த காரணரே, மன்மதன் எரிந்து விழும்படி பார்த்தருளிய பரிபூரணரே, உமது புகழை உடைய திரு நிருத்தத்தை யாவருந் தரிசிக்கும் பொருட்டுப் பார்த்தருளும்; ஆணவ இருளையும் மயக்கத்தையும் தீர்த்தருளும்; திருவருளினாலே "ஞானத்தை அருளிச்செய்யும்" என்று சொல்லிச் சொல்லி, வேத புருடர்கள் ஆயிரஞ் சாகைகளாக விண்ணப்பஞ் செய்கின்றார்கள். பிரம விட்டுணுக்கள் இருவரும் ஒப்பில்லாத சிவபெருமானை அவர் சந்நிதியிலே அடைந்து நின்று, "நான்கு வேதங்களும் வேண்டிக்கொண்டபடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் இன்பத்தை அடையும்படி, பிருதுவி முதல் முப்பத்தாறு என்று சொல்லப்படுகின்ற நாதம் ஆகிய ஆதி தத்துவத்தின் மேலே பொருந்திய திரு நிருத்தத்தை உடையவரே! திருச் சிலப்பு அணிந்த திருவடியை உடையவரே! கட்டளை இட்டு அருளும்” என்று விண்ணப்பித்தனர். எல்லை இருடிகள் முதலானோர், “தத்துவங்கள் யாவுங் கூடினும் விஷயங்களை அறியமாட்டா. தத்துவங்கள் கூடாதபொழுது எங்களுக்குக் கேவலத்தைப் பொருந்தும், உமது திருவருள் இல்லாவிடத்துத் துரும்பும் அசையாது. எல்லாம் உமமுடைய அசைவாகக் கொண்டு அடியேங்களையும இரக்கி அருளுக” என்று விண்ணப்பித்தனர். அப்போது எல்லோருடைய விண்ணப்பத்தையும் கேட்டு அருளிய சருப்ப ஆபரணத்தை அணிந்த சிவபெருமான் கருணையினாலே மெய்மையாகிய பக்குவத்தை உடைய யாவரும் பொருந்துதலுற, திவ்வியமான சிதம்பரத் தானத்திலே ஞானத்தைத் தரிசிப்பித்தருளினார். விட்டுணுவும், பிரமாவும், இந்திரனும், தேவர்களும் குற்றம் பொருந்தாத வேத புருடர்களும், மூவாயிர முனிவர்களும், நல்ல சாரணரும், நாரதரும், பூதர் முதலாயினோரும், திக்குப் பாலகர்களும் பிறரும் ஆனந்த நிருத்தத்தைக் கண்ணாரக் கண்டார்கள். கண்டு இன்பம் அடைந்தனர். கைகளைச் சிரசில் வைத்தார்கள். உள்ளத்தில் அன்பு ததும்பக் கண்ணீரும் புளகமும் நிகழப் பெற்றனர். சாமவேத கீதங்களைப் பாடிக் கூத்தாடினர். பரபோகத்தைத் தருஞ் சிவபெருமானது மெய்மை பொருந்திய காருண்ணியமாகிய சமுத்திரத்திலே மிதந்தனர். கணநாதர்கள், “மேலான பொருளாய் உள்ளவரே, கங்கை சூடியவரே, பிரமனது உச்சித் தலையைக் கொய்தவரே, கறுத்த திருமிடற்றை உடையவரே, முப்புரங்களை எரித்த வீரரே, பிறவியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கும் ஞானக்கண்ணைத் தாரும்" என்று விண்ணப்பஞ் செய்து பூக்களைச் சொரிந்து, அரஹர அரஹர என்றார்கள். சில தேவர்கள் கூத்தாடினார்கள். எமது தந்தையே! ஆகம சிந்தாமணியே! என்று சொல்லி ஓடினார்கள், பரவசர்களாகி நின்றனர், மிகுந்த மகிழ்ச்சியைப் பெற்றார்கள், கண்ணீர் விட்டார்கள், மலை போல எங்களை மேலிட்ட கொடிய தீவினை திரும்படி தேடப்படும் மருந்தே! கருணையைத் தாரும் என்றார்கள். "பிரம விட்டுணுக்களுக்கு மேலானவரே! இந்திரனுக்குச் சிநேகரே! எல்லா ஆன்மாக்களுக்கும் அறிவே! சிவந்த திருமேனிப் பிரகாசத்தை உடையவரே! வெண்ணீற்றை உடையவரே! தேவராசரே! இயமனைக் கொன்ற திருவடியை உடையவரே! அன்பர்களுக்குப் புகலிடமே! இளம் பிறையை அணிந்தவரே! காத்தருளும்" என்று சந்நிதியிலே வணங்கினார்கள்.

அளவில்லாத பூதங்கள் சிவந்த சிறு தலையும், திரிபுண்டரம் பொருந்திய நெற்றியும், சங்கக் குண்டலம் பொருந்திய காதுகளும், நுண்மையாகிய கண்களும், சிறிய பெரிய பற்களும், தாழ்ந்த வயிறும், பிரிந்த சகளமும், வலிய குறுந் தாள்களும், பூமியிலே பொருந்த உற்புலுதி கரணங் கொண்டாடின. சுவாலிக்கும் நெருப்பை ஒத்த மயிர் பொருந்திய தலையும், அழகான கண்களும், ஒட்டின தாடையும், வெளியே புறப்பட்ட பற்களும், நீண்ட கழுத்தும், நெடிய இரண்டு கைகளும், குரல் உலர்ந்த வயிறும், சிறிய அரையும், உயர்ந்த முட்டிக் கால்களும் உடைய பேய்க் கூட்டங்கள், பூதங்கள் ஆடும் குணலைக் கூத்துக்கு இசையக் கை கொட்டி ஆடின. தேவப் பெண்கள் கையில் யாழுடனே ஏழு சுரங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்காமற் பாடக் கால்களிலே பொருந்திய பொன்னுல் ஆகிய சிலம்புகள் குறையாத ஓசை பொருந்தக் கூத்தாடினார்கள்; பாடாது மயங்கினார்கள். தில்லை மூவாயிரவர்களாகிய பழைய முனிவர்கள் திருநீல கண்டருடைய அநாதி நிருத்தத்தினாலே தங்கள் கண்களைக் குளிரச் செய்து, கமண்டலமும தண்டும், அவிழ்ந்த சடையும், திரிபுண்டரமும் விளங்கக் கூத்தாடினார்கள். நாரதரும சாரணரும் பிறரும் யாழ் நூல் கரை கண்டோரும், "வீரரே! மேருமலையை ஏந்தியவரே! சருப்ப ஆபரணரே! காத்தருளும்" என்று அடங்காத இன்பத்துடன் ஆடினர். குடமுழா, கொக்கரை, தாளம், குழல், வீணை, படகம், கத்தரிகை, தடாரி, சங்கு, தமருகம், கரடிகை, சச்சரி ஆகிய பல வாத்தியங்களை ஏந்திய வர்கள் நெருங்கி வந்து பேரொலி நிகழச் செய்தனர். இங்ஙனம் பலரும் சந்நிதியிலே அன்புடனே கூத்தாடி ஆனந்தம் பெற்று வாழ்வடைய, அறிவு மிக்க வியாக்கிர பாத மகாமுனிவரும், பதஞ்சலி மகாமுனிவரும் சந்நிதியிலே பரவசர்களாய் நின்று

**பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களுக்கு அருள்**

அழ, "உங்களுக்கு வேண்டும் வரங்கள் யாவை? நாம் தருதற்குச் சொல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான். வியாக்கிரபாத மகாமுனிவர் தேவ தேவராகிய சிவ பெருமான் திருமுன்னே அன்பினால் மனங் கரைந்து, கண்ணீர் சொரிந்து, கை குவித்து நின்று, "சிவாகம விதிப்படி ஒவ்வொரு நாளும் யான் செய்யும் பூசையைக் கொண்டருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதஞ்சலி மகாமுனிவர், தம்மைப் பொருத்திய முடிவில்லாத கொடிய தீவினைகள் மனத்திலே பொருந்தி இருந்த வாசனையாகிய குற்றத்தினாலே பின்பும் வந்து சேரும் என்று நினைந்தோ, பூமியில் உள்ள ஏனைய அடியார்களுடைய துன்பம் ஒழியும்படி எண்ணியோ யாம் அறியோம் சென்று வணங்கி, "மின்னலை ஒத்த வாழ்வை உடைய ஆன்மாக்கள் கண்களினாலே தரிசிக்குங் காலந்தோறும் நிறைந்த ஞான ஒளியாகிய இச் சபையிலே அன்புடைய துணைவியாகிய உமாதேவி அம்மையாருடன் இன்று முதல் என்றும் ஆனந்த நடனம் புலப்படுத்தி அருளும் பொருட்டுத் திருவுளம் இரங்கும்" என்று வேண்டினர். அப்படியே திருவருள் செய்யும் பொருட்டுத் தேவ தேவராகிய சிவபெருமான் திருவுளங் கொண்டார்; அவ் இருவரும் ஆனந்தம் மேலிட்டு ஆடினார்கள்; மற்றைய முனிவர்கள் சப்த சமுத்திர ஓசை போலப் பேரொலி செய்து பரவசமானார்கள்; தேவர்கள் மழை போல் ஆகும்படி மலர்களைச் சொரிந்தனர். தேவதுந்துபிகள் ஒலிக்க, சங்கு ஓசை தழைக்க, தேவரும் பிறரும் ஆனந்தம் பொருந்தி வாழ, அவர்களிடத்து உள்ள கருணை மிகுதியினாலே இடையீடில்லாத ஆனந்தத்தை உண்டாக்கும் ஓர் உபதேசத்தை எங்கள் சிவபெருமானார் அவர்களுக்கு அருளிச்செய்தார். "நமக்கு விளக்கம் உள்ள இடம் ஞானம்; அந்த ஞானம் நம்மில் நின்று நீங்காது நம்மோடு ஒன்றித்துள்ளது; அது உண்மையாக இங்கு நின்றும் பிரியாது பூமிக்கு இருதய ஸ்தானமாய் இருக்கும்; சரீரத்தில் உள்ள ஆன்மாவில் நாம் தங்குதல் போன்றது இப் பூமியில் உள்ள ஞானத்திலே தங்குதல்; ஆதலினாலே தேவர்களே! இத் தலத்தை வளைத்து ஒரு சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாக்குங்கள்" என்று சபையிலே நிருத்தஞ் செய்யும் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினார். ஞானமாய் உள்ள அத் தலத்தைச் சுற்றிச் சபை செய்தற்கு உரிய திரவியம் இது என்று அறியும் பொருட்டுத் தேவர்கள் சந்நிதியிலே பூக்களைத் தூவி வணங்க, நடராசர் "பழைய வேதாகம நூல்களிலே ஞானமாகிய சபைக்கு இரண்மயகோசம் என்று பெயர் உண்டு; பூவுலத்தோர் காணும்பொழுது அது பொன்மயம் ஆகும்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

இவ்வண்ணந் தங்களுக்கு அருளிச்செய்த நன்மை ஆகிய திருவருளைத் தேவர்கள் சிரமேற் கொண்டு, சுத்தமாகிய பொன்னைக் கொண்டு சிவபெருமான் அருளிச்செய்த பிரகாரம் மகா சபையாக விளங்கச் செய்வாராகி அந்த ஞான சபைக்கு ஒப்பாக ஒரு கனகசபையை நிருமித்தார்கள்.

கனகசபை

பொன்மலை தன்னை அடைந்த பொருளைப் பொன்னாக்கினாற் போலவும், உப்பளம் தன்னிடத்து அகப்பட்ட புல்லை உப்பாக்கினாற் போலவும், இறைவன் ஆகிய சிவபெருமானுக்கு மேலான இடமாய் உள்ள ஞானத்தை விளக்கும் பகுதியை உடைய நிலைபெற்ற சிற்சபையானது தேவர்கள் செய்த அழகிய கனகசபையை அப்போது ஞானசபையாக ஆக்கியது. அன்று தொட்டு பிரமா, விட்டுணு முதலிய தேவர்களும், பதஞ்சலி மகாமுனிவரும், வியாக்கிரபாத மகாமுனிவர் முதலிய முனிவர்களும், சென்று வணங்கித் திசைகள் தோறும் போய் வாழும்படி அருட்செல்வராகிய சிவபெருமான் சிவகாமி அம்மையாரோடும் திரு நடனத்தைத் தரிசிப்பித்து மகிழ்ந்தருளினார். இவ்வண்ணம் திருநிருத்தஞ் செய்தருள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைவனத்தின்கண் உள்ள ஒன்றோடு ஒன்று மாறுபாடு நீங்கிய மிருகங்களும், பட்சிகளும் பரநாத வடிவமாகிய திருச்சிலம்பு ஓசையைக் கேட்டு, களித்து, சிவகாமி அம்மையாருடைய திருவடியை அடைந்து சுட்டறிவு ஒழிந்து சிவகாருண்ணியம் மிகுந்தன.

பதஞ்சலி மகாமுனிவர் விண்ணப்பித்தபடி வரம் பெற்ருர், அது கண்ட கணநாதர்கள், கண்ணீர் பெருக, நான்கு திருக்கரங்களையும் மூன்று திருக்கண் களையும், அழகிய உடைவாளையும், பிரம்பையும் ஒப்பில்லாத சாரூப்பியத்தையும் உடைய திருநந்திதேவரை வணங்கி முன் நின்ருர்கள். சிவபெருமானது திருமேனி வருத்தத் தைப் பாராது உம்முடைய நடனத்திலே இப் புயங்க நிலை பொருந்த எக்காலமும் நின்று அருளும் என்று வேண்டிக்கொண்ட பதஞ்சலி மகாமுனிவருக்கு யாது சொல்வோம்! வைத்தியன் இம் மருந்து நோயைப் போக்கும் என்ருல், நோயால் துன்புற்ருேன் அம் மருந்தை வேரோடு பிடுங்கி நறுக்கிச் சாறுக்கிக் கொள்ளுதலைப் போலும் இங்கும் அவர் செய்த காரியம் என்ருர்கள் கணநாதர்கள். அதைக் கேட்ட திருநந்தி தேவர் சிவபெருமானைச் சந்நிதியிலே பொருந்தும் எல்லா ஆன்மாக்களுடைய கண்களுக்குப் புலனுகும் பொருட்டு அனவரத தாண்டவஞ் செய்தருளும்படி பதஞ்சலி மகாமுனிவர் மிக்க வரம் பெற்ருர் என்ருல் சிவபெருமானுடைய ஆஞ்ஞை எப்படியாகும் என்று யார் அறிய வல்லவர்! இனி, அன்பினேடும் தரிசிப்பவர் களுக்குத் தரிசிக்கும் காலங்களை நியமித்தல் கடனுகும் என்று எண்ணினர். அங்ஙனமே சபை முழுவதும் தங்களுடைய விளங்கிய காவலாகவும், அப்பாற் பிரகாரத் துக்குக் காவல் நெருங்கிய இடங்களாகவும், அப்பாற்பட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுப் பிரகாரம் இரண்டின் காவல்களும் கோபம் மிக்க வலிய பேய்களும் காளிகளும் ஆகிய இவற்றின் காவலாக வும், புறக் காவல் வைரவ வர்க்கத்தாருடைய காவலாக வும் தங்கள் தங்களுள்ளே நெருங்கிக் காவல் செய்யும்படி

திரு நிருத்த தரிசன காலம்

கற்பித்து, பிராதக் காலமும், மத்தி யானமும் தேவர்களுக்குத் தரிசன காலமாகவும், இரவு தேவப் பெண் களுக்குத் தரிசன காலமாகவும், மேலே கூறிய எக் காலமும் மனிதர்களுக்குத் தரிசன காலமாகவும் ஒருவரும் போய்த் தரிசியாத நடு யாமம் இரண்டும் சிவபெருமானுக்கு இச்சைப்படி திருவிளையாடல் செய்துகொண்டு இருக்குங் காலமாகவுங் கற்பித்தார். "இந்த நிருத்தத்துக்கு இச் சுழுமுனைத் தானமாகிய சிதம்பரமே இடமாகும்" என்று சிவபெருமான் அருளிச்செய்தார்; கனகசபையிலே பொருந்தி அனவரத மும் அசைவற நிற்கும்படிக்கும் மகிழ்ந்து உடன்பட்டு அருளினார் என்றால், வேதாகமங்களை உணர்ந்தோர் பிரளய காலங்களிலே பிருதுவி முதல் நாதம் ஈறுகிய தத்துவங்கள் ஒடுங்கித் தோன்றும் எனக் கூறிய பொருள் பிரமாணம் அன்றோ! அந்தோ! இத் தலைவர் திருவுளப் பொருத்தம் யாவர்க்கும் மயக்கமாம். பிரமதேவரும், விட்டுணுவும், தேவர்களும், தேவேந்திரனும், வியாக்கிரபாத மகா முனிவரும் "நாகராசாவாகிய பதஞ்சலி மகாமுனிவரே இக் கருணை நிறைந்த திருநடனத்தை எல்லா ஆன்மாக்களும் தரிசிக்கும்படி வைத்த உமக்கு நாங்கள் பணிவிடை செய்வோம்; இது அன்றி வேறு யாது செய்ய வல்லோம்" என்றார்கள். இப்படியாகிய இவர்களோடும் பூதங்களும், பேய்களும், காளிகளும், முப்புரி நூலை அணிந்த மூவாயிர முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், இலக்குமியும், தேவர்களும், முத்தி வழுவுதல் இல்லாத தில்லை எல்லையின் உள்ளே சிவலிங்கப் பிரதிட்டை செய்து, சிவபெருமானை நாடோறும் வணங்கிக்கொண்டு இருந்தார்கள்.

இப்படி இருக்கும் நாளில், கங்கைக் கரையில் உள்ள அந்தர்வேதித் தேசம் விளங்கப் பிரமதேவர் யாகம் பண்ணத் தொடங்கினர்.

**பிரமதேவர் யாகம்**

இந்திரன் முதலிய தேவர்களுக்குப் பூசை பண்ணினர்; பூமியை உழுது சலம் நிறையக் கட்டிப் பெரிய யாகசாலைகளைக் கட்டுவித்து, இலக்குமி முதலியோரைத் தாபித்து, பருந்து படுத்து விதிப்படி அக் கருடன்மேல் சில குண்டங்களை அவ்வத் தானத்திலே அமைத்து, பசு நிரைகள் கட்டும் கம்பங்களும் சருவும், நெய்யும், தருப்பைப் புல்லும், சமித்தும், சுருக்குச் சுருவமும், குளிர்ந்த பரிதியும், பொலிந்த பொரிக் குவியல்களும், அநேக பழ மலைகளும் கொண்டு மனம் மகிழ்ந்து யாகத் தொழிலைச் செய்வோர்கள் தேவர்களை வருவிக்க அவர் அவர் மந்திரங்களைச் சொல்லினர். "அக்கினியே! சோமனே! வருணனே! வா! மூப்பில்லாத இந்திரனே வா! வா! சங்கரனே வா! வா!" என்று அழைத்து ஆவாகனஞ் செய்தார்கள். அப்படி ஆவாகனம் பண்ணவும் தேவர்கள் அங்கு வந்து சேரவில்லை. இதை அறிந்த பிரமதேவர் ஆராய்ந்து பார்க்குமளவில் அவர்கள் இன்பம் நிறைந்த சிதம்பரத்தில் ஒருங்கு இருத்தலை உணர்ந்தார். நாரதரை நோக்கி, "நீ போய் அவர்களை அழைத்து வரக்கடவாய்" என்றார் பிரமதேவர். நாரதமுனிவர் சிதம்பரத்திலே சென்று நடராசருடைய திருவடிகளிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி, தில்லைவாழ் அந்தணர்களையும் தேவர்களையும் கண்டு, "உங்கள் யாவரையும் யாகத்துக்கு வரும் பொருட்டு என்னை உங்களுக்குச் சொல்லும்படி பிரமதேவர் கூறி அனுப்பினார்" என்றார். அவ் வார்த்தையை அவர்கள் கேட்டுச் சிரித்து, "எங்கள் அவிப்பாகத்தை அக்கினியிலே ஓமம் பண்ணுக, நாம் பெற்றுக்கொள்ளுவோம்; நாம் இப் பூமியிலே தினமும் திருவருள் நிறைந்த சிவபெருமானது திருநிருத்த ஆனந்தத் தேன் நிறைந்த அமிர்தத்தை உண்போம்; இனி, உங்கள் அவியை உண்ணோம்," என்றார்கள். அதைக்கேட்ட நாரத முனிவர் பிரமதேவரிடம் வந்து கூறினார். பிரமதேவர் அதைக் கேட்டு தான் போய்க் கூறினால் இரங்கி வந்து யாகம் நிறைவேறச் செய்வார்கள் என்று எண்ணி, சிவபெருமான் வாழும் பழமை ஆகிய தில்லை எல்லையை அடைந்தார். தில்லைவாழந்தணர் அவரை எதிர்கொண்டார்கள். பிரமதேவர் அதற்கு மகிழ்ந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து சென்று, திருநிருத்தத்தை வணங்கி, விளக்கம் மிக்க சிவபெருமானிடம் "விபூதி அணிந்த திருமேனியை உடைய தலைவரே! சருப்ப ஆபரணரே! அடியேனும் உமது அடியாரோடு கூட அருள் செய்யும்" என்று விண்ணப்பித்தார். பின்பு யாகம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு விடைபெற்று, இடையூறு வராது திருமூலட்டானேசுரரை வணங்கி, சிவலிங்கப் பெருமானைத் தாபித்துள்ள தலங்கள் யாவும் வணங்கி, வியாக்கிரபாத மகாமுனிவரை அன்பினாலே அவர் கையைப் பிடித்து அவருடைய பர்ணசாலையுள் அடைந்தார். இந்திரனும் தேவர்களும் வியாக்கிரபாத மகாமுனிவரும் பதஞ்சலி மகாமுனிவரும் மூவாயிர முனிவர்களும் பிறரும் தம்மைச் சூழ இருப்ப நடுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமதேவர் இருந்தார். அவர் "நான் ஒரு யாகஞ் செய்கின்றேன். சிவபத்தியிற் சிறந்த நீங்கள் யாவரும் வந்து சேர வரந் தருவீர்களா?" என்று கேட்டார். பிரமதேவரது கருத்தை அறிந்த அவர்கள், சம்மதமின்றி யாகம் புத்திக்கு அன்றி முத்திக்கு ஏது ஆகாது என்று எண்ணித் தலைகவிழ்ந்தார்கள்; பிரமதேவர் இந்திரனை நோக்கி, "உன் எண்ணம் யாது?" என வினவ, "பிரமதேவரே! நீர் சொல்லியது அன்றோ எனக்குப் பொருந்திய செய்கை" என்றான் இந்திரன். தில்லைவாழந்தணர் ஒன்றுஞ் சொல்லாமைக்குப் பிரமதேவர் மனங் கலங்கினர், "யாகத்துக்கு மனமகிழ்ந்து வரக்கூடிய முனிவர்கள் எங்கும் உளர்; ஆயினும், உம் போலச் சிவபெருமானிடத்து இடையறாத அன்புக்கு ஒப்பான அன்புடையார் பிறர் இலர் என்றன்றோ உங்களை வேண்டிக்கொண்டேன்" என்று பலகாலும் கூறினர். பின்பு வியாக்கிரபாத மகாமுனிவருடைய கைமலரைப் பற்றி, "இனி ஆவது என்ன? நானே தூதனுமாய் வந்து என் காரியத்தைச் சொன்னால், யாகத்துக்குத் தில்லைவாழந்தணர்களை வரவிடுதல் அல்லது நீரே வருதல் அல்லவா முறைமை" என்றார். வியாக்கிரபாத மகாமுனிவர் மூவாயிரம் முனிவர்களும் தேவர்களும் யாகத்துக்குப் போகும் பொருட்டு விடை கொடுத்துத் தாமும் பிரமதேவருமாகச் சென்று கனகசபையிலே சிவபெருமானை வணங்கினர். முனிவர்களும் தேவர்களும் பிரிய மனம் இல்லாது சிவபெருமானை வணங்கி, இனி எங்கள் தூல சரீரம் இயமனுடனே போய்விடும் என்று விடை பெற்றார்கள். அவர்கள் சென்ற பின்பு வியாக்கிரபாத மகாமுனிவரும், பதஞ்சலி மகாமுனிவரும் சிவபெருமானைப் பிரிய மனம் இல்லாது சென்ற தில்லைவாழந்தணர்கள் திரும்பவுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுடன் வந்து சேரும் நாள் எந் நாளோ! என்று துக்கமுற்றனர். முடிவற்ற இன்பத்தை உடைய வியாக்கிரபாத மகாமுனிவர் இப்படி இருக்க, ஆன்மாக்களது சித்தம் விளங்கவும், சிதம்பரம் விளங்கவும், கௌடதேச இராசாவாகிய சிங்கவன்மர் ஆங்கு வந்தார்.

மூன்றாங் கதை முற்றிற்று.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

நான்காங் கதை

# இரணியவன்மர்

முன் ஒரு காலத்திலே தேவர்கள் சிவபெருமானை வணங்கிச் சிருஷ்டித் தொடக்கத்தை அருளிச்செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். சிவபெருமான் கால தத்துவத்தோடு கலந்து நின்று அருளிச்செய்வார் :— தனு, கரண, புவன, போகம் என்னும் நால்வகை மாயா காரியங்களையும் நடத்தி, அக் காரியங்கள் எல்லாவற்றை யும் மாயையோடு பொருந்தும்படி ஒடுக்கிய சங்கார காலம் ஆகிய இராக் காலம் விடியுங் காலத்தில், சிருஷ்டியிலே இச்சைகொண்டு ஞானக் கிரியா சத்திகளிலே கருத்தை வைத்து; சுத்தமாயையைச் செலுத்தி அதினின்றும் நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் தத்துவங்களைத் தோற்றுவித்து, முன்பு ஒடுக்கிய எழுத்து, மொழி, வேதம் முதலிய நூல்களையும், மந்திரம் முதலிய சுத்தாத்துவாக்களையும் உதிப்பித்து, அசுத்த மாயையினின்றும் கலை முதல் பிருதிவி ஈருகப் படைத்து, தமது சத்தியை அவைகளிலே நின்று பிரேரிக்கும்படி கற்பித்து, ஆன்மாக்கள் இரு வினைப் பயன்களை அவ்வப் புவனங்களிலே அநுபவிக்கும்படி செய்து, பிரம விட்டுணுக்களை உதிக்கச் செய்து, சிருஷ்டி, திதிகளைச் செய்து, மகா மேருமலையையும் திருப்பாற்கடலையும் அளக்கடவீர் என்று கொடுத்து அருளிப் பிராமணர்கள் படைக்கப்பட்டார்கள். "ஓமத்தின் பொருட்டு ஐந்து கோமாதாக்களையும் உண்டாக்கினேம். சுத்த மாயா சிருஷ்டியிலே மந்திரங்களை உண்டாக்கினேம், மந்திரமும் பிராமணரும் பசுவும் விருத்தியாக யாகத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பு வரலாறு

அவிப்பாகத்தைத் தேவர்கள் பெற, மாசம் மும் மழை பெய்யும், அதனல் உணவுகள் உண்டாகும், எல்லா ஆன்மாக்களும் துன்பம் நீங்கும். வேத நெறிப்படி ஒழுகியவர்கள் சுவர்க்கத்தை அடைவார்கள். சரியை, கிரியை, யோகங்களை அநுட்டித்தவர்கள் சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய பதங்களை அடைவர். பூரண ஞானத்தை உடையவர்கள் நம்மைப் பெற்றவர்களும் நம்முடனே நீக்கம் அற்றவர் களும ஆவார்கள். வலிய இரண்டு தருமர்கள் உளரவர். இவர்கள் பூவுலகில் வேதாகம நெறிப்படி நடவாத அறிவினரை நான்கு வகைத் தண்டனைகள் செய்து, அம் மார்க்கத்தில் நடத்துவர்; பலர் அறியாது இரகசியமாகச் செய்த பல தீவினைகளை நரகங்களில் அநுபவிக்கவுஞ் செய்வர்" என்று தேவாதிதேவராகிய சிவபெருமான் அருளிச்செய்தார். பின்பு சூரிய புத்திரருள் ஒருவனுக்கு ஆன்மாக்கள் செய்யுங் கருமங்களையும பலங்களையும் அறியும் பொருட்டு ஞானக்கண்ணையும் இயம பூமி அதிகாரத்தையும் கொடுத்தார்; மற்றொருவனுக்கு இரத்தின மகுடஞ் சூட்டி, ஆத்திமாலை அணிவித்துத் தேவர்கள் கையில் ஒப்பித்தருளினர். அத் தேவர்கள் அவனை மகா மேருமலைக்கு அருகில் உள்ள கௌட தேசத்தில் சேர்க்க மனு என்னும் பெயருடன் பூமிக்கு அரசன் ஆனன். இப்படியாக நான்கு மனுக்கள்

மனு ஆட்சி

ஒருவர் பின் ஒருவராக இருபத்தொரு சதுர்யுகம் அரசாண்டனர். இவர் களின் பின் ஐந்தாம் மனு அரசாண்டான். அவனுக்கு மனைவியர் இருவர். மூத்த மனைவி சரீரம் முழுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்க நிறமுடைய ஒரு குமாரனையும், இளைய மனைவி அழகிய இரண்டு குமாரரையும் பெற்றெடுத்தனர். இவர்கள் முறையே சிங்கவன்மா, வேதவன்மா, சுமதிவன்மா என அழைக்கப்பட்டனர். வேதச் சடங்குகள் யாவும் செய்து நிறைவேற்றினர். பின்பு யானை, குதிரை, தேர் முதலியன ஓட்டும் முறையையும் கற்றுத் தேறினர். சிங்கவருமா தமது சரீரக் குறைவினாலே இராச்சியம் பண்ணுகை குற்றம் உடையது. தம்பிமார் இருவருள் மனுவின் அனுமதியின்படி ஒருவன் அரசாள நாம் மன ஒடுக்கத்துடன் தவஞ் செய்தலே உறுதி என்று நினைத்தார். பின் மனுவை வணங்கி, "நான் எங்கும் உள்ள பரிசுத்த தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து, சிவபெருமானை உமது உடல் நலம் பெறுதற்காக வணங்கி, இங்கு வரும்படி அருள் செய்யும்" என்று கேட்டார். "இளைய குமாரர்கள் இளமை உடையர். நாமும் முதுமை உடையோம்; ஆதலின், நீ செய்ய முற்பட்ட தவம் செய்தல் ஆகுமோ?" என்று துக்கித்து, "நாற் படையும் சூழப் பூமியை அரசு ஆள்வதே தவமாகும்" என்றார் கௌடதேச இராசா. "உம்முடைய வலிய புயங்கள் இப் பூவுலகை இன்னும் கற்பாந்த காலம் அளவும் ஆள எனது தவமே பண்ணும்" என்று சிங்கவருமா கூறக் கேட்ட கௌடதேச இராசா தலை கவிழ்ந்திருந்தார்.

தலை கவிழ்ந்து இருத்தலே சம்மதம் என உட்கொண்டு அன்று இரவே சிங்கவருமா கௌடதேசத்தை விட்டு நீங்கிக் கங்கா நதி சமுத்திரத்தோடு சேருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கவன்மர் யாத்திரை

துறையிலே ஸ்நானஞ் செய்து, திருவருள் கிடைக்கும்படி காசிப் பதியில் தங்கினர். பின் வங்க தேசத்தையும், சாவுகதேசத்தையும் அடைந்தார். பின்பு ஒட்டியதேசஞ் சென்று, இடபக் கொடி உடைய பீமேசருடைய திருவடிகளை வணங்கி, அங்கு உள்ள தீர்த்தங்கள் நிறைந்த ஸ்தலங்களிலே போய் வழிபட்டு, காடுகள் நிறைந்த தெலுங்குதேசத்தை அடைந்தார். ஸ்ரீ சைலத்தை வணங்கி, அங்கு உள்ள சோதிலிங்கத்தைத் தரிசித்து, தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து, யானையும், பாம்பும் முத்தி ஆசையுடன் வழிபட்ட சீகாளத்தி மலையை அன்போடு வணங்கிப் போனார். அப்போது வில்லோடு தனியே ஓடுகின்ற வேடன் ஒருவனைக் கண்டு அவன் மூலம் காடுகளில் உள்ள புதுமைகளை அறிய விரும்பினார். வேடன் வணங்கிப் பின்வருமாறு கூறுவானாயினன்:—"அடியேன் மிருகங்களைத் தேடுங் காடு இது. இந்தக் காட்டைச் சூழ ஒரு காளையானவன் கறுத்த நாயைக் கொண்டு ஓடித் திரிவன்; குடித்தால் உயிர் உண்ணும் குளமும் உண்டு; குடித்தவர்களுக்கு மரணத்தை நீக்கும் குளமும் உண்டு; ஒரு வழியே போனால் திசை எட்டுந் தெரியாது மயங்குவர்; ஒரு வழியே போனால் நிழல் நீங்காத மரம் உண்டு; ஒரு வழியேபோனால் முதற்காணப்பட்டவர் பின்னர்க் காணப் படாமல் அவர் வார்த்தை மாத்திரம் கேட்கும்; ஒரு வழியே போனால் எட்டிப் பார்த்ததும் தமது நிழலோடு தாழும் விழப் பெறுங் கிணறு தோன்றும்; ஓசை மிக்க ஓர் ஆற்றங் கரையில் உள்ள மா மரத்து அடியில் ஒரு தேவர் இருப்பர்; அவர் அருகே கிணற்று வடிவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிலத்துவார வழியே வந்து வந்து ஒரு பச்சைப் பெண் இரண்டு பொழுதும் அவர் மேலே மலர் சொரிவாள்; குதிரைமேல் ஏறி வளை சண்டுங் கையிற் கொண்டு ஒரு செருக்கன் தினமும் உலாவுவான்; அவன் நீர் நிருந்த நதியினுள் மறைவன்; அவ்விடத்தைக் காணுதல் அரிது; இக் காட்டின் பெருமை அளவில்லாதவை" என்றான். சிங்கவருமா "நீ கூறிய மாவடித் தேவரைக் காட்டுவாய் ஆக" என்று கேட்க, வேடன் கொண்டு சென்று காட்ட, வேதங்களிலே தாம் முன்னே கற்ற இரகசியப் பொருளாகிய திருவேகம்பர் திருமுன் அணுகினர். அணுகி அன்போடு நமஸ்கரித்து, அருட்கண்ணர் ஆகிய சிவபெருமானைத் தரிசித்து, அவருடைய கீர்த்தியைத் துதித்து, இரண்டு பொழுதும் பூசை பண்ணி, அவருடைய திருவருள் பொருந்தும்படி இருந்தார். திருவேகப் நாதரைப் பிரியாது வேடன் கொடுக்குந் தினை, மாம்பழம், தேன் முதலிய உணவுகளை உண்டு இருக்கும் நாளில் ஒரு நாள், சிங்கவருமா ஆனவர் சூரனே! வருவாயாக என்று அழைத்துச் சொல்லுவாராயினர்:— "தெற்குச் சமுத்திரத்துக்கு நடுவே உள்ள நகரங்களிலே சஞ்சரித்து, காடுகள் உடைய மேற்குச் சமுத்திரக் கரை வழியாகப் பூப் பிரதக்ஷிணஞ் செய்தல் என் கொள்கை; என்னைக் காடுகள் எல்லாம கடப்பித்தல் உன் கடன்" என்று சிங்கவருமா தம்முடைய கருத்தை வெளிப்படுத்தினர். அதைக் கேட்ட வேடன் "உம்முடைய கருத்து இதுவாகில் நான் முன்னே போய் இக் காடுகளையும் வழிகளையும் பார்த்து வருவேன்" என்று சிங்கவருமாவிடம் விடை பெற்றான். சென்ற வேடன் காடுகளிலும் மலைகளிலும் சுரங்க வழிகளிலும் சுனைப் பக்கங்களிலும் ஓடி இளைத்துச் சில நாட்களின் பின் சிங்கவருமாவுக்குச் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். வந்த வேடன் இராசகுமாரருடைய பாதங்களை வணங்கி, "காடோ பெருங் காடு; பழைய வழிகள் ஏதுவும் இல்லை. சிறப்பான சங்க முகக் கடலும், சுழிமுகங்களும், குளிர்ந்த இளங் காடுகளும் எவ்விடத்தும் நெருங்கி உள்ளன. அப்பாலே போக வழி இல்லை, எதிரே ஓர் ஆறு ஓடுகிறது. நெருங்கிய தில்லைக் காடு செறிந்துள்ளது. அக் காடு எங்கும் மனம் நடுங்கும்படி தெய்வங்கள் உள; பொற்றாமரைப் பூக்கள் மலர்ந்துள்ள ஒரு சுனைக்கு அருகே ஒரு புலியன் ஆனவன் தனி இடத்தே இருந்து தாபிலக் கண்டேன். அப்பால் செல்லப் பயந்து திரும்பி வந்தேன்" என்றான். இரு வினைகளும் ஒத்த விளக்கம் உடைய சிங்கவருமா ஆனவர், ஆசாரியரைத் தேடுவதிலே ஆசை மிகுந்து அந்தப் புலியனைக் காட்டுவாயாக என்று சடுதியில் செல்வாராய், ஏகாம்பரநாதரை வணங்கி விடை கொண்டார். இறைவனைச் சேர்ப்பிக்கும் சிவசத்தியை ஒத்த வேடனானவன் இராசகுமாரரை அழைத்துக்கொண்டு காடுகளையும் ஆறுகளையும் கடந்து, பூமிக்கு இருதய ஸ்தானம் ஆகிய தில்லைவனத்தினது திருஎல்லையை அணுகுவித்தான். ஆன்மாக்களுடைய மலத்தைப் போக்குகின்ற அருட்சத்தி போன்ற சிவகங்கையையும் அதனுள் மலர்ந்துள்ள பொற்றாமரைகளையும் அவருக்குக் காட்டி, சித்திரம் என்னும்படி சமாதியைப் பொருந்தி இருந்த வியாக்கிரபாத மகாமுனிவரை அடைவித்தான்.

சிங்கவருமாவானவர் வியாக்கிரபாத மகாமுனிவர் இருந்த நிலைமையைக் கண்டு பயந்து, இவர் திருவுள்ளம் எப்படியோ தெரியாது, சமாதி நிலையில் இருந்து நீக்கினால் குற்றமாதலின் அரிய சாபம் இடுவாரோ என்னும் பயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொருந்தினர். இவரது சமாதி நிலை சடுதியின் நீங்கும்; இவர் உடுத்த மரவுரி உலராது இருக்கின்றது, பலாசிலை, தருப்பைப் புல், சமித்து, திருப் பூங்கூடை ஆகியன மேலிற் பசுமை கொடாது இருக்கின்றன, நீண்ட சடையை விரித்திருக்கின்றார், முனிவர் கோபிப்பாரோ! இவருக்குக் கோபம் உண்டாயின், அதனை இவராலேயே நீக்கிக் கொள்வோம் என்று கௌடதேச குமாரர் அவ் வியாக்கிரபாத மகாமுனிவருடைய சிவந்த திருவடிகளை வணங்கிக் கும்பிட்டு, வேடன் நீங்கத் தனித்து நின்றார். வியாக்கிரபாத மகாமுனிவர் உள்ளத்திலே நிருவிகற்பக் காட்சியால் சிவயோகத்தை அடைந்து நீங்கி, சவிகற்பக் காட்சியைப் பொருந்தி, அதனல் யோகப் பிரத்தியட்சத்தினலே தமது முன்னிலையிலே பொருந்திய சிங்கவருமாவைப் பார்த்து, இறப்பு, எதிர்வு, நிகழ்வு ஆகிய மூக் காலங்களை யும் தமது சித்த ஞானத்தினலே ஆராய்வாராயினர். வருகின்ற இந்தக் கற்பம், பாத்ம கற்பம். அக் காலத்தில் தமக்கும் பதஞ்சலி மகாமுனிவருக்கும் நீலகண்டராகிய சிவபெருமான் ஆனந்த நிருத்தந் தரிசிப்பித்தருளிய இக் கற்ப காலத்தில் அரசனாகி இருப்பவன் சூரியவமிசத்து ஐந்தாவது மனு என்று அறிந்தார்; அம் மனுவுக்கு மூன்று குமாரர்கள் உளர்; அவருள் முன் பிறந்தவன் இவன் என்று தெளிந்தார்; தமது கண்கள் குளிரக் கௌடதேச இராசகுமாரர் குவித்த கையோடு நின்று நடுங்க, அதனை வியாக்கிரபாத மகாமுனிவர் திருவுள்ள மகிழ்ச்சியுடன் பார்த்து, "சிங்கவன்மனே!" என்றார். பயந்து, "அடியேன்! அடியேன்!" என்றுசொல்லி, நீள விழுந்து வணங்கிய சிங்கவருமாவை வியாக்கிரபாத மகாமுனிவர் தமது திருமுன்னே அழைத்து இருத்தி, "நீ தனியே வந்த தன்மையைச் சொல்வாயாக" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினார். சிங்கவருமா வணங்கி, நான் கௌடதேச மனுவின் மகன். எனக்குத் தம்பிமார் இருவர் உளர்; நான் உமது திருவருளினாலே அநாதியே வருகின்ற பிறவி நோயை நீக்கிச் சிவபெருமானுடைய திருவடிகளை அடைதற்கு உரிய தவஞ் செய்ய எண்ணி வந்தேன் என்றார். வியாக்கிரபாத மகாமுனிவர் அதைக் கேட்டு, மனுவின் செங்கோல் உன்னுடையது, அவனும் வார்த்தகம உடையவனாய் இருத்தலினால், அரசு ஆளும் பேறுப்பு உன்னுடையதாய் இருக்க, நீ தவத்தைச் செய்வேன் என்று எண்ணுதல் தகாது என்று அருளினார். என் வடிவு குற்றம் உடையது ஆதலினால் அரசு ஆளுதற்கு உரியது அன்று; மனு ஆனவர் சுவர்க்கம் அடைந்தால் என்னுடைய தம்பியார் பூமியை ஆளுவார்கள். அடியேன் முத்திக் கரையை அடையத் திருக்கடைக்கண் சாத்தி அருளல் வேண்டும் என்றார். அதனை மகிழ்வுடன் கேட்ட வியாக்கிரபாத மகாமுனிவர், இவன தன் வடிவிற் குற்றம் நீங்கினால் அரசு ஆளும் விருப்பம் உடையவன். சிவபெருமான் திருவருள் பாலிப்பார் ஆயின், பத்தி மிக்க திருப்பணிக்கு ஆளாவன் என்று அறிந்து, அச் சிங்கவருமாவைக் கரையிலே நிறுத்தி, அருட்செல்வர் ஆகிய பதஞ்சலி மகாமுனிவரிடத்தே போய், அவருக்கு இச் சிங்கவருமாவின் வரவை அன்போடு சொல்லி, இருவருங்

பொற் சபைத் தரிசனம்

கூடிப் பொன் மயமான அழகிய சபையின் வாசலிலே வந்து காருண்ணிய நிருத்தத்தை வணங்குவதற்குக் காலம் வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே புகுந்தார்கள். சிங்கவருமா தமது வினையை நொந்து, வாவிக் கரையிலே மயங்கி நின்றார். முனிவர்கள் மிகுந்த பயத்துடன் சிங்கவருமாவின் வரவைச் சிவபெருமானுக்கு விண்ணப்பித்து, திரு நிருத்தத்தைப் புலப்படுத்தி, அவனை அடிமை கொண்டருளல் வேண்டும் என்று வேண்டினார்கள். சிவபெருமான் அவனைப் பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் பண்ணுவித்து, இங்கே அழைத்து வாருங்கள் என்று அருளினார். முனிவர்கள் ஆனந்த நிருத்தத்தைத் தரிசிப்பிக்கும்படி சிங்கவருமாவை வாவியிலே ஸ்நானம் பண்ணப் பணித்தார்கள். திருவருளினாலே சிவகங்கையிலே ஸ்நானம் பண்ணிய சிங்கவருமா ஆனவர் பால சூரியர் போலப் பொன் மயமாகப் பிரகாசித்து எழுந்தமையைக் கண்ட யாவரும் அதிசயித்தார்கள்; அதுவே பெயர்க் காரணமாக இரணியவன்மா என்னும் பெயரை இட்டார்கள். கருணை மிக்க வியாக்கிரபாத

**இரணியவருமா ஆனமை**

மகாமுனிவர் அவ் இரணியவன்மாவினுடைய வலக் காதிலே முத்தியைக் கொடுக்கும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உபதேசித்து, அவரைப் பெரும் கீர்த்தியை உடைய திருச்சிற்றம்பலத்துக்கு முன்னே நமஸ்கரிப்பித்தார். சிவபெருமானும் இரணியவன்மா தரிசிக்கும்படி திரு நிருத்தத்தைப் புலப்படுத்தி அருளினார். ஆனந்தத் திரு நிருத்தம் தெரிந்த உடனே, புளகமும் ஆனந்த நீரும் பொழிய மனம் உருகி நடுநடுங்கி, மிக அஞ்சி நாக்குத் தழுதழுக்கக் கைகள் ஆகிய தாமரை மலர்கள் தலையின் மேலே குவியப் பூமியிலே விழுந்து துதிப்பாராயினர்: —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாண்டகு மனங் கரைந்து மண்மிசை வீழ்ந்தி றைஞ்சி
நீண்டசெஞ் சடையாய் போற்றி; நின்மலா போற்றி; துன்ப
மீண்டுகொண் டுயிரு மாயா வுடலேயும் வேதசுஞ் செய்
தாண்டவங் கணனே போற்றி; அண்ணலே போற்றி போற்றி".

"அடவியிற் பிறந்து துன்பா ராக்கைகொண் டுழன்று வீழக்
கடவிய வென்னை மீட்டுன் கருணைவெள் ளத்த ழுத்தித்
திடமிகு மறைகள் காணத் திகழ்திரு மன்று ளாடு
நடநிலை காட்டி யாண்ட நாதனே போற்றி போற்றி".

இவ்வாறு துதித்த பின்பு "எம்பெருமானே! உமது புயங்க நிருத்தத்தைத் தரிசிக்கும் பொருட்டு முற்காலத்தில் அரிய தவங்களைச் செய்தேன். இக்காலத்தில் நிருத்த ஆனந்தப் பேற்றினால் இவ் அரிய முனிவர்களை ஒத்தேன். இனி வருங் காலத்தில் அடியேனைத் தொண்டு கொண்டு முடிவில்லாத அன்பைத் தந்து அருளும்" என்று விண்ணப்பஞ் செய்து விழுந்து வணங்கினார். இவ்வாறு துதிக்கத் தேவாதி தேவராகிய சிவபெருமான், "வியாக்கிரபாத மகாமுனிவனுக்கும், பதஞ்சலி மகா முனிவனுக்கும் நமக்கும மூவாயிரம் முனிவர்களுக்குந் தொண்டு செய்வாயாக" என்று அருளிச்செய்தார். வியாக்கிரபாத மகாமுனிவர் இரணியவன்மரோடும் மகிழ்ந்து, சிவபெருமான் அருளிச்செய்த திருவருளைச் சிரமேற் கொண்டு கூத்தாடி, திருக்கோயிலிலே சேவை செய்து சந்நிதியிலே தோத்திரம் பண்ணி, அன்பினாலே வணங்கித் துதித்து, பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் பிறப்பிடம் ஆகிய ஸ்ரீ மூலட்டானேசுரர் சந்நிதியை அடைந்தார். "இரணியவன்மனே! நாம் முன் வழிபட்ட இச் சிவலிங்கப் பெருமானாலே திரு நிருத்தந் தரிசிக்கப் பெற்றோம்" என்று அவ் இரணியவன்மாவுக்கு அருளிச்செய்து, மணத்தை உடைய புட்பத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரிவித்து, திருப்புலீச்சரத்தில் இருக்கின்ற சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் அன்பு பொருந்தத் துதித்து, நமஸ்கரிப்பித்தார். பின்பு, "திருவனந்தேச்சுரரை வழிபடுதற்கு வா!" என்று அழைத்துக் கொண்டு போய் நமஸ்கரிப்பித்து, திரும்பி வந்து பர்ணசாலையின் உள்ளே புகுந்து, தம் மனைவியை நோக்கிச் "சதியே! உபமன்னியனுக்குப் பின்பு பெறுது பெற்ற இப் பிள்ளையைக் கைக் கொள்ளக்கடவாய்" என்றார். அதைக் கேட்ட இரணிய வன்மர் என்னும் குமாரர் மாதாவுடைய திருவடிகளை வணங்கித் துதிக்க, சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உபதேசித்த

**இரணியவன்மர் புலிமுனிக்கு மகனாய் வாழல்**

நாளே பிறந்த நாளாகக் கொண்டு சபாநாயகர் எமக்குத் தந்து அருளிய இரத்தினம் என்று அப் பிள்ளையைக் கைக் கொண்டாள். இராசகுமாரர் இன்பம் பொருந்திப் பிதாவும் மாதாவும் தம் மேல் வைத்த அன்பினாலே பிள்ளையாய் வாழும் நாளிலே, வேதத்தை அறிந்த வியாக்கிரபாத மகாமுனிவர் கிருபையினாலே பிள்ளையை அழைத்து, அருகில் இருத்தி உபதேசஞ் செய்வார் ஆயினர். "மனம் வாக்குக்களைக் கடந்த சிவபெருமான், பிரபஞ்சம் எங்கும் நீக்கமற நிறைந்து வியாபித்து நிற்கும் உண்மை எவருக்கும் விளங்காது. ஆதலினால், முத்தியிற் செல்லுதல் எளிது அன்று என்று சுத்தராகிய சிவபெருமானே திருவுளங் கொண்டு, எமது புண்ணிய வகையினாலே அகன்ற பூமியிலே எண்ணில்லாத திருப்பதிகளை வைத்து அருளினார். அவைகளுள்ளே சிவபெருமானால் முத்தியைக் கொடுக்கும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கப்பட்டன ஆகிய தலங்கள் அறுபத்தெட்டு ஆகும்; அத் தலங்களுள் ஆறு தலங்கள் விசேடமாகும்; அவைகளுள் திருவாரூர், காசி, சிதம்பரம் என்னும் மூன்றும் விசேடமாகும் என்று பெரியோர் கூறினர்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளுள்ளும் நில்லாத எம் போல்வார்க்குச் சிவம் வேருக நிற்காத சாயுச்சிய முத்தியைக் கொடுத்தலும் மூன்று தலங்களுள்ளும் திருவாரூரிலே பிறந்தவர்களும், காசியிலே இறந்தவர்களும், சிதம்பரத்திலே திருவடி தரிசனஞ் செய்தவர்களும் சிவத்தை அடைவார்கள். திருவாரூரிலே பிறந்தேம் இல்லை; காசியிலே மரித்தேம் இல்லை; சனன மரணங்களால் ஆகும் இவ் இரண்டு முத்தி இன்பங்களும் நெடுங் காலத்தின் பின்பு சித்திப்பனவாம்; நாம் இருக்கின்ற தில்லைவனம் ஞானயோகம் பொருந்திய தலமாம்; இதன் கண்ணே பொருந்தித் திருவடியைத் தரிசிக்கச் சீவன்முத்தர்களாய்த் திரிவர். சிவசத்தி வடிவினதாகிய ஊர், அழிவில்லாத ஊர் என்று எண்ணில்லாத சாத்திரங்கள் புகழ, சிவபெருமான் எம்மை ஏறுகின்ற புலி போலப் பண்ணிப் பெருமைப்படுத்திய ஊரும் ஒப்பில்லாத ஊரும் நாம் வாழும் ஊராகிய பெரும்பற்றப் புலியூராம். சிவபெருமான் சிவகாமியம்மையார் தரிசிக்கச் சடை பின்னே தாழ்ந்து விளங்க ஒப்பில்லாத சபையிலே நின்று திரு நிருத்தஞ் செய்தருளுந் தன்மையை நீ தரிசிக்கப் பெற்ருய். அச் சிவபெருமான் திரு நிருத்தத்தை எம் எதிரே தரிசிப்பிக்க வந்தார் என்ற திருச்சின்ன ஒலி விளங்கிய பொழுதில், தம்மிடத்து அன்பும் எம்முடைய என்பும் ஜம்பொறி உணர்ச்சியும் சரீரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரும் உருகும்படி நம்மை ஆட்கொண்டு அருளினமையை நீ கண்டாய் அன்றோ. தென் நாட்டார் கனகசபையை நீங்கி முத்தியைத் தேடிக் காசியிலே சென்றால் அது அங்கே கிடைப்பதில்லை; வட நாட்டார் சிதம்பரம் முத்தி தரும் என்று வந்து சேர்ந்தால் இது பாசம் நீக்கி முத்தியைக் கொடுக்கும் என்று வேதாகமம் வல்லார் சொன்னார் என்றால், சிவபெருமானது திருவருள் இரக்கத்தினது எல்லையைச் — சிதம்பர தலத்தின் மகிமையை — யார் சொல்ல வல்லவர்! சிறிது நேரமாயினும் திருவடியை விளங்கத் தரிசித்து நின்றவர்கள் (காணும்படி நின்றவர்கள்) அநாதியே தொடர்கின்ற பிறவி நீங்கினவர்கள் ஆவார்கள். வேத வடிவினராகிய சிவபெருமானுடைய தில்லையம்பலத்தை அடையப் பெற்றவர்கள் எக் காலமும் பரிபூரண ஞானத்தை உடையவர்களாவார்கள், சிவத்தோடு இரண்டற்று இருப்பர்; ஆயினும், பஞ்ச கிருத்திய கருத்தாக்கள் ஆகார்கள். ஏனெனின், கிருத்தியத்திலே இச்சை இல்லாதவர்கள் ஆதலால், நிருத்த ஆனந்தத்தினாலே நிறைந்தவராவர். அவர் எழுந்தருளி இருக்கும் புவனமும் சிற்சபையாம். சிவபெருமானது திரு நிருத்தத்தைச் சிவகாமியம்மையார் தரிசிக்கின்ற இந்தச் சுத்த சபை யாவருக்கும் பொது. சூதமுனிவரும், வியாசமுனிவரும், அவர் குமாரர் ஆகிய சுகமுனிவரும், சௌனகமுனிவரும், அவர் குமாரரும், என்றென்றும் எண்ணில்லாத முனிவர்களும் இத்தில்லைவனத்தினது திருஎல்லையிலே பொருந்தினார்கள். மார்கழி மாசத்துத் திருவாதிரை நட்சத்திரத்தினதாய் வருகின்ற திருவிழா எழுச்சியைச் சேவித்து, சிவகங்கையிலே ஸ்நானம் பண்ணி, திரு நிருத்தைத் துதித்து வணங்கித் திருவருளைப்

பொருந்தி, சித்தத்திலே நிறைந்த அன்பு பெருகி, அவர்களும் நல்ல தவத்தை உடையவர்கள் ஆயினார்கள். தவத்தை உடைய குமாரனே! எமது பிதாவாகிய மத்தியந்தின மகாமுனிவருடைய கருணையினாலே நாமும் இங்கே பொருந்தினோம்; பூக்கள் கொய்தற்குக் கோங்கு முதலிய மரங்களில் ஏறும் பொருட்டு வியாக்கிரபாதன் என்னும் மேன்மையைப் பெற்றோம். இதனால் விதிப்படி பூ எடுத்துப் பூசித்து, எல்லாப் பெருமைகளையும் பெற்றோம். உனக்கு முன்னோன் ஆகிய உபமன்னியன் என்கின்ற குமாரன் முன்பு மாமனார் ஆகிய வசிட்ட மகாமுனிவருடைய ஆச்சிரமத்திலே காமதேனுவின் பாலைக் குடித்து வந்தான்; பின்பு இங்கு வந்து நம்மிடத்துப் பால் பெருமையால் சிவபெருமானிடத்து மிகுந்த அன்பு பெருகித் திருப்பாற்கடலை அவர் திருவருளினாலே பெற்றான்; பிருகுமுனிவருடைய ஆச்சிரமத்திலே சாபம் பெற்றவர் ஆகிய விஷ்ணுமூர்த்தியின் அவதாரம் ஆகிய கிருஷ்ணரையும் துவாரகாபுரியிலே போய்க் கண்டான்; கருணையோடும் அக் கிருஷ்ணருடைய சிரசிலே திருவடி சூட்டி, சிவலிங்கப் பெருமானை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்து, இவ்விடத்திலே வந்து பின்பும் போயினான்; இன்று நாளைக்குள்ளே வருவான். ஆதிசேடன் பதஞ்சலி வடிவினராகி அன்பினால் நெடுநாட்கள் நம்மோடு கூடி இருந்த பின்பு, சிவபெருமான் திரு நிருத்தத்தையும் தெய்வத்தன்மை மிக்க கனகசபையையும் புலப்படுத்தித் தேவர்களையும் எங்களோடு ஆட்கொண்டு அருளினார். சாமவேதத் தலைவர்களுள் ஒருவர் ஆகிய சைமினிமுனிவர் இச் சிதம்பரத்திலே வந்து திரு நிருத்தத்தை வணங்கி வாழ்வு பெற்று, மேலாகிய செந்தாமரை மலர் போலுந் திருவடி

சிதம்பரச் சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் வேதங்களினாலே இன்பம் மிகத் துதித்து இன்பம் அடைந்தார். கொலைஞனும் செட்டியாய் உள்ளவனும் மகா பாதகனும் ஆகிய துர்க்கடன் என்பான், சிதம்பரத்திலே உள்ள பாசம் அறுத்தான் துறையிலே மாசி மாசத்து மக தீர்த்தத்துக்குச் சிவபெருமான் எழுந்தருளும்போது படகோடும தாழ எண்ணில்லாதவர்கள் அவனோடும் முத்தி பெற்றார்கள். புண்ணிய தலங்களின் தீர்த்தங்கள் தேவர்களைப் போல்வன; சிதம்பரத்திலே உள்ள சகல தீர்த்தங்களும் பரிசன வேதிகளாகிப் பிரம விட்டுணுக்களைப் போல்வன; சிவகங்கை சிவபெருமான் போன்று தலைமை உடையதாகித் தண்ணளியே வடிவாய் யாவருக்கும் எளிதாய் இருக்கும். கங்கை, காளிந்தி, காவேரி, கன்னி முதலிய சகல தீர்த்தங்களும் தங்கள் இடத்துள்ள பாவங்கள் போகும்படி வணங்குகின்ற சிவகங்கையே சகல பாவங்களையும் போக்க வல்லது. உன்னுடைய உடற் குற்றத்தைப் போக்கிப் பொன் வடிவத்தைத் தந்த திருக்குளம் சபையிலே திரு நிருத்தஞ் செய்தருளும் சிவபெருமானுடைய திருவருள் ஆகும். சருக்கரையும் அதன் சுவையும் போலத் தமது திருமேனி ஒளியும் நமது மனசிலே விளையும் நிருத்த ஆனந்தமும் அன்னியம் இல்லாமையைப் புலப்படுத்தி, உள்ளும் புறமும் என்ற பேதமற்ற திருவருளையுந் தந்த கருணைத் திறத்தை வேறு யாவர் பெற்றுள்ளவர்! சிவபெருமான் இகத்தினும் பரத்தினும் முத்தியை எளிதிலே அருளிச்செய்யுஞ் சபை இதுவே" என்று வேதத்தை அறிந்த வியாக்கிரபாத மகாமுனிவர் அருளிச்செய்தார். குமாரர் ஆகிய இரணியவன்மர் கண்களினின்றும் அருவி பொழிய நெக்குருகி அம் முனிவருடைய திருவடிகளை நமஸ்கரித்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரசில் வைத்தார். அத் திருவடியைக் கண்களிலும் இதயத்திலும் பொருந்த வைத்து, மீளவும் வணங்கித் துதித்து, முகம் மிக மலர்ந்து, "உமது காருண்ணியம் எனக்கு ஞானத்தைத் தந்து அருளியது" என்று விண்ணப்பஞ் செய்து, தம் அன்பினுலே அவர் உள்ளத்தே மகிழ்ச்சி பெருகச் செய்தார். இங்ஙனமாகத் திருவருளினுலே வாழ்கின்ற இளமையாகிய இராசகுமாரர் நாடோறும் சிவகங்கையிலே ஸ்நானம் செய்து, உயிர்த் துணைவராகிய சிவபெருமானை நமஸ்கரித்து, வியாக்கிரபாத மகாமுனிவருக்கும் பதஞ்சலி மகாமுனிவருக்கும் தொண்டுகள் செய்து இளஞ் சூரியர் போன்று இருந்தார்.

**இரணியவன்மாவை அரசாக்கல்**

இங்ஙனம் இவர் இருக்கும் நாளிலே, மனு என்னும் அரசன் வசிட்டமுனிவரிடத்தே சிங்கவன்மனை அரசாட்சியை நீதியோடும் பொருந்தும்படி செய்விக்க விண்ணப்பஞ் செய்து துறக்கம் அடைந்தான். வசிட்ட மகா முனிவர் மந்திரிமாரோடும் குறுநில மன்னர்களோடும் இராசகுமாரர்களோடும் செய்யவேண்டிய கிருத்தியங்களைச் செய்து நிறைவேற்றினர்; பின்பு அரசாட்சிக்கு யாது செய்வோம்! என்று இராசகுமாரர்களை வினவ, "முன்பு பிதா இசைந்ததையே செய்தருளுவீர்" என்றார்கள். நீதி யுடைய வசிட்ட மகாமுனிவர் தாம் சிங்கவன்மாவைத் தேடி வரும் வரையும் வெற்றியுடன் அவர்களை இருக்கும்படி பணித்துத் தாம் தெற்குத் திசை குறித்துச் செல்வார் ஆயினர். அங்கதேசத்தையும், வங்கதேசத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திக் கங்கையிலே ஸ்நானஞ் செய்து, எங்குந் தேடி, காசியை வணங்கி, மாளுவ, குர்சர தேசங்களேயும், தெலுங்கு தேசத்தையுங் கடந்து, சிங்கவன்மா இருக்கின்ற தில்லைவனத்தைப் பொருந்தினர். திருக் களாமரத்தினது நீழலில் எழுந்தளி இருக்குஞ் சிவலிங்கப் பெருமானே வசிட்ட மகாமுனிவர் வந்து அடைந்தமையை அறிந்து வியாக்கிரபாத மகாமுனிவர் "பூசையை முடித்து நான் வருகின்றேன்; நீ முன்னே செல்வாயாக" என்று கூற, குமாரராகிய இரணியவன்மரும் மகிழ்ந்து போய் வசிட்ட மகாமுனிவரைக் கண்டு நமஸ்கரித்தார். தந்தை இறந்தமையைக் குறிப்பால் அறிந்து துன்பம் அடைகின்ற இரணியவன்மர் பக்கலில் வியாக்கிரபாத மகாமுனிவரும, பதஞ்சலி மகாமுனிவரும வந்து ஞானத்கினலே யாவற்றை யும் உணர்ந்தார்கள். "சரீரம் நிலையில்லாதது; தந்தை, மனைவி, மைந்தர் முதலிய பாசங்களே மெல்வினை கூட்ட வல்வினை பிரிக்கும், அருளில்லாதவர்கள் போன்று துக்கமுறுதல் தகாது" என்று இரணியவன்மர் ஆறும்படி வியாக்கிரபாத மகாமுனிவர் அருளிச்செய்தார். கீர்த்தி யும் மேன்மையும் மிக்க வசிட்ட மகாமுனிவர் "நீங்கள் இருவீரும் பெரிய தவத்தைச் செய்து பெற்ற பெரு வாழ்வை, பொன் உருவம் அடைந்த குமாரனும நாமும் பூமியில் உள்ளவர்களும், தேவர்களும் நீங்காத அரிய பிறவி எல்லையைக் கடக்கும்படி அருளிச்செய்தீர்கள்" என்று நன்றி பாராட்டினர். அது கேட்ட வியாக்கிரபாத மகாமுனிவர் இரணியவன்மர் சிதம்பரத்திலே பெற்ற சிறப்புப் பொருந்திய திருவருளுக்கு எல்லை இல்லை என்று அருளிச்செய்து, வசிட்ட மகாமுனிவரை அழைத்துக்கொண்டு போய்த் திருக்குளத்திலே ஸ்நானம் பண்ணச் செய்து, பழமை பொருந்திய சிற்சபையினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உபதேசித்து, நடராஜர் சந்நிதியிலே நமஸ்கரிப்பித்தார். வசிட்ட மகாமுனிவர் திரு நிருத்தத்தை நமஸ்கரித்து, ஸ்ரீ மூலட்டானேசுரரது ஒப்பில்லாத திருவடிகளை வணங்கி, திருப்புலீச்சரத்தை நமஸ்கரித்து, தில்லை எங்கணும் உள்ள சிவலிங்கங்களை வணங்கி, வியாக்கிரபாத மகாமுனிவருடைய பர்ணசாலையிலே பொருந்தி விருந்துண்டு இருந்தார். சாயங்காலத்திலே சந்தியாவந்தனம் பண்ணி, பதஞ்சலி மகாமுனிவருடைய பர்ணசாலையிலே போய் எமது பிதாவாகிய திருவனந்தேசுரருடைய பாதங்களை வணங்கி, மீண்டு வியாக்கிரபாத மகாமுனிவருடைய பர்ணசாலைக்கு வந்து இரவைக் கழித்து, வைகறையிலே எழுந்து, பதஞ்சலி மகாமுனிவரும், வியாக்கிரபாத மகாமுனிவரும் வந்து பொருந்த வசிட்ட மகாமுனிவரும் பொருந்தி இருந்தார். இராசராசராகிய இரணியவன்மரும் முனிவர்கள் முன்னே வந்து நமஸ்காரம் பண்ணி, நான் பிறர் போலத் துன்பம் அடையேன். அருட் பிதாக்களாகிய இவர்களுக்குப் பிள்ளை நான். மேலாகிய மோட்சத்தை அடைவேன் என்று சொல்லி அவர்கள் முன்பு இருந்த பின்பு வசிட்ட மகாமுனிவர் தாம் எண்ணி வந்த காரியத்தைத் துக்கம் நீங்கும்படி சொல்லுவாராயினர். கௌடதேச இராசா இச் சிங்கவன்மனுக்குப் பூமியைக் கொடுத்து, நீதியினாலே நடத்தும்படி கூறி, உயிர் நீங்கிய பின்பு, உயிர் நீங்கிய உடம்பு போல அந் நகரம் இருந்தது. இவனை அழைத்து வர இவன் தம்பிமார்கள் வேண்டிக்கொண்டார்கள் என்றார். வியாக்கிரபாத மகாமுனிவர் வசிட்ட மகாமுனிவர் வந்த கருத்தை அறிந்து, இரணியவன்மரின் முகத்தைப் பார்க்க, அவர் தமது கருத்தை முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்தமையால் யாதும் பேசாது மௌனமாய் இருந்தார். வியாக்கிரபாத மகாமுனிவர் "இனி உன் செய்கைக்குப் பொருந்தத் தக்க காரணத்தை நீ சொல்வாயாக" என்று அருளிச்செய்தார். அருளிச்செய்தலும் "முடிவில்லாத இராச்சியமும், சகல சித்திகளும் ஒழியாத தேவர் பதங்களும் நிலையில்லாதன ஆதலினால் விரும்பேன்; சிறியேனை ஆண்டருளிய திரு முனிவரே! உமது சந்நிதியிலே யான் செய்துகொண்டு வருகின்ற இந்த வழிபாட்டிலே தவறுதலை ஆகிய வாழ்வையே தந்து அருள்வீராக" என்று விண்ணப்பஞ் செய்தார். "உன் கருத்து இங்ஙனமாயின், நீ வசிட்ட மகாமுனிவருடனே அங்கே போய், இராச கிரீடத்தையும், யானை, குதிரை, தேர், காலாட்படைகளையும், நவரத்தினம், பொன் உள்ளிட்ட போக நுகர்ச்சிக்குரிய திரவியங்களையும், மந்திரிமார்களையும் கைக் கொண்டு சீக்கிரம் வருவாயாக" என்று வியாக்கிரபாத மகாமுனிவர் அருளிச்செய்து, "கனகசபையிலே திரு நிருத்தத்தை வணங்கிக்கொண்டு நம்முடன் இருந்தவர்களுள்ளே முதன்மையான மூவாயிரம் முனிவர்களையும யாகத்துக்கு என்று பிரமா வந்து அழைத்துக்கொண்டு போயினார்; அந்தர்வேதிக்குப் போய் அவர்களையும் உன்னுடனே அழைத்துக்கொண்டு வருவாயாக" என்றும் அருளிச்செய்தார். உமது திருவுள்ளத்துக்குப் பொருந்தியது எதுவோ அதுவே அடியேனுலே செய்யத்தக்க தவம் என்று இரணியவன்மர் விண்ணப்பஞ் செய்ய, வியாக்கிரபாத மகாமுனிவர் மகிழ்ந்து, அவ் இரணியவன்மரோடும் உடனே திரு நிருத்தத்தை வணங்கி, "இந்த அடியேங்களுடைய பணிவிடைகளை நடத்துவதற்கு விரைவோடும் வரும்படி இவன் போதல் வேண்டும்; எம் பெருமானே! திருவருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்; இது எங்கள் விண்ணப்பம்” என்றார். சிவபெருமானும அளவிறந்த காருண்ணியத்தையும் அநுஞ்ஞையையும் கொடுத்தருள, இரணியவன்மர் அளவிடற்கரிய இன்பத்தை அடைந்து, எமது பிதாவாகிய சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானஞ் செய்து, அக் கடவுளினுடைய சம்மதியினலே விடை கொண்டு வியாக்கிரபாத மகாமுனிவருடைய பர்ணசாலைக்கு மீண்டு சென்றார்; வசிட்ட மகாமுனிவரும் பூமியிலே எட்டு உறுப்பும் பொருந்தும்படி சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு வந்தார். தாயார் விபூதி தரித்துவிட வணங்கி, தமது ஆன்மா அவர்களிடத்து இருக்க, பதஞ்சலி மகாமுனிவருடைய திருவடிகளையும் வணங்கிச் சென்று, சிவபெருமானுடைய தில்லைவனத்தினது திருஎல்லையை வணங்கிச் செல்வாராகிய இரணியவன்மர் வியாக்கிரபாத மகாமுனிவர் தம்மைத் தீக்ஷை செய்து ஆண்டருளிய முறைகளை விரிக்கும் வார்த்தைகளே நிகழ மிக விரைவாகப் போவாராயினர். போய்க் கௌடதேசத்தில் உள்ள பட்டினத்தின் மாளிகையில் புகுதலும, தம்பியாரும் அளவில்லாத பெண்களும் கடல் ஒலி போல அழுதார்கள். தம்பிமார் முதலிய எல்லோருடைய துயரத்தையும் நீக்கித் தமது துன்பமும் நீங்கி, சிறிய தாய்மாருடைய துன்பத்தையும் நீக்கினர். பின்பு இரணியவன்மர் பெரியோர்களை வரவழைத்துத் தமது மேனி அழகை அவர்களுக்குக் காட்டி, திரு நிருத்த ஒலியைச் சிந்தித்து ஒரு நாள் ஓர் ஊழிக் காலம் போலக் கழித்து, மந்திரிமார்களை அழைத்துத் தமது மேனியில் உள்ள குற்றத்தை நீக்கிப் பொன் வடிவமாகச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிய வியாக்கிரபாத மகாமுனிவருடைய திருவடிகளை வழிபடும் பொருட்டு என்னோடு வருவீர்களாயின் வாருங்கள் என்று சொல்லினர். இங்ஙனம வருவீர்களாயின் சிவகாமியம்மையார் ஒரு பாகமாக நின்றுநடித்தரு அருளும் சிவபெருமானது திரு நிருத்தத்தையும் நீங்கள் காணப் பெறுவீர்கள் என்றார். மந்திரிமார்கள் அது கேட்டு மகிழ்ந்து, தக்ஷிண தேசத்தில் உள்ள தில்லைவனத்தை நோக்கிப் பிரயாணம் புறப்படக் கடவீர்கள் என்று எழுச்சி முரசை அறைவித்தார்கள். முடிவில்லாத பொன்னாகிய குன்றுகளை இயந்திரத்தை உடைய தேர்க் கூட்டங்களும், ஒட்டகங்களும், குதிரைகளும், யானைகளும, காலாட் படைகளும், அகன்ற வண்டிகளும் தாங்கிச் செல்ல, கௌடதேசத்தில் உள்ள ஆடவர்களும், பெண்களும், சைவ வைதிக மார்க்கத்தவர்களும் மகிழ்ந்து புறப்பட்டார்கள். சிறிய தாயார்கள், தம்பியர் இருவர்கள், மற்றைக் குமாரர்கள், குமாரத்திகள், ஊழியக்காரிகள், மெய்காப்பாளர்கள், ஆரியர்கள், அகத்தடியார்கள், இன்னும் அளவற்றவர்களோடும் இரணியவன்மர் சென்று அந்தர்வேதியில் இருக்கின்ற முனிவர்களை அடைந்தார். மூவாயிரவர் ஆகிய நீங்கள் தில்லைப் பதியில் உள்ள கனகசபையின் கண்ணே நடித்தருளும் நம்மை ஆளாக உடைய சிவபெருமானுடைய திருவடிகளை நாடோறும் விரும்பி வணங்கும் பொருட்டு வரும்படி வியாக்கிரபாத மகாமுனிவர் அருளிச்செய்தார் என்று விண்ணப்பஞ் செய்து, மூவாயிரம் மாணிக்கத் தேர்களில்

இரணியவன்மர் அரசைக் கையேற்று மீளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம் முனிவர்கள் தங்களுடைய வைதிகாக்கினிகளை அன்போடு கொண்டேறி, புதல்வர்களையும் புதல்வியரைரையும் பத்தினிகளையும் ஏற்றினார்கள்; கலைமான் தோலையும் நீக்கடைகோலையும் பிறவற்றையும் நிறைய ஏற்றி, தேருக்கு முன்னாகக் குதிரைகளைப் பூட்டிக்கொண்டு செல்ல, செல்லத் தகுந்தனவாகிய ஓமத்துக்கு வேண்டிய பசுக்களும் முன்னே சென்றன; அளவற்ற அடியார்கள் சேவிக்கின்ற ஒலியும், அரசர்கள் துதிக்கின்ற வந்தனையின் ஒலியும், தெய்வத்தன்மை பொருந்திய முனிவர்களின் தேர்களது ஒலியும, சேனைகளின் ஒலியும், யானைகளின் ஒலியும், குதிரைகளின் ஒலியும் ஏழு சமுத்திரத்தினும் மிக்கு ஒலிக்கக் கொடிப் படை முன்னே செல்லக் கண் நுழையாத பெரிய காட்டு வழியே இரணியவன்மர் நெடுந் தூரஞ் செல்வாராயினர். அரசர்கள் தங்கள் தங்கள் தேசத்தின் எல்லை வரையுஞ் சென்று வழிபட்டார்கள், காட்டில் உள்ள கொடிய விலங்குகளும் வழி விலகின; ஆங்காங்கு காணப்படும திரவியங்கள் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு தில்லைவனத்தினது திருஎல்லையை அடைந்தார். இரணியவன்மர் குதிரையை முன்னே செலுத்தி, வியாக்கிரபாத மகாமுனிவர் திருமுன்னே நமஸ்கரித்துத் துதித்து, தமக்குப் பின்னே வருகின்ற பெருஞ் செல்வத்தை விண்ணப்பஞ் செய்ய, வியாக்கிரபாத மகாமுனிவர் மகிழ்ந்து, ஆசீர்வதித்துத் தாமும் பதஞ்சலி மகாமுனிவருமாக அருட் செல்வத்தை உடைய முனிவர்கள் எழுந்தருளி வருகின்ற சிறப்பைக் காண அவர்கள் எதிரே செல்ல, அவர்களுந் தேரினின்றும் இறங்கினார்கள். அம் முனிவர்கள் வியாக்கிரபாத மகாமுனிவரைத் துதித்து, அவர் தழுவ வாழ்வுற்று, 'உம்முடைய கருணையினாலே இவ்விடத்திற்குத் திரும்பி

வரும் வழியைப் பெற்ரேம்; இன்னும் பிரமா வந்து கேட்கின் சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளைப் பிரிந்து போகும்படி எங்களை விடாதொழிக" என்ருர்கள். மாணிக்கத் தேர்களைக் கனசசபையின் வடமேற்குத் திசையிலே நிறுத்திச் சிவபெருமானுடைய திருவருளினலே தங்களை வியாக்கிரபாத மகாமுனிவருக்கு எண்ணிக் காட்ட, மூவாயிரவரில் ஒருவர் குறைய இரணியவன்மர் திகைத்து நின்ருர். அவர் படும் வருத்தத்தைக் கண்டு அநாதிமலமுத்தராயும உயிர்களுக்கு மாதாவும் பிதாவுமாய் உள்ள சிவபெருமான் தேவர்களும் கேட்குமபடி "அம முனிவர்கள் எல்லோரும் நமக்கு ஒப்பாவார்கள். நாம் அவர்களுக்கு ஒப்பாவோம்" என்று சொல்லி, "நாம் அவர்களுள்ளே ஒருவர்" என்று அருளிச்செய்தார். இங்ஙனம அருளிச்செய்த உண்மையை எல்லோரும் கேட்டனர்; இரணியவன்மர் அம்முனிவர்களது மேன்மையை உணர்ந்து நடுநடுங்கிக்கொண்டு போய் அவர்களுடைய திருவடிகளை நமஸ்கரித்தார்; தேவர்கள் பூ மழையைப் பொழிந்தார்கள். முனிவர்கள் தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான் கொடுத்த திருவருளினலே தங்களைத் தாங்களே அறிந்து பயப்பட்டு, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து வாழ்வு பெற்று, தங்களுள்ளே தாங்கள் நமஸ்கரித்துப் பரவசர்களாய்த் துதித்து, "எங்களை எழு பிறப்பினும் அடிமைகளாகக் கொண்டருளும" என்று சோமன் கட்டிய தண்டுடனே குணலைக் கூத்தாடினர்கள். கௌடதேச குமாரர் ஆகிய இரணியவன்மர் இம் முனிவர்களுக்கு தொண்டு செய்ய நான் என்ன புண்ணியம செய்தேன்! என்று கும்பிட்டு நின்று வணங்கித் துதிக்க, வியாக்கிரபாத மகாமுனிவர் இரணியவன்மருடைய குணத்தைப் புகழ, எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசபையில் உள்ள பொன் போலும் திருவடிகளை வணங்கித் துதித்து, இரணியவன்மரைப் புகழ்ந்துகொண்டு போயினர்கள். திரு நிருத்த நிலையைப் பிரியாதவனாகிய ஒரு ஞானி ஓரிடத்தில் இருந்தால் பாசம் ஆகிய நெருக்கிய அந்தகாரம் நீங்கி, ஒரு கோடி விற்கிடை வெளியாகும் என்று சாத்திரங்கள் சொல்லுமாயின், உறுதி மிக்க தவத்தை உடைய முனிவர்கள் அநேகர் நெருங்கி இருத்தலினாலே விளங்குகின்ற தில்லைவனமும் இருள் நீங்கியது என்று சொல்லுவது அதிசயமாகாது. அரிய தவத்தை உடைய முனிவர்கள் எல்லோரும் தில்லையம்பலத்தைச் சூழ இருப்ப, திருத்தமுற்ற குமாரராகிய இரணியவன்மர் கனகசபையின் கிழக்குத் திக்கிலே தமது சேனைகள் நிறைந்திருக்கப் புகழப்படுகின்ற கொற்றவன்குடி என்னும் படைவீடு செய்து அங்கே இருந்தார்.

**இரணியவன்மர் கொற்றவன்குடியில் வசித்தல்**

நான்காங் கதை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாங் கதை

# திருவிழா எடுத்தமை.

அளவில்லாத பெரிய முனிவர்கள் பிதாவாகிய சிவபெருமானுடைய திரு நிருத்தத்தைக் கும்பிட்டு இன்பம் நிறையுமபடி பூமியிலே நமஸ்கரித்து, சன்மானம் இல்லாத அன்போடு வாழும் நாளிலே, அம் முனிவர்கள் எல்லோரும் சித்தம் ஒருப்பட்டு ஆராய்ந்து திருவருளை அறியும் எண்ணம் உடையவர்களாகி, ஸ்ரீ நடராசர் பக்கத்தில் திருக்கூட்டமாகி இருந்தார்கள். இருந்த பின்பு வியாக்கிரபாத மகாமுனிவர் "கௌடதேச குமாரர் மூவருள்ளும் மூத்தவராகிய இரணியவன்மர் இந்தப் பூமியைக் காக்கக் கடவர். குற்றமற்ற தம்பிமார் இருவரும் தங்கள் கௌடதேசத்தைக் காக்கக் கடவர்" என்று வெளிப்படுத்தினர். பதஞ்சலி மகாமுனிவரும், உபமன்னியு மகாமுனிவரும், அவருடைய நன் மாமனாகிய வசிட்ட மகாமுனிவரும் திருவுடை அந்தணர்களாகிய மூவாயிரம் முனிவர்களும் மற்றைய யாவர்களும் மகிழ்ந்து, "அப்படியே ஆகுக" என்றார்கள்; இரணியவன்மரை இராச மரபின்படி விவாகஞ் செய்வித்து, கனகசபையின் பக்கத்திலே ஒரு மண்டபத்தைச் செய்வித்தார்கள். அம் மண்டபத்திலே மங்கலமாகிய திருமாலைகளும், தோரணங்களும், தூண்டாவிளக்குகளும், கனக சிங்காசனமும், அட்ட மங்கலம் வகுத்த பலகையின் கூட்டமும், நெய்யும், நெற்பொரியும், தருப்பை அறுகு முதலிய புற்களும், புட்பமும், நூல்கள் சுற்றிய கும்பத்தோடு

**இரணியவன்மர் அரசாளுதல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கலசங்களும் அமைத்து, ஒரு இராத்திரி முழுதும் அதிவாச கிருத்தியத்தைச் செய்தார்கள். உதயகாலந் தொடங்கிக் கிருத்தியம் நடந்து முடிந்து, சுபமுகூர்த்தத்திலே இரணியவன்மர் அபிடேகம் செய்யப்பெற்று, பாரம்பரியம் பொருந்திய பெரிய மகுடமும், பொன் மாலையும், பழைய வீரகட்கமும் பெற்று, சிங்காசனத்தில் இருந்த பின்பு இரணியவன்மர் பெயரால் ஒரு வருடம் இரு வருடம் என்று திருவாண்டெழுத்திட்டார்கள். தந்தையாராகிய வியாக்கிரபாத மகாமுனிவரை இரணியவன்மர் வணங்க, திருவுளம் மகிழ்ந்து தழுவி ஆசீர்வாதம் பண்ணி, "இவ் வியாக்கிரபுரத்தைக் காப்பாயாக" என்று அருளிச்செய்து, புலிக்கொடியை அவருடைய கையிலே கொடுத்து "வருவாயாக" என்று பிரதக்ஷிணமாகக் கொண்டு, உள்ளே புகுந்து, கருணை மிக்கு நடித்தருளும் சிவபெருமானுடைய சந்நிதியிலே பூக்களைச் சொரிந்து நமஸ்கரிக்கப் பண்ணி, அந் நடராசருடைய திருவடிகள் இரண்டையும் எடுத்து அவ்விரணியவன்மருடைய சிரசின் மேலே தரிப்பித்தார்; அப்போது எல்லோரும் பிரீதி வார்த்தை சொல்லினார்கள். "என்னுடைய முடிவில்லாத செல்வங்கள் உம்முடையவைகளாகக் கடவன. இனி, இப் பூமியில் ஆறில் ஒன்றாகிய இறைப் பொருளை நீரே ஏற்றருளும், இவ் இறைப் பொருளிலே ஐந்தில் ஒன்றை அடியேனுக்கும் சேனைகளுக்கும் சீவனத்தின் பொருட்டுத் தந்து அருளும். என்னுடைய வமிசத்திலே வந்தவர்கள் இத்தன்மையில் இருந்து வழுவினார்களாயின் அதனைப் பொறுத்துத் திருவருள் செய்து அடிமைத் தொழில் கொண்டருளும்" என்று இரணியவன்மர் வேண்டிக்கொண்டார். ஸ்ரீ நடராசரும் "அப்படியே செய்வோம்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாய்மலர்ந்தருளியபோது, கண்களிலே மழை போல நீர் சொரிய அழுது நமஸ்கரித்து எழுந்த குமாரனை வியாக்கிரபாத மகாமுனிவர் அழைத்துக்கொண்டு சென்று, ஸ்ரீ திருமூலத்தானமுடைய தமபிரானுருடைய திருவடிகளை அடைந்தார். அங்கும் நமஸ்கரிப்பித்து, யானைமேல் கொண்டு திருநகரத்தை வலஞ் செய்விக்க, சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, ஆத்திமாலையை அணிந்த இரணியவன்மர் இலக்குமி வாசஞ் செய்கின்ற திருமாளிகையின் உள்ளே புகுந்தார். ஆத்திமாலையை அணிந்த சோழராகிய இரணியவன்மர் என்னுடைய தம்பிமார் கௌடதேசத்தை இராசதானியாகக் கொண்டு காக்கக் கடவர் என்று கூறி, ஆபரணங்கள், மாலைகள், சாமரங்கள், பீலிக் குடைகள், நீண்ட குடைகள், பொன் ஆசனங்கள், தேர் நிரைகள், யானைகள், குதிரைகள், பெரிய திரவியங்கள் முதலியவற்றைக் கொடுத்தார். அத் தினத்திலே வெற்றியை உடைய திரு நிருத்தத்தை வணங்கிய தம்பிமார்கள் தமது பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்துக்கொண்டு போயினர். இரணியவன்மர் வியாக்கிரபாத மகாமுனிவர் திருமுன்னே வணங்கித் தில்லைவாழந்தணர்களுக்கு வழிபாட்டின் பொருட்டுத் திருமாளிகைகள் கட்ட அவரின் உத்தரவு பெற்றுக் கட்டுவிக்கத் தொடங்கினார். பெரிய வீதியைச் சூழும்படி பல எழு நிலை மாளிகைகளையும் சூளிகைகளையும் பலகணிகளையும் நிலைத் தோரணங்கள் பொருந்திய வாயில்களையும் நிலைத் தேர் வரிசைகளையும் கட்டுவித்த சோழராசராகிய இரணியவன்மர் பணிவுடன் முனிவர்கள் எல்லோரையும் குடி புகுவித்தார். வீட்டுக்கு வேண்டும் பதார்த்தங்களை நிலங்கள் தோறும் வைப்பித்தார். தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய சிவபெருமான் மகிழ்ந்து திரு நிருத்தஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தருளுகின்ற அறிதற்கரிய ஞான ஆகாயமும் தேவர்கள் விரும்பிச் சரீரத்தைப் பெற்றதனாலாகிய பயனுமாகிய திருவம்பலம் ஒன்றைத் தாமும் செய்வித்தார். பொன், நவரத்தினம் முதலியவற்றை மலைகள் போல முன்னே கொண்டுவந்து குவித்து, நடராசருடைய திருவருளைப் பெற்று, வியாக்கிரபாத மகாமுனிவருடைய சம்மதியுடனே தெய்வத் தச்சனைக் கொண்டு திருவம்பலம் ஒன்றைச் செய்து, அறிந்துகொள்ளும்படி இலக்க வரிசைகளை இடுவித்து அவைகளைக் கைக்கொண்டார். உள்ளே இரத்தினக் குறட்டையும் சமமாகிய கனவரிசையையும் அழகுறச் செய்து, தூண் நிரைகளையும், உத்தரங்களையும், நல்ல பலகைக் கூட்டத்தையும் வளைவு பொருந்திய கைத்தொகைகளையும் தூபிகளையும் இசைத்து அழகுறப் பண்ணி, பல இரத்தினமாலைகளை அழகுறத் தூக்கி, பொன்னாலாகிய முன் மதிலையும் கோபுர வாயிலையும் பொருந்தப் பண்ணி, ஸ்ரீ மூலட்டானேசுரருக்கும் பொன் மயமாக விளங்குகின்ற ஒரு திருக்கோயில் செய்வித்தார்.

இப் பிரகாரம் திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்வித்த இரணியவன்மரை முனிவர்கள் எல்லோரும் வாழ்த்தி, அவருடைய சொல்லுதற்கரிய கீர்த்தியைப் பாராட்டி விபூதி சாத்தி "இனிச் சிவாகம விதிப்படி பூசைக்கு நிலைபெறும் வண்ணம் நிபந்தம் வகுத்தலுஞ் சிவபெருமான் விதித்த பணியேயாம்" என்றனர். இரணியவன்மர் வியாக்கிரபாத மகாமுனிவரை வணங்கித் துதித்து, "அடியேனுக்குத் திருத்தமுற்ற தவமாவது இங்கு அருளப்பட்டது அன்றோ" என்று விண்ணப்பஞ் செய்தார். ஒரு நாள் இரணியவன்மர் பேரம்பலத்திலே இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானுக்குத் திருமஞ்சனம், புட்பம், திருவமுது முதலானவை நிறையும்படி கற்பித்து, நித்தியோற்சவம் நடத்துதற்கு வேண்டும் திரவியம் கொடுத்து, பதஞ்சலி மகாமுனிவராலே செய்வித்த சாத்திரத்தை முனிவர்கள் இன்பம் மேலிட யானைமேல் ஏற்றி, திருக்கோயிலை வலம் வந்து சபையினுள்ளே பிரவேசித்தார்கள். முனிவர்கள் முற்கூறிய சாத்திரத்திலே பொருந்திய நைமித்திகங்களை வகுக்கும் பொருட்டு மாச நக்ஷத்திரத்தோறும் செய்யப்படும் மாச பூசையைச் சித்திரைமாசம் வரத், தமனக பூசையை நடாத்துவதற்கு முன் நகரை அலங்காரஞ் செய்வித்து, எமது பிதாவாகிய சிவபெருமானுக்கு அழகிய வசந்தோற்சவம் நடத்துவித்தார்கள். ஆடி மாசத்திலே புதிய நீர்விளையாட்டு உற்சவமும், திருவாண்டெழுத்து உற்சவமும் பொருந்தும்படி செய்வித்தார்கள். ஆடிமாசம் முதற் புரட்டாதிமாசம் வரையில் உள்ள சதுர்த்தசி, அட்டமி என்னுந் திதிகளுள் ஒன்றிலே நிகழ்கிற பூசைக்குரிய அதிகமும் குறைவுமாகிய குற்றம் நீங்கும் பொருட்டு முந்நூல் ஒரு நூலாக ஒன்பதாய் உள்ள இருபத்தேழு இழையை உடைய பந்தாகப் பண்ணி யாகத்தை விரதங்களோடு செய்து, பவித்திரத்தைச் சாத்தி, ஐப்பசிமாசத்துப் பூரத் திருவிழாவுக்கு வேண்டுவனவற்றை அமைத்தார்கள். சிவகாமியம்மையார் சிவபெருமான் குமாரர்களோடும் திருவிழாக் கொண்டருள எழுந்தருளி வருகின்ற சிறப்பை உடைய விரதோற்சவத்தை விதியோடு நடத்தி, விட்டுணுவும் பிரமாவும் காணும்படி தோன்றிய சிவந்த அக்கினிப் பிழம்பாகிய சிவலிங்கப் பெருமானைக் கணங்களெல்லாம் வந்து தியானித்துத் தாங்களும் அக்கினிவடிவாய் நிறைந்திருத்தல் போல வளமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய அழகிய தீபோற்சவத்தைச் செய்தார்கள். "இருடிகள் எல்லோரும் முன்னாளிலே மார்கழி மாசத்துத் திருவாதிரை நட்சத்திரத்தில் வந்து சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து, கனகசபையிலே நமஸ்கரித்துத் துதித்துப் பூமியிலே தகும்படி கும்பிட்டுப் போயினார்கள்" என்று வியாக்கிரபாத மகாமுனிவர் அருளிச்செய்ய, இரணியவன்மர் "நீங்கள் இந்தச் சிறப்புப் பொருந்திய திருவிழாவை நடத்துங்கள்" என்று சொல்ல, தில்லையில் வாழுந் திருவுடை அந்தணர்கள் இது எமது பிதாவாகிய சிவபெருமானுடைய திரு நட்சத்திரம் என்று, சிதம்பரத்திலே பொருந்திய நவ தீர்த்தங்களையும் மற்றத் தீர்த்தங்களையும் கொண்டு திருமஞ்சன விழாவை நடாத்தினார்கள் தைமாசத்துப் பூச நட்சத்திரத்திலே அன்னமலை போலும் பெரிய நிவேதனமாகிய திருப்பாவாடையைத் திருவமுது செய்வித்துத் துதித்தார்கள். பின்பு ஆனிமாசத்தில் அருள் பொருந்திய உத்தர நட்சத்திரத்திலே ஆனித் திருநாள் உற்சவம் நடக்கும்படி பண்ணினார். இரணியவன்மரும் குற்றமில்லாத முனிவர்களும் சிவபெருமான் சந்நிதியிலே நின்று, இருபத்தேழுநாட்களும் எம்முடைய பிதாவாகிய சிவபெருமானது திருவிழாவினால் ஆனந்தமடைதற்கும் மலங்களினின்றும் நீங்கித் திருவடிகளை வணங்குவதற்கும் பூமியில் உள்ளவர்களும் சுவர்க்கத்தில் உள்ளவர்களும் விட்டுணுவும் பிரமாவும் உருத்திரர் முதலிய மேலோர்களும் வாருங்கள் என்று இடபக் கொடியைப் பிரதக்ஷிணமாகக் கொண்டுவந்து சந்நிதியிலே ஏற்றுவித்தார்கள். பூலோகத்தின்கண் உள்ள ஆடவர்களும், பெண்களும், சுவர்க்கலோகத்தின்கண் உள்ள தேவர்களும், அரம்பையர்களும் மற்றையோர்களும் மிக்க களிப்போடும் திக்குகள் தோறும் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்துவார்கள்; நமக்கு உள்ள பிறவிநோயை நீக்கினேம் என்பார்கள்; பொற் கோபுரங்களைக் கையினுற் கும்பிட்டு நமஸ்கரிப்பார்கள் பொன் மயமாகிய திருவீதிகளைக் கண்டு வாழ்வார்கள்; சிவபெருமானுடைய கனகசபையை வணங்கிப் பரவசர்களாவார்கள்; திரு நிருத்தத்தை எதிரே கண்டு துதித்து ஆடுவார்கள்; பாடுவார்கள்.

**திருவிழா எடுத்தல்**

இவ்வியல்போடு வரும் எல்லாத் திக்கில் உள்ளவர்களும் நாம என்பது நீங்கி, இப்போது நம்மால் அடையத் தகுவதோ என்று பாராட்ட, சிற்றின்பத்தை அனுபவித்தலை உடைய இப் பிறவிகள், இந் நிருத்த ஆனந்தத்தை அநுபவித்தற்கு வாய்த்தனவே என்று மகிழ்கின்ற அடியார்கள் நிலையான வாழ்வு பெற்றனர்; மூவாயிரம் முனிவர்களும் ஒழியாத வேத ஒலியோடு சிவபெருமானுக்கு உரிமையாகிய, கையினலே செய்யத் தக்க பணிகளை முடிக்க, இரணியவன்மர் திருவிழா எடுத்தற்கு வேண்டுந் தொழில்களைச் செய்வாராயினர். சூரியன் முதலிய நவக்கிரகங்களுக்கும் நவரத்தினங்களினல் ஆபரணங்கள் பொருந்தச் செய்து, பரிகலங்களும், திருவாசிகைகளும், சிங்காசனங்களும், மகர தோரணங்களும், விரிந்த வெண்குடைகளும், கொடிகளும் என்ற இவைகளைச் சிவபெருமானுக்கு உரியவைகளாக்கிப் பொற் படியிலே சேர்த்தார். மதக் களிப்பை உடைய யானை நிரைகளையும், இரத்தினங்களாற் செய்யப்பட்ட நிலைத் தேர்களையும், வலிய பெரிய மேருமலை போலுந் தேர்களையும், சாமரை நிரைகளையும், பீலிக் குடைகளையும், ஆகாயத்தைத் தொடுங் கொடிப் புடைவைகளையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்வார்த்தைகள் உடைய பெண்களையும், படகம் முதலிய வாத்தியங்களையும், நிருத்தஞ் செய்வோர்களையும், கடல் போலப் பொருந்துவித்தார். திருவீதியிலே தேவர்களின் முடிகளினின்றும் உதிர்ந்து கிடந்த இரத்தினங்களைத் திருவலகினாலே தள்ளிப் பெருக்கி, சுத்த சலத்தையும் பூவையும் பொரியையும் நிறைவித்து, உயர்ந்த திண்ணைகளை வெள்ளைப் பரிவட்டத்தால் அலங்கரித்துப் பூரண கும்பங்களையும் தீபங்களையும் திக்குகடோறும் அலங்காரமாக அமைத்து, பொற்பாலிகை அங்குரார்ப்பணஞ் செய்து, வாசனைத் திரவியங்களால் ஆகிய கலவைச் சாந்தினாலே மெழுகி, வீடுகடோறும் கலியாணச் சிறப்பு விளங்க வாயில்கடோறும் கமுகுகளையும், வாழைகளையும் காட்டி, நெடுநிலை மாளிகைகள் தோறும் கொடிகளிலே மணி கட்டிவிட்டார்கள். எழு நிலை பொருந்திய திருமாடங்கடோறும் வாழும் நீண்ட சடையையுடைய முனிவர்களும், அவர்களுடைய திருவடிகளிலே சேர்பவர்களும், வடநூல்களைப் படிப்பவர்களும் திருவமுதைச் சமைப்பவர்களும், சமைத்தவைகளைப் பந்தியாக வைத்துப் படைப்பவர்களும் ஆகிய இவர்கள், அரஹர! என்று உச்சரிக்கும் அடியார்கள் அளவின்றி வர வர, அவர்களை எதிர்கொண்டார்கள். தேவர்களும், அரம்பையர்களும், இந்திரனும், இருடிகளும், பூதர்களும், கணநாதர்களும், மனித உருக்கொண்டு வந்து வழிபட, முதல் திருநாளிலே விக்கினேசுரரை அளவிறந்த பால், பழம் முதலியவைகளைக் கூட்டித் திருவமுது செய்வித்து, உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளி வரும் திருப்பணிகளை நடாத்தினர்கள். சிவபெருமான் ஆனித் திருநாளிலே திருவிழாக் கொண்டருளும்போது பூமியிலே எட்டுறுப்பும் பொருந்தும்படி வணங்கும் அடியார்கள் சிவத்தோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டற்ற நிலையினால் பேரானந்தம் அடைந்தி, இன்ப துன்பங்களில் மயங்காது, உள்ளத்திலே நிறைந்த களிப்பினால் திருவருளை அடைந்தவர்களாய் எங்கும் நெருங்கினார்கள். கனகசபையின் கண்ணே நடிக்கின்ற திருநிருத்த ராஜருடைய இரத்தின மாளிகையிலே தேவர் கூட்டம் மனிதர் கூட்டத்துடன் கூடி நின்று, "அடியேங்களை ஆண்டருளும்" என்று விண்ணப்பஞ் செய்ய, அக் கடவுளுடைய திரு நெற்றியிலே சாத்தப்பட்ட கரிய அகிற் சாந்து அன்னையுடையவரது பாசத்தின் ஒளி திரண்டு ஒளியை யுடைய திருமேனியில் நிழல் எழுகின்றது என்று சொல்லும்படி, உயர்வாகிய திருவாணி உத்தரத் திருவிழாவைச் செய்வித்தார்கள்.

வியாக்கிரபாத மகாமுனிவர் அருளையுடைய இரணிய வன்மர் எதிரே ஒரு முற்கதையைச் சொல்லுவார் :— "குருவானவர் ஒரு அசுரனை வெல்லும் பொருட்டு வருணனுக்கு யுத்தம் செய்யும் உபாயத்தைக் கற்பிக்கும்படி இருளிலே வர, அவ் வருணன் அக் குருவைப் பகைவன் என்று எண்ணி விட்ட பாசத்தினாலே அக் குரு மரணமானார். அவ் வருணனுக்கு அக் கொலைப் பாவம் காரணமாக ஒரு பிசாசு வடிவந் தோன்றி, இரண்டு கால்களிலும் இரண்டு கைகளும் பொருந்தக் கழுத்தோடு கூடும்படி கட்டி, சமுத்திரத்திலே நெடுநாள் வைத்துத் துன்புறுத்துவதை ஒருவராலும் தடுக்க முடியவில்லை. மழை பெய்ய நிலையாது வருணன் வருந்திக் கிடப்ப, நீர் கிடைப்பதற்கு அரிதாகிப் பூமியில் உள்ளவர்களும், சுவர்க்கத்தில் உள்ளவர்களும் உமாதேவி சமேதராய்க் கொன்றைமலர் மாலையை அணிந்த சிவபெருமானை அவ் வருணனின் பாவத்தை நீக்கியருளும்படி மிக வணங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள். சிவபெருமான் சமுத்திரத்திற்கு எதிரே எழுந்தருளிப் பாசக்கட்டு அற்றுப் போகும்படி அருள் செய்தார்; அப்போது வருணன் துதித்து, இந் நாளிலே இத் துறையிலே ஸ்நானஞ் செய்தவர் பாசம் நீங்கி, உயர்ந்த முத்தியை அடைவதற்கும் சிவபெருமான் எழுந்தருளப் பெறுவதற்கும் வரம் பெற்றான்; இந் நாள் மாசித் திருமகம்" என்று வியாக்கிர பாத மகாமுனிவர் சொல்ல,

**மாசித் திருமகம்**

அம் மாசித் திருமகம் பொருந்த இரணிய வன்மர் பொலிவாகிய கொடியை வருணன் சிவபெருமான் கடற்கரைக்கு எழுந்தருளும்படி வரம் பெற்ற நாள் பத்தாம் நாளாக, ஒன்பது நாள் திருவிழாவை விக்கினமின்றி நடத்தும் பொருட்டு, விநாயகக்கடவுளுக்குத் தேன், பழம், அப்பம், பயறு, அவல் முதலியன பலவற்றை நிவேதித்து, நித்தமும் வாழ்வுறு தற்கு ஏதுவாகிய திருவிழாக் காட்சியைச் சிவபெருமான் தந்தருள, மனம் கசிந்து தம்வசமிழந்தனர். இந்திரன், விட்டுணு, பிரமா, முதலாய தேவர்களும், அரம்பையர் களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும், கணநாதர் களும், வேத புருடர்களும், நாரதமுனிவரும், மற்றை யோரும் மனிதரோடு பொருந்தி "உயர்ந்த திருச் சபையையுடையவரே! அருள் செய்யும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அன்பர்களுடைய மனம் இன்பத்தை அடையும்படி சிவபெருமான் யாவராலும் புகழப்படும் திருப்பவனிகளைத் தந்தருளத் தேவர்கள் முத்தியும் இகழப் படும் இத் தரிசனத் திருவெழுச்சிக்கு வந்து சிவகங்கை யிலும், பரமானந்த கூபத்திலும் ஸ்நானஞ் செய்து, ஆனந்த நீர் பெருகத் துதித்து வணங்கித் திருவிழாச் சிறப்பைச் சேவித்து [illegible]க்குப் போகும் வழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரித்தார்கள். திருப்பவனிக்கு முன்னே யானைக் கூட்டங்களும், காலாட் கூட்டமும், தோத்திரங்களை மிகவும் செய்கின்ற அடியார் கூட்டமும், சிவாஸ்திரமும், பத்துத் திக்கினும் காவலாகவுடைய தசாயுத ரூபிகள் சூழ்ந்த படைகளோடு பழகிய வாத்தியங்களும் மிக முழங்க, உயர்ந்த தேவர்கள் பூமியில் உள்ள மனிதர்களோடு கலந்து தங்களுக்கு முன் விதித்த விதியைக் கைக் கொண்டு பக்கங்களிலே சேவித்தார்கள். சிவபெருமான் எழுந்தருளி வருகின்றதைக் கண்ட வருணன் மிக்க களிப்புடன் எதிர்கொண்டான். வருணன் தன்னிடத்தே பொருந்திய ஒளி வடிவாகிய சிவத்தைச் சகள வடிவமாகத் தெளியும்படி தரிசித்தபொழுது, இடையிலே தன்னை அடைந்த துன்பத்தை விளைவித்த பந்தம் அறும்படி அருளிய திருவடிகளிலே திரைகளாகிய கைகளால் நமஸ்கரிக்க, மழுவையும் கட்டுவாங்கத்தையும் உடைய சிவபெருமான் சந்நிதியிலே சமுத்திரத்திலே ஸ்நானஞ் செய்த அடியார்களும் மாயாபந்தம் அழியச் சிவபெருமானிடத்தே அருளை மிகப் பெற்றார்கள். வருணன் திரைகளாகிய கைகளினாலே நவரத்தினங்கள் திரண்ட பெரிய பொன், அகிற் கட்டைகள், பட்டுக்கள், வஸ்திரங்கள், வெண்சாமரங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, பனிநீர், கருப்பூரம், மதயானை நிரைகள் முதலியவற்றை எங்கும் நிறைந்த பொன் போலுந் திருவடிகளிலே காணிக்கையாக இடப் பாசபந்தம் அறுத்த துறையைப் பொருந்தித் தேவர்களோடும் மனிதர்களோடும் திருமஞ்சனஞ் செய்தருளி, மணற் குன்றுடைய வெளியை அடைந்தார். அப்போது, தேசத்தவர்களுடைய ஓசையும், சமுத்திரத்தின் ஓசையும், திருச்சின்னங்களின் ஓசையும், திக்குகளைப் பொருந்த, மணம் மிக்க பூஞ்சோலையினிடத்தே ஆறி, கணநாதர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடும் தேவர்களோடும் கழி வழியாக எழுந்தருளி வந்தார் சிவபெருமான். சமுத்திரத்தில் உள்ள வளங்களை அளவில்லாது கொண்டுவந்து கழிக்கரையிலே காணிக்கையாக இட்டுத் திருவடிகள் இரண்டையும் வணங்கி, "எம்பெருமானே! இம் மாசி மகம் போன்று எம் மாசி மகத்திலும் அடியேனும் மற்றை அன்பர்களும் வரம் பெறும் பொருட்டு வரந் தந்தருளல் வேண்டும்" என்று வருணன் திருவடிகள் இரண்டையுந் துதித்து, வரம் பெற்று, விடை பெற்று மீண்டான். சந்திரனைத் தரித்தருளிய சிவபெருமான் கனகசபையின் உள்ளே புகுந்தருளினர். மாச நட்சத்திரங்கள் அனைத்திலும் புகழப்படும் திருவிழாக் கொண்டருள, வியாக்கிரபாத மகாமுனிவரும், பதஞ்சலி மகாமுனிவரும், இரணியவன்மரும், மூவாயிரம் முனிவர்களும், தெய்வத்தன்மை நிறைந்த சிவபெருமான் பொருந்திய கனகசபையை வணங்கிக்கொண்டு மேன்மையோடு இருந்தனர். இரணியவன்மர் இங்ஙனஞ் செய்த திருநாட்களும் படித்தரங்கள் பலவும் இருக்கப், பின் வந்த அரசர்கள் பலரும் கொண்டாடும் வண்ணம் பல திருநாட்களையும் படித்தரங்களையும் நடத்தினர்கள்.

சொல் உமாதேவியும், பொருள் சிவபெருமானும் ஆக நிச்சயிக்கப்பட்ட திருவருள் இந் நூலின் கண்ணே பொருந்தும்; ஆதலினலே, பொற்றாமரை மலர்களின் மணம் பரந்த சிவகங்கையினல் அலங்கரிக்கப்பட்ட வியாக்கிரபுரம் என்னும் வளத்தையுடைய திருப்பதியைப் புகழும் இந் நூலை வாசிப்பவர்களும்

நூற் பயன்

காதினலே கேட்பவர்களும் பொருள் விரிப்பவர்களும் செல்வத்தை அடைந்தோராவார்கள்; மிக்க அன்பை உடையோராவார்கள்; திருவடிகளை அடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலைகளினால் அலங்கரிக்கப்பட்ட சிதம்பரம் என்னும் வளத்தை யுடைய திருப்பதியிலே செல்வம் தழைக்கக் கடவது; திருச்சபையின்கண்ணே நடித்தருளுகின்ற திருவடிகளிலே பொருந்திய ஒளியைத் தெளியும் ஞானம் சித்திக்கக் கடவது; விபூதியை அணிந்த திருமேனியை உடையவர்களும், திருவடிகள் பொருந்திய தலையை உடையவர்களும், நீர் பொருந்திய இரண்டு கண்களை உடையவர்களுமாகி, அடியேனாகிய எனது துன்பம் நீங்கும்படி ஆண்டருளும் சிவபெருமானது திருத்தொண்டர்கள் வாழக் கடவர்கள்.

கோயிற் கதையமுதைக் கோயிலெனப் பேர்புனைந்து
நாயிற் கடையேன் நவின்றனனால்,—ஆய்வுடையீர்!
அன்புற் றறிவீர்; அவனருளால் ஆனந்த
இன்புற் றமர்வீர் இனிது.

—ஆக்கியோன்.

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள னெல்லாம் பிறங்குக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

—உமாபதிசிவம்.

திருச்சிற்றம்பலம்.

உமாபதி சிவாசாரியர் திருவடி வாழ்க.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பத உரைக் குறிப்பு.

## முதலாங் கதை:-

பக்கம்

2 நாமகரணம் - பெயர் வைத்தல். உபநயனம் - பூணூல் தரித்தல்.

3 சலனம் - அசைவு.

4 கழி - கடற்கரை நிலம்.

5 பிராதக் காலம் - விடியந் காலம். சாக மூல பலம் - இலை, கிழங்கு, பழம்.

7 காமதேனு - தேவப் பசு.

8 உதராக்கினி - பசித் தீ, அவமிருத்து - துன்மரணம். சகனம் - தொடையின் உட்புறம். (கடியின் முற்பக்கம்.

9 மன்று - சம்சார வழக்கொழிக்கும் அம்பலம், அமலம் - இயல்பாகவே பாசத்தில் நீங்கி நிற்றல், சத்து - கால வரையறைப்படாது உள்ளது, உம்பர் - மேலாகிய பொருள், இரண்மயகோசம் - பொன்மயமான கோசம், மகத்து - பெரிது, தனி - சுத்த கேவலம், புண்டரிகம் - பூமிக்கு இருதய தாமரை, குகை - பூமிக்குக் குகை போல்வது, ககனம் - வியாபகமும் சுத்கமுமாகிய பரமாகாசம், சுத்தம் - தூயது, பரம் - எல்லாப் பொருள்களுக்கும் மேல், அற்புதம் - பார்க்கப் பார்க்கப் புதிதாவது, மெய்ப்பதம் - சத்தியத்துக்கு இடம், சுழுனைவழி ஞானசுகோதயம் - சுழுமுனை வழியில் ஞானானந்தம் உதிக்கும் இடம், சிதம்பரம் - சித்தாகிய ஆகாயம். முத்தி - பாசம் நீக்கும் இடம், பரப்பிரமம் - மகாமாயைக்கு மேல், சபை - எக் காலமும் எப் பொருளிலும் விளங்குவது. சத்தி - சிவசத்தி வடிவு. சிவாலயம் - சிவத்துக்கு ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாங் கதை:-

பக்கம்

10 சயனம் - பள்ளிகொள்ளும் இடம், விஷய ஞானம் - உலக அறிவு.

11 கணநாதர் - கணங்களுக்குத் தலைவர்.

12 பொக்கணம் - பை (சோளி), மெல்லியர் - மெல்லிய இயல்பினை உடைய பெண்கள்.

13 அபிநயம் - குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில், பண் - இனிய இசை.

14 விரகம் - காமம், இச்சை - காம விருப்பு.

15 உபவீதம் - பூணூல்.

16 கபாலி - மண்டையோடாகிய பிக்ஷாபாத்திரமுடையவன், அவிசார ஓமம் - கேடு உண்டாக்கச் செய்யப்படும் ஓமம், மௌலி - கிரீடம், சருப்பம் - பாம்பு.

17 குஞ்சி - ஆண் மயிர்.

18 கரணம் - படிந்த ஆடல். கூத்தின் விகற்பம் 15 - அலைப்பு, இலயம், உள்ளாளனம், கடகம், கரணம், குனிப்பு, கூடை, கொந்தளம், சிங்களம், தேசிகம், பவுரி, பிரமரி மலைப்பு, மல், வீரட்டானம், புயங்க கரணம் - ஒருவகை ஆடல், குணலைக் கூத்து-ஒருவகைக் கூத்து, துணங்கை - ஒருவகைக் கூத்து, அது "முடக்கிய இருகை பழுப் புடை ஒற்றத், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பதனுற் பெறப்படும்.

21 சகளம் - உருவம், நிட்களம் - அருவம்.

22 பர பதம் - மேலாய பொருள், பர ஞானம் - மேலாய ஞானம், பராற்பரம் - பரமாகிய சுத்தமாயையின் மேலாயது, பிண்டம் - உடல், அண்டம் - பூவுலகு.

23 அஞ்சலி - கூப்பிய கை, பதஞ்சலி - சேடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாங் கதை:-

பக்கம்

31 பஞ்ச வாத்தியம் - தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக் கருவி, நரம்புக்கருவி, கண்டம்.

32 செறிப்பு - மூரிப்பு, உதரபந்தனம் - கச்சு, (அரைப் பட்டிகை).

33 அதரம் - சொண்டு, திருமங்கலசூத்திரம் - தாலி, நிதம்பம் - அல்குல், பரிவட்டம் - பட்டாடை, பாடகம் - காலணிகளுள் ஒன்று.

34 புயங்க நிருத்தம் - ஒருவகைக் கூத்து.

35 சாரணர் - பதினெண் கணத்தினருள் ஒருசாரார்.

36 சகளம் - அவயவத்தோடு கூடியது (உருவம்), உற்புலுதி கரணம் - ஒருவகை ஆடல்,

37 குடமுழா முதல் - சச்சரி வரை வாத்திய விசேடங்கள்.

40 பரநாத வடிவம் - பிரணவ ஒலிவடிவு, சுட்டுணர்வு - சுட்டறிவு, (புலனால் உணர்வது.)

42 சரு - தேவருணவு, பருந்து படுத்து - கருடன் வடிவாக ஆக்கி, குளிர்ந்த பரிதி - பசுமையான தடி (பலாசு, அரசு, ஆத்தி மா இவற்றுள் ஒன்று.) ஆவாகனம் - தாபனம்.

44 புத்தி - போகம்.

## நான்காங் கதை:-

52 நிருவிகற்பம் - ஒருமை உணர்வு, சவிகற்பம் - ஐம்பேத உணர்வு,

53 வார்த்தகம் - கிழத்தன்மை.

55 பாவில் வருவது ;- மாண் தகு - மாட்சிமைதக்க, துன்பம் மீண்டு கொண்டு - துன்பச் சிறையில் நின்றும் மீட்டுக் கொண்டு. மாயா உடல் - மாயா காரியமாகிய உடம்பு வேதகஞ் செய்து ஆண்ட அம் கணனே - வேறுபடுத்தி ஆட்கொண்டருளிய அருட்கண்ணரே, துன்பு ஆர் - துன்பம் நிறைந்த, திடமிகு மறைகள் - உறுதி மிகுந்த வேதங்கள், [illegible] உண்மைப் பதிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

56 திருப்புலீச்சரம் - வியாக்கிரபாத மகாமுனிவர் தாபித்து வழிபட்ட சிவஸ்தலம், திருவனந்தேச்சுரம் - பதஞ்சலி மகாமுனிவர் தாபித்து வழிபட்ட சிவஸ்தலம்.

60 பரிசன வேதி - பரிசித்தவுடன் வேறுபடுத்துவது, அங்கியம் - வேறுபாடு.

61 கிருத்தியங்கள் - நித்கடன், நீர்க்கடன்.

65 அநுஞ்ஞை - அனுமதி.

66 எழுச்சி முரசு - புறப்படும்படி அடிக்கப்படும் முரசப் பறை.

67 வைதிகாக்கினி - வேத முறைப்படி வளர்க்கப்படும் சிவாக்கினி.

68 சோமன் கட்டிய தண்டு - துணி கட்டிய தடி.

69 விற்கிடை - நான்கு முழ அளவு.

## ஐந்தாங் கதை:-

71 அதிவாச கிருத்தியம் - கிரியை ஆரம்பச் சடங்கில் ஒன்று, வீரகட்கம் - வீர வாள்.

72 சூளிகை - அரமியம் - (நிலா முற்றம்.)

74 தமனகம் - மருக்கொழுந்து, பவித்திரம் - பரிசுத்த மந்திரம்.

75 சிதம்பர தலத்திலே உள்ள தீர்த்தங்கள் :—

சிவகங்கை, குய்ப தீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகசேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்த கூபம்.

நவ தீர்த்தங்கள் :—

கங்கை, யமுனை, கருமலை, சரசுவதி, கோதாவரி, காவிரி, பயோஷ்ணி, சரயு, குமரி.

77 அங்குரார்ப்பணம் - முளைகொள்ளச் செய்தல்.

80 கட்டுவாங்கம் - தண்டு.

82 ஆய்வு உடையீர் - ஆராய்வினை யுடையவர்களே!
பிறக்குக - விளங்குக, தரை - பூவுலகு.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்.

மெய் எழுத்துக்களில் புள்ளி இல்லாத இடங்களுக்குப் புள்ளி இடுக.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 10 | பேல | போல |
| 15 | 5 | மூன | மூன் |
| 18 | 18 | திருதிருத்தம் | திருவிருத்தம் |
| 29 | தலைப்பில் | நடராசர் திருகிருத்தம் | பதஞ்சலிமகாமுனிவர் |
| 51 | 4 | கழிமுகஙகளும் | கழிமுகங்களும் |
| 70 | 3 | சன்மானம் | சமானம் |
| 76 | 3 | நமஸ்கரிப்பகர்கள் | நமஸ்கரிப்பார்கள் |

24 AUG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහජන පුස්තකාලය
කොළඹ
නා: ස:
කොළඹ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

201.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org